# கிராமநலம்

தமிழக அரசு

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறை வெளியிடும் மாத இதழ்

ஜூலை, 1967





## வயல் வளம் வளர்ப்போம்!

"மொத்தத்தில், மிகுபயன்தரும் புதிய வித்துக்களைக் கொண்டு பயிரிடும் திட்டம், 17.4 லட்சம் ஏக்கர் நிலங்களில் நிறைவேற்றப்படும்"...

—திரு சி. என். அண்ணாதுரை

(1967-68ம் ஆண்டு நிதி அறிக்கையிலிருந்து)



தமிழக முதலமைச்சரும் நிதி அமைச்சருமான திரு சி. என். அண்ணாதுரை அவர்கள், 1967-68ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை 17-6-1967 ல் தமிழகச் சட்டப் பேரவையின் முன்வைத்து, உரையாற்றினார்.

“ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே ”


# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 12 ஜூலை 1967 நெல் 10


# சீரணி சிறக்க...

“ பல துறைகளிலும் மக்களின் தேவைகளை இயன்ற அளவு நிறைவேற்றும் வகையில், இவ்வாண்டின் திட்டத்தினை உருவாக்கியிருக்கிறோம். நாட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதா. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும், மட்டும் போதாது. சமூகம் முழுதும் எழுச்சி பெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, புது நிலையினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ளவேண்டும்.

## உறுதியில் விளையும் உழைப்பு

தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட, பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக்கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமையும். “எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்” என்ற உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி.

இந்த ஆர்வம் கொண்டார் பல்லாயிரவர், உளர் என்ற நம்பிக்கையுடன், துவக்க கட்டமாக, மாவட்டத்துக்கு ஆயிரம் பேர் கொண்ட ஒரு ‘சீரணியை’ அமைத்திடும் திட்டத்தை மேற்கொள்ள, அரசு முடிவு செய்திருக்கிறது. இதற்காக, குத்து மதிப்பாகப் பத்து லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் ‘சீரணி’ எந்த விதமான ஊதியமும் பெறாமல், அரசிடமிருந்து தேவையான கருவிகள், செயல்படுமுறைகள் ஆகியவற்றினை மட்டும் பெற்று, ஏரி, குளங்களைச் செப்பனிடுதல், பாதைகளைச் சீர் செய்தல், தரிசுகளை விளை நிலமாக்கிட வழி காணல், முதியோர் கல்வி போன்ற தொண்டுகளில், தனது ஓய்வு நேரத்தை ஈடுபடுத்தும்.

## நாட்டுப் பணியில் நர்ட்டம்

தொழில் நுட்பத் துறையின் பல்வேறு பிரிவைச் சார்ந்த அலுவலர்கள் இச் சீரணிக்கு வேண்டிய முறையில் வழிகாட்டித் துணை செய்வர். துவக்கம் மிக எளிய அளவினதாக இருப்பினும், நாட்டுப் பற்றும், பணியாற்றுவதில் ஆர்வமும் கொண்டோரின் பேராதரவு பெருகிப் பெருகி, இச்சீரணி மிகப் பெரிய வெற்றியினை ஈட்டித் தரும் என்பது எனது நம்பிக்கையாகும்.”

**—முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை.**

*(1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் தேதி தமிழகச் சட்டப் பேரவையிலே வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டினை வெளியிட்டு, ஆற்றிய உரையின் ஒரு பகுதி.)*

---

16—8—1967 *அன்று சென்னை மாவட்டத்தில் சீரணியின் தொடக்க விழா நடைபெறும்.*

# "நிதி நிலையைக் குலையச் செய்யாது முன்னேற்றம் காண்பதே நம் கருத்து"

—முதலமைச்சர்

- விலை ஏற்றம், செலவேற்றம் என்கிற நச்சு வட்டத்தை தகர்த்தெறிய முயற்சி.
- சலுகை விலைகளில் உணவு தானியங்களை வழங்குதல்.
- புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படைத் தீர்வை கிடையாது.
- பஸ் போக்குவரத்தை நாட்டுடைமையாக்கல்.
- வேளாண்மைத் திட்டங்களுக்கு முதலிடம்.
- மிகு பயன் தரும் புதிய வித்துக்களை கொண்டு பயிரிடும் திட்டம் 17·4 லட்சம் ஏக்கர் நிலங்களில் நிறைவேற்றப்படும்.
- தனிப்பட்டோர் மின்சார உரிமங்களை அரசு மேற்கொள்ளும்.
- சிறுபாசனத் திட்டங்களுக்காக 11 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும். கிராம மின்சாரத் திட்டத்திற்காக 6 கோடி ரூபாய்.
- கல்விக்காக 54 கோடி ரூபாய்.
- கலப்புத் திருமணத்திற்கு பொற்பதக்கம்.
- விற்பனைவரி விலக்கு வாம்பு ரூ. 10,000 விருந்து ரூ. 15,000-க்கு உயர்வு.

---

தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள், 1967–68-ம் ஆண்டுக்குரிய வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளை, 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 17-ம் நாள், தமிழக சட்டப் பேரவையின் முன் வைத்து ஆற்றிய உரையின் சுருக்கம்.

இன்றைய அரசின் முறையான முதல் வரவு-செலவுத் திட்டத்தை இப் பேரவையின் முன்னர் வைக்க நான் முன்வந்துள்ளேன். கடந்த மார்ச் திங்களில், நடப்பு ஆண்டிற்கான இடைக்கால வரவு-செலவுத் திட்டம் ஒன்று, இப் பேரவையின்கண் வைக்கப்பட்டதையும், அரசின் செலவினங்கட்காக இவ்வாண்டின் முதல் நான்கு திங்களுக்காக "கணக்கு வாக்கெடுப்பு"ப் பெறப்பட்டதையும் உங்களுக்கு நினைவுறுத்த விரும்புகின்றேன். அவ்விடைக்கால வரவு-செலவுத் திட்டம், அரசின் கடந்த காலப் பொறுப்புகளுக்கிணங்கத் தயாரிக்கப்பட்டது.

இன்றைய அரசு, எந்தப் புதிய வேலைத் திட்டங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றுவதைச் சிறப்பு வாய்ந்ததாகக் கருதுகிறதோ, அவற்றை நமக்குள்ள நிதி வசதிகளுக்கு ஏற்ப, நிறைவேற்றுவான் வேண்டி அவ்விடைக்கால வரவு-செலவுத் திட்டத்தை இப்போது திருத்தியமைத்துள்ளோம்.

**நமது கூட்டாட்சி அமைப்பில் நிதி நிலை வரம்புகள்.**—வரவு-செலவுத் திட்டத்தை, இன்றைய அரசின் குறிக்கோள்களை நிறைவேற்றும் ஒரு கருவியாக விளங்கும் வண்ணம் உருவாக்கும்போது, நமது கூட்டாட்சி அமைப்பில் (Federal set up) எத்தகைய வரம்புகளுக்கு உட்பட்டு மாநில அரசுகள் இயங்கவேண்டியுள்ளன என்பதை நாட்டத்திற் கொள்ளுதல் வேண்டும். அரசியலமைப்பின் விதித்துறைகள் மத்திய அரசுக்கு ஊட்டங்கொடுக்கும் முறையிலே அமைந்திருப்பது ஒருபுறமிருக்க, கடந்த பதினைந்து ஆண்டுகளாக திட்டமிட்ட பொருளாதார அமைப்பின்கீழ் எழுந்த நெறிமுறைகளும், வளர்ந்த மரபுகளும் மாநிலங்களை மெலியச் செய்து மத்திய அரசினை மேலும் வலுவூட்டும் போக்கில் அமைந்துள்ளன. அயல்நாட்டு வாணிபம், நாணயச் செலாவணிக் கொள்கை, கடன் கொள்கை, முதலியன குறித்து, அரசியலமைப்பில் வகை செய்துள்ள அதிகாரங்களின்கீழ், நமது பொருளாதாரம் முழுவதையுமே நெறிப்படுத்தும் பொறுப்பு, மத்திய அரசிற்கே உரியதாக்கப்பட்டுள்ளது. மேலும், அரசியலமைப்பில் குறிப்பிட்டுக் கூறப்படாத எஞ்சிய வரி விதிப்பு அதிகாரங்கள் (Residuary Powers) உட்பட,

நீட்சித் திறன்பெற்ற வருமான இனங்களின்மீது மத்திய அரசிற்குள்ள உரிமை வாய்ப்பின்மூலமும், தேசிய வருமான பெருக்கத்தின் பெருமளவு பங்கினை ஈர்த்துச் செல்லும் நிலைமிலே அது உள்ளது.

இந்நிலைமை காரணமாக மாநிலங்கள் தங்கள் திட்டங்களையும் கொள்கைகளையும் நிறைவேற்றுவதற்கு மத்திய அரசின் விருப்பக் (Discretionary) கடன்களையும், உதவி மானியங்களையும் எதிர்நோக்கி நிற்கும் நிலையில் உள்ளன. பொதுக் கடன்கள் மூலம் மாநில அரசுகள் நிதி திரட்டி, தங்கள் நிதி வளத்தைப் பெருக்கிக் கொள்வதிலும், அரசிய லமைப்பின் 293-வது பிரிவில் தனக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்கள்மூலம் நேரடியாகவும், ரிசர்வ் பாங்கியின்மூலம் மறைமுகமாகவும், அக்கடன்கள் எந்த நிபந்தனைகளுக்கும் வரையறைகட்கும் உட் பட்டுத் திரட்டப்படலாம் என கட்டுப்படுத்தும் உரிமை யுடன் மத்திய அரசு விளங்குகிறது. ஐந்தாண்டு கட்கு ஒரு முறை மாநிலங்களின் நிதித் தேவை களைப்பற்றி நிதிக் குழுக்களின் வாயிலாக நடுவு நிலை யில் நின்று ஆராய வேண்டுமென்கிற ஏற்பாடும், அக் குழுக்களின் ஆய்வு வரம்பு குறித்து விதிக்கப் படும் பல்வேறு வரையறைகள் காரணமாக, மாநிலங் கள் மத்திய அரசினை அண்டி நிற்கும் நிலை பெரு மளவில் குறைந்தபாடில்லை. ஒவ்வொரு நிதிக் குழு வின் தீர்ப்பு வாயிலாகவும், மாநில அரசுக்குக் கூடு தல் நிதி வசதி கிட்டுவது உண்மையே. எனினும், இதற்கிடையே உள்ள காலத்தில் மாநிலங்களுக்கு ஏற்படுகிற புதிய தேவைகளைக் கணக்கில் எடுத்துக் கொள்ள எந்தவிதமான ஏற்பாடுகளும் இல்லாத குறையால், மத்திய அரசிடமிருந்து பெறப்படும் கூடு தல் தொகை இச் செலவினை ஈடு கட்டுவதற்கே போதுமானதாக இல்லை என்பதே மாநிலங்களின் அனுபவமாகும்.

மாநிலங்கள் கவலை தெரிவித்துள்ள மற்றொரு பிரச்சினை, மாநில வரவு-செலவுத் திட்டங்களில் கடன் பொறுப்புகள் மென்மேலும் பெருகிக் கொண்டே போவதே. 1947-ம் ஆண்டு ஆகஸ்ட் 15-ம் நாளன்று, அன்றைய மாகாண அரசுகள் மத்திய அரசுக்குச் செலுத்தவேண்டிய மொத்தக் கடன் 43 கோடியே 97 லட்சம் ரூபாய் மட்டுமே. ஆனால் நடப்பு ஆண் டின் இறுதியில், மாநில அரசுகள் மத்திய அரசுக் குச் செலுத்த வேண்டிய மொத்தக் கடன் தொகை 5,000 கோடி ரூபாய் அளவில் நிற்கும். 1950-ல் இம் மாநிலம் இந்திய அரசிற்குச் செலுத்த வேண் டிய கடன் ஏறக்குறைய 12 கோடியே 30 லட்சம் ரூபாய் அளவில் மட்டுமே இருக்க, இப்போது 300 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்து நிற்கிறது. இந்திய அரசிற்குச் செலுத்தவேண்டிய வட்டித் தொகை 1950–51ல் 41 லட்ச ரூபாயாக இருந்தது; அது இப்போது 14 கோடி ரூபாய்க்குமேல் உயர்ந்துள்ளது. இந்திய அரசிடமிருந்து சட்ட பூர்வமாக நமக்குக் கிட்டும் உதவி, அதன் விருப்ப மானியங்கள் வாயி லாக இந்த அரசு பெறும் உதவி, இவற்றின் பயன் இவ் வட்டித் தொகை உயர்வினால் பெரிதும் கிட்டா மற் போய்விடுகின்றது. மாநில வரவு-செலவுத் திட்டங்களில் வளர்ந்துவரும் இக் கடன் பொறுப்பு, நிதிக் குழுக்களின் நாட்டத்தையும் கவர்ந்துள்ளது. மூன்றும் நிதிக்குழு தனது அறிக்கையின் 100-வது பத்தியில், மாநிலங்கள் தாங்களே எழுப்பும் கடன் களுக்காகவும், இந்திய அரசு வழங்கியுள்ள கடன் களுக்காகவும் அவற்றின்மீது வந்துசேரும் பெரும் வட்டிப்பொறுப்பைப் பற்றிக் குறிப்பிட்டு, "பெரும் பாலான மாநிலங்களில் இவ்வட்டிப் பொறுப்பே அவற்றின் நடப்பு வருமானத்தில் பெரும்பகுதியை விழுங்கிவிடுகிறது. வருங்காலத்தில் இந்நிலை மேலும் சீர்கேடு அடையும்" எனக் கூறியுள்ளது. இக்கூற்று இன்று உண்மையாகிவிட்டது.

## கூட்டு அனுபவமே வழி காட்ட முடியும்

சர்க்கார் நிர்வாகத்தில் கூட்டுக் கோட்பாட்டின் முக்கியத்துவத்தையும், பொது மக்களின் அனுப வத்தைச் சார்ந்திருக்கவேண்டிய அவசியத்தையும் வலியுறுத்தி லெனின் பின் வருமாறு எழுதினர். 'இலட்சக் கணக்கானோரின் கூட்டு அனுபவம்தான் நமக்குத் திட்டவட்டமாக வழிகாட்ட முடியும். நிலப் பிரபுத்வ சமுதாயத்திலும் முதலாளித்துவ சமுதா யத்திலும் வரலாறு சிருஷ்டித்த மேல்தட்டுப் பகுதி யைச் சேர்ந்த பல்லாயிரக் கணக்கானோரின் அனு பவம் மட்டும், சோஷலிசத்தை நிர்மாணிக்கும் நமது பணிக்குப் போதுமானதல்ல.'

"அரசும் ஜனநாயகமும்—லெனின் போதனை"— என்ற நூலிலிருந்து.

இந்த அரசு எந்தக் கொள்கைகளை மக்கள் முன் வைத்து, இம் மாநில ஆட்சியை ஏற்று நடத்தும் பொறுப்பை மேற்கொண்டதோ அக்கொள்கைகளை, இத்தகைய வரையறைகள் இருப்பினும் உளமாரச் செயல்படுத்த முற்பட வேண்டுமென்பதுதான் இந்த அரசின் உறுதியான நம்பிக்கை. மாநில அரசிற்குக் கிட்டுகிற இச் சொற்ப நிதி வசதிகளுக்கும், அதிகாரங் களுக்கும் உட்பட்டே வரவு-செலவுத் திட்டம் ஒன்றைத் தீட்டி, அதன் வாயிலாக இன்றைய நமது பொரு ளாதார நிலையில் இன்றியமையாதவையென நாம் கருதுகிற கொள்கைகளைச் செயல்படுத்த நாங்கள் முயற்சி செய்துள்ளோம். கடந்த பத்தாண்டுகளாக, பெரிய வளர்ச்சிப் பணிகளுக்காகப் பெருத்த அளவில் செய்யப்படும் முதலீடுகளுக்கு மேல் ஏராளமான ராணுவச் செலவினங்களும் சுமத்தப்பட்டதன் காரண மாக, குறிப்பாக 1962–63 முதல் விலைவாசிகள் நஞ்சுபோல் ஏறிவந்துள்ளன. இதுவே இந்தியப் பொருளாதாரத்தின் இன்றைய அடிப்படைக் குறை பாடாகும். நமது சமுதாயத்தின் பெரும் பகுதியின ருக்கு குறிப்பாக, அரசு ஊழியர்கள், முறையான

தொழில் நிறுவனப் பணியாளர்கள், பண்ணையாட்கள் போன்றவர்களுக்கு விலைவாசிகளின் கூரிய ஏற்றமே பெரும் இன்னலை விளைவித்துள்ளது.

அனைத்திந்திய மொத்த விற்பனை விலைக்குறியீட்டு எண் 1964–65ல் 8·7 சத வீதமும், 1965–66ல் 15·2 சத வீதமும், 1966–67ல் 16·5 சத வீதமும் உயர்ந்து வந்துள்ளது. உணவுப் பொருட்கள் குறித்த இக் குறியீட்டு எண் 1964–65ல் 9 சத வீதமாகவும், 1965–66ல் 14·1 சத வீதமாகவும், 1966–67ல் 24·1 சத வீதமாகவும் உயர்ந்தது.

உணவுப் பண்டங்களின் விலைவாசிகள் உயர்ந்த தால், தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பொருள் களின் உற்பத்திச் செலவுகளும், ஊதிய உயர்வு, அகவிலைப்படி உயர்வு போன்ற ஏனைய வடிவங்களின் வாயிலாக மேலும் உயர்ந்தன. விலைக் கட்டுப் பாட்டுக்குட்பட்ட பண்டங்கள் குறித்தும் அவற்றின் உற்பத்திச் செலவுகள் மிக அதிகரித்ததால், அவற் றின் விலைவாசிகளையும் அரசு உயர்த்த வேண்டி வந்தது. விலைக் கட்டுப்பாட்டிற்குட்பட்ட சில துணி ரகங்களின் விலைகளை, 1966 செப்டம்பரில் 6 சத வீத அளவிலும், 1967 ஏப்ரலில் மீண்டும் 4·5 சத வீத அளவிலும் உயர்த்த மத்திய அரசு ஒப்புக்கொள்ள வேண்டியிருந்ததை இம் மன்றம் உணர்ந்திருக்கு மென நினைக்கின்றேன். மற்றும், உருக்கு, சர்க்கரை இவற்றின் விலைகளையும் உயர்த்த வேண்டிவந்தது. விலைவாசிகளின் உயர்வால் அரசிற்கு ஏதோ கூடுதல் வருவாய் கிட்டினாலும், அகவிலைப்படி உயர்வுபோன்ற இனங்களின்கீழ் அதிகச் செலவுகள் நேரிடுகின்றன. இச் செலவினங்களின் விளைவாக, ஆதாயம் பெரிதும் அடையக்கூடிய திட்டங்களுக்குச் செய்யும் முதலீடு குறைக்கப்பட வேண்டியிருப்பதால், பொருளாதார வளர்ச்சி வீதம் குறைகிறது. உணவுப் பொருள் களின் விலைகள் உயர்வதால், ஏழை மக்கள், நடுத்தர வகுப்பினர் ஆகியோரின் வாங்கும் ஆற்றலும் குன்றிவிடுகிறது. நமது பெரிய தொழில்கள் சில வற்றில், தொழில் மந்தமும் வேலையின்மையும் தோன்றுவதற்கு, உணவு தானிய விலைவாசிகள் ஏறுமுகமாயிருப்பதையே ஏற்றதொரு காரணமாகக் காட்டலாம்.

பத்திப் பெருக்கத்தின் வாயிலாகவே நாளாவட்டத் தில் விலைவாசிச் சிக்கலைத் தீர்க்க முடியும் என்பதும், எனவே உற்பத்திப் பெருக்கத்திற்கான ஏற்பாடுகளில் நமது நாட்டத்தைச் செலுத்த வேண்டுமென்பதும் நாம் அறியாததை அல்ல. ஆனால், இந்த நீண்ட காலத் திட்டங்கள் நல்ல பயனளித்து, அவை இன் றைய நம் இடும்பை தீர, நிலையான தீர்வு ஒன்றைக் காட்டும்வரை நம்மால் பொறுத்திருக்க இயலாது. உணவுப் பண்டங்களின் விலைவாசிச் சிக்கலைத் தீர்க்க நாம் உறுதியோடு இன்றே, இன்னே செயல்பட வேண்டும். அப்போதுதான் விலைவாசி ஏற்றத்தால் ஆற்றாது அல்லற்படும் மக்களுக்கு அவர்கள் ஏங்கித் தவிக்கும் துயர் தணிப்பு உடனடியாகக் கிட்டும். அத்துடன் விலையேற்றம், செலவேற்றம் என்கிற இந்த நச்சு வட்டத்தின் உயிர்நாடியையும் தகர்த்தெறிய முடியும். தானாகவே நிலைத்துவிடும் இயல்பு வாய்ந்த இன்றைய பணவீக்க மனோவியலை, இத் தகைய துணிச்சலான கொள்கையின் துணைகொண்டே கடக்க முடியும்.

கடந்த மூன்று திங்களாக, உணவு விலைகளைக் குறைக்கும் வகையிலே எங்ஙனம் செம்மையான ஏற் பாடு ஒன்றைத் தொடங்கலாமென்றும் அதன் பய னாய் நிகழ்ச்சிகள் தொடர்ந்து விளையும் வகையிலே எவ்வாறு அது அமைய வேண்டும் என்பது குறித் தும் அரசு ஆலோசித்து வந்துள்ளது. உணவு தானி யக் கொள்முதலை முழுமுரப்படுத்துவதன் மூலம், சட்ட பூர்வமாகவோ, அன்றி முறைப்படியின்றியோ உணவு தானியப் பங்கீட்டுப் பொறுப்பினை அரசு ஏற்றுக் கொண்ட பகுதிகளில், கட்டுப்பாட்டிற்குட்பட்ட பங்கீட்டுக் கடைகளின் வாயிலாக உணவுத் தானியங்கள் தங்கு தடையின்றிக் கிடைக்கும் வகையில் கொள்முதல் முழுமுரப்படுத்தப்பட வேண்டுமென்பதே அரசு மேற் கொண்ட முதல் பெரிய கொள்கை முடிவாகும்.

உணவு தானியப் பதுக்கலையும் கள்ளக் கடத்தலை யும் ஒடுக்க முழுமுர நடவடிக்கை மேற்கொண்டதால், நடந்துபோன நாட்களிலே, கழிந்துபோன இழப்பினை எங்களால் மீண்டும் சரிக்கட்ட முடிந்து, கொள்முதல் திட்டத்தைப் பெருமளவு வெற்றிகரமாய் முடித்திருக்

## நச்சு வட்டத்தின் உயிர்நாடியைத் தகர்த்தெறிவோம்

புத்துயிரும் புது மெருகும் பெற்று மிளிரும் புதியதோர் பொருளாதார அமைப்புக்கு உண வுப் பொருள்களின் விலைவாசிக் குறைப்பே திறவு கோலாக அமையுமென்பது இவ்வரசின் அழுத்தமான கருத்தாகும். வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கு வதன் மூலம் நாளடைவில் விலைவாசிகளின் உயர் வைக் குறைத்து விடலாம் என்றும், இதற்குமுன் என்றுமே இல்லாவகையில் கடந்த இரண்டு ஆண்டுக ளாக நிலவிய வறட்சியே விலை உயர்வுக்குக் காரண மென்றும் பேசுவது பயனற்ற வாதமாகும். உற்

கிறோம். உழவர்களுக்கு அதிக இன்னல் இழைக்காம லும், "கோல் கொடியது" என்று கடுமையாகக் குறை கூற இடங் கொடுக்காமலும், 5 லட்சம் டன் உணவு தானியங்களைக் கொள்முதல் செய்ய முடிந்தது என்றால், பொது மக்கள் எவ்வளவு ஆர்வத்துடன் அரசுடன் ஒத்துழைத்திருக்கிறார்கள் என்பதற்கு அது ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகத் திகழ்கிறது என்றே நான் கருதுகிறேன். சட்டபூர்வமான பங்கீட்டுப் பகுதி களில் உள்ள 31 லட்சம் மக்களும், முறைப்படியற்ற

(informal) பங்கீட்டுப் பகுதிகளிலுள்ள 1,23 லட்சம் மக்களும் இன்று ஒழுங்காக உணவு தானியங்களைப் பெற்று வருகின்றனர். வெளிச் சந்தையில் உணவு தானிய விலைகள் கட்டுக்கு மீறிப் போகாமலிருக்கவும் இது உதவியிருக்கிறது.

கட்டுப்பாட்டுக் கடைகளின் வாயிலாக உணவு தானியங்கள் வழங்குவதை உறுதிப்படுத்தியதால், உணவு தானிய விலைகளைக் கணிசமாய்க் குறைப்பதற்கான அடுத்த முக்கிய நடவடிக்கையை அரசு மேற்கொள்ள முடிந்தது. உணவு தானிய உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய விலைகளைக் குறைக்காமல், இயன்ற விரைவில் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி பேருவதாக நாங்கள் அளித்த வாக்குறுதியை, அரசு நிறைவேற்றுமென கடந்த கூட்டத் தொடரிலேயே நான் குறிப்பிட்டிருந்தேன். இக் கூற்றை வாய்மையாக்கும் வகையில், சட்ட பூர்வமான பங்கீட்டுப் பகுதிகளான சென்னையிலும், கோவையிலும் பட்டினம் படி அரிசி ஒரு ரூபாய்க்கு வழங்கத் தொடங்கியுள்ளோம். முப்பத்தோரு லட்சம் மக்கள் இப்போது இத் திட்டத்தினால் பலன் துய்க்கின்றனர். இத் திட்டம், உணவு தானிய வழங்கல் பொறுப்பினை அரசு மேற்கொண்டுள்ள பிற பகுதிகளுக்கும், உணவு தானிய இருப்புக்களைப் பொறுத்தும், வெளிச் சந்தையில் விலைவாசிகளின் போக்கினை ஒட்டியும், படிப்படியாக நீட்டிக்கப்படும். நடப்பு ஆண்டில் இத் திட்டத்தின் காரணமாக ஏற்படும் நிதிப் பொறுப்பு, 5 கோடி ரூபாய் அளவில் இருக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கிணங்க "124. அரசு வாணிபம்" என்ற தலைப்பில் நிதி ஒதுக்கம் வேண்டப்பட்டுள்ளது. அரசு உணவு தானிய இருப்புகளை வாங்கும் விலைகளும், அவற்றை அரைத்தல் போன்ற ஏனைய செலவுகளும் உணவு தானிய இருப்புகளைப் பற்பல நிலைகளில் கையாளுவதற்காகும் செலவுகளும் சேர்ந்த அடக்க விலைக்கும், பட்டினம் படி ஒரு ரூபாயென மக்களுக்கு வழங்கும் விலைக்கும் உள்ள வேறுபாட்டினை "உணவு தானியங்களில் அரசு வாணிபம்" என்கிற தலைப்பின் கீழ் நிகர செலவாகக் காட்டப்பட்டு, பின்னால் வருமானக் கணக்கில் பற்றாக எழுதப்படும். உணவு தானியங்களைப் பற்பல நிலைகளில் கையாளுவதற்கென இப்போது அனுமதிக்கப்படும் செலவுகள் குறித்து ஆய்வு செய்வதன் மூலம், இதற்கென வழங்கப்பெறும் உதவித்தொகையின் சுமையை ஓரளவுக்குக் குறைக்க முடியுமென்றும் அரசு நம்புகிறது.

சலுகை விலைகளில் உணவு தானியங்களை வழங்குவதால் நீண்டகாலமாக, விலைவாசி உயர்வுச் சுமையால் அவதியுறும் பெரும்பாலான மக்களுக்கும் ஆறுதல் கிட்டும்; மேலும், மற்றேதும் இடையில் நிகழாமலிருப்பின், ஏனைய பொருள்களின் விலைவாசிகளும் பணிச் செலவுகளும் உயராமல் தடுக்கவும் இது உதவியாயிருக்கும். ஒருபால் கோடாது, பற்பல மாநிலங்களுக்கு இடையே சம நிலையில் சலுகைகள் வழங்கவேண்டிய அவசியத்தைக் கருதியாவது, மத்திய அரசு, உணவு தானியக் கொள்முதல் விலைகட்கும் அவற்றின் விற்பனை விலைகட்கும் இடையேயுள்ள வேறுபாட்டினை உதவித் தொகையாக வழங்கும் மாநிலங்களுக்கு ஓரளவு உதவியளிக்க முன்வந்திருக்கவேண்டும்.

## சமூகநீதி அடிப்படையில் ஏழை, எளிய விவசாயிகளுக்கு நிலவரி குறைப்பு

இம் மன்றத்தின் முன் வரவு-செலவுத் திட்டத்தை வைக்கும்போது அறிவிப்பதாக நான் வாக்களித்திருந்த மற்றொரு பெரிய கொள்கை முடிவு, நிலவரியின் எதிர்காலம் பற்றியதாகும். ஆட்சிப் பொறுப்பிலே இன்று அமர்ந்திருப்பவர்கள் எதிர்க்கட்சி அணியிலே வீற்றிருந்த காலத்தும், நிலவரிக் கொடுமைகளினின்றும் மக்களுக்கு உதவி அளிக்க வேண்டிய அவசியத்தைப் பற்றி அரசின் நாட்டத்தை ஈர்ப்பதில் முன் நின்றார்கள். இன்றைய அரசின் கொள்கை விளக்கம் குறித்து முதன் முதலாகத் தெரிவித்த கவர்னர் பேருரையிலும், சிறு நிலக்கிழார்களுக்குப் பரிகாரம் அளிப்பதற்கான படிப் படியான திட்டம் ஒன்றை உருவாக்கப் போவதாக நாங்கள் தெரிவித்திருந்தோம். வரி குறைப்பு முறையாயினும், வசதியளிப்புத் திட்டமாயினும், சலுகைகள் தரும் முறையாயினும் சமூகத்தில் குறைந்த வருவாய்த் துறையினரின் நலிவினைப் போக்கும் நோக்குடன் அமைத்திடுவதே சரியான சமூக நீதி என இந்த அரசு திட்டமாகக் கருதுகிறது. தாங்கக்கூடிய தரத்தில் உள்ளவர்களுக்கும் சேர்த்து சமத்துவமாக இத்தகைய சலுகைகள் தந்திடுவது பொருளற்ற போக்காகும். வசதி நிலையில் உள்ளோர், நாட்டின் பொது நலனுக்காகவும், நலிந்த வாழ்வினரின் நலனுக்காகவும் அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்காகும் செலவுத் தொகையில் ஒரு கணிசமான பகுதியைத் தந்துதவும் பொறுப்பை மேற்கொள்வதை, "பாரம்" என்று கருதாது, "அறம்"—"பொறுப்பு" என்று கருதிட வேண்டுகிறேன். நல்லோர் அங்ஙனமே கருதுகின்றனர். நிலவரி நீக்கம் பற்றிய அதன் எல்லாக் கூறுகளையும் ஆராய்வதற்கென முந்தைய அரசு நியமித்த சிறப்பு அலுவலரின் பரிவுரைகளையொட்டி நடப்பு ஆண்டில் தனக்குள்ள இடர் மிகுந்த வரவு-செலவுத் திட்டச் சிக்கல்களிடையிலும், தங்கள் கொள்கையை எந்த அளவிற்குத் திறம்படச் செயல்படுத்தலாம் என்பது குறித்து அரசு ஆலோசனை செய்தது.

நன்செய் நிலமெனப் பதிவாகியுள்ள நிலங்களைப் பொறுத்த மட்டில், இதில் சிக்கல் மலிந்திருப்பதால், இதனை நன்கு ஆராய்ந்து எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவாக அரசிற்கு ஓர் அறிக்கை அனுப்புவதற்காக வல்லுநர் குழு ஒன்றை அமைக்க அரசு

(13-ம் பக்கம் பார்க்க)

# "ஊராட்சி மன்றங்களைச் சீராக்கிச் செப்பனிடுவதே நோக்கம்— அழிப்பதோ, மாற்றுவதோ அல்ல"

தமிழகத்தில் இன்று செயல்படும் உள்ளாட்சி நிறுவனங்கள் —

12,881 ஊராட்சி மன்றங்கள்
438 பேரூராட்சி மன்றங்கள்
374 ஊராட்சி ஒன்றியங்கள்
14 நகர்க்குழு மன்றங்கள்
88 நகராட்சிகள்
சென்னை மாநகராட்சி

"உள்ளாட்சி மன்றங்கள்—காய்தல் உவத்தல் அகற்றி, கட்சி மாச்சரியங்களை மறந்து, அனைவரும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்னும் உணர்வோடு, செயலாற்ற வேண்டும்.

* * *

"உள்ளாட்சித் துறையில் பணியாற்றும் அலுவலர்கள், அரசுக்கும் பொதுமக்களுக்கும் இடையில், நல் தூதுவர்களாக விளங்க வேண்டும்".

* * *

"இத் துறையின் பல்வேறு விபரங்களையெல்லாம் கணக்கில் கொண்டு பார்க்குமளவில், ஊழியர்களுக்குச் செலவு செய்யப்படுவது, மொத்தச் செலவில் 10 சதவிகிதம் ஆகும்.

* * *

"நாட்டாட்சிக்கு நல்ல அடித்தளங்களாக விளங்கும் இவற்றில் காணப்படும் குறைபாடுகளை அகற்றி, சீராக்கிச் செப்பனிட வேண்டுமென்பதுதான், இந்த அரசின் விருப்பமே தவிர, இவற்றை அழித்துவிட வேண்டும் அல்லது மாற்றிவிட வேண்டும் என்பதல்ல."

* * *

"கதர் திட்டத்தினுல் சுமார் 1,09,862 நூற்பாளர்களும், நெசவாளர்களும் பயனடைகின்றனர்."

* * *

"கிராமத் தொழில்கள் வாயிலாக சென்ற ஆண்டு 2,57,368 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது."

* * *

"தியாக உணர்வோடு அரசுடன் ஒத்துழைத்து முன்னேறுவோம்."
—மாண்புமிகு திரு மா. முத்துசாமி

திரு மா. முத்துசாமி,
*உள்ளாட்சித் துறை அமைச்சர்*



## சட்ட மாமன்றத்தில், மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள், 13-7-1967-லே வெளியிட்ட கொள்கை விவர அறிக்கையின் முழு விவரம் :

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே,

[மேன்மைமிகு கவர்னர் அவர்களின் பரிவுரைப்படி கோரிக்கை எண் XXIII—சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், நாட்டு வளர்ச்சிப் பணித் திட்டங்கள், தல மேம்பாட்டுப் பணிகள் என்பவற்றின் கீழ், ரூ. 6,61,20,700, கோரிக்கை எண் XXIX—பொதுப் பணிகள்—உதவி மானியங்கள் என்ற கோரிக்கைகளுக்கு ரூ. 2,77,96,600 அனுமதி அளிக்க வேண்டுமென்று நான் முன்மொழிகின்றேன்....]

"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்
மடிதற்றுத் தான்முந் துறும்" என்னும்

திருக்குறளின் வழி நின்று குடி தழீஇக் கோலோச்சிய முடியுடை மூவேந்தர் காலம் தொட்டே கிராமக் குடியாட்சி முறை கண்டவர்கள் நாம்! குடவோலை முறைப்படித் தேர்வு பெற்ற கொள்கைச் சான்றோர்கள், கிராமத் தன்னாட்சி நடத்தி முன்னேற்றம் சண்டனர் என்பதைத் தென்னக வரலாறு தெளிவாகத் தெரிவிக்கின்றது. உத்திர மேரூர் சாசனங்களும், கல்வெட்டுக்களும் இதனை உறுதிப் படுத்துகின்றன. காலச் சக்கரத்தின் வேகச் சுழற்சியில் ஏற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாறுபாடுகளின் விளைவாக மாற்றங்கள் பல நிகழ்ந்து ஊராட்சிகளின் புகழ் மங்கத் தலைப்பட்டது.

விடுதலை பெற்ற நாட்டின் வேகமான வளர்ச்சிக்குக் கிராம முன்னேற்றமே அடிப்படை என்பதை அறிந்த அண்ணல் காந்தியார் அதனை மிகவும் வலியுறுத்தினார்கள். ஆன்றோர் பலரும் அதனை வரவேற்றனர். ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், நகராட்சிகளும், பேராட்சியின் கேந்திர மையங்கள் என்பதை உணரத் தலைப்பட்டதால் அவற்றை அமைக்கவும், அமைத்தவற்றை விரிவாக்கவுமான பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

சமுதாய வளர்ச்சிக்குச் சாதகமாகத் தமிழகத்தில் இன்று 12,881 ஊராட்சி மன்றங்களும், 438 பேரூராட்சி மன்றங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும், 14 நகர்க் குழு மன்றங்களும், 88 நகராட்சிகளும், சென்னை மாநகராட்சி மன்றமும் சிறப்புறச் செயல்பட்டு வருகின்றன.

நாட்டாட்சிக்கு நல்ல அடித்தளங்களாக விளங்கும் இவற்றில் காணப்படும் குறைபாடுகளை அகற்றி, சீராக்கிச் செப்பனிட வேண்டுமென்பதுதான் இந்த அரசின் விருப்பமே தவிர இவற்றை அழித்துவிட வேண்டும் அல்லது மாற்றி விட வேண்டும் என்பதல்ல என்பதை இம் மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

இந்த மானியத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 6,61,20,700 மானியம் கோரியிருப்பினும், மொத்தமாக, சமுதாய வளர்ச்சிக்காக, ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக 52 கோடியே 70 இலட்சம் செலவாகுமென்று இந்த ஆண்டு கணக்கிடப்பட்டிருக்கிறது. இது தமிழ் நாட்டின், இந்த ஆண்டிற்கான மொத்த நிதித் தொகையில் 24 சத வீதம் ஆகும். இதில் மிகவும் முக்கியமான பிரிவு ஆரம்பக் கல்விக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் ரூ. 21,23,00,000 ஆகும். ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செலவிடப்படும் தொகையில் இது 40·5 சத விகிதம் ஆகும்.

ஊழியர்களுக்காகச் செலவிடப்படுவது 10 சத விகிதமே.

இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டங்களின்கீழ்ப் பணிபுரியும் அரசாங்க ஊழியர்களின் ஊதியம் ரூ. 4,20,00,000 ஆகும். அதாவது மொத்தச் செலவில் இது 8 சத விகிதமாகும். அரசாங்க மானியத்தைத் தவிர, ஊராட்சிகளின் வரிகளின் மூலம் வசூல் செய்வதையும் சேர்த்தால், மொத்தச் செலவு ரூ. 55,79,00,000 ஆகும். ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் நிதியிலிருந்து அவர்களது சிற்சில ஊழியர்களுக்காகக் கொடுக்கப்படும் மொத்த ஊதியம் ரூபாய் 1 கோடியே 50 ஆயிரம். இவற்றையெல்லாம் கணக்கில் கொண்டு பார்க்குமளவில் ஊழியர்களுக்காகச் செலவு செய்யப்படுவது மொத்தச் செலவில் 10 சதவிகிதம் ஆகும்.

இவ்வரசின் கீழுள்ள எல்லா ஊராட்சிகளும் தலத் தீர்வை மேல் வரியில் (Local cess surcharge) தங்கள் வருவாயை பெருக்கிக்கொண்டுள்ளன. தலத் தீர்வை மேல்வரிக்கு அரசினர் கொடுக்கும் இணை மானியம் சென்ற ஆறு ஆண்டுகளில் ரூபாய் 85·24 இலட்சத்திலிருந்து நடப்பு ஆண்டில் ரூ. 200 இலட்சமாக அதிகரித்துள்ளது. இவற்றால் நாம் அறிவதெல்லாம் ஊராட்சி ஒன்றியங்கள் இந்த 6 ஆண்டுகளில் ரூ. 115 இலட்சத்துக்கு குறையாமல் வரிகளின் மூலம் நிதி திரட்டியிருக்கின்றன என்பதுதான். அம்மாதிரியே தமிழக உள்ளாட்சி மன்றங்கள், கேளிக்கை வரியின் மீது மேல்வரியும், காட்சி வரியின் மீது மேல்வரியும் விதித்துத் தன்னுடைய வருமானத்தைக் கிட்டத்தட்ட நான்கு மடங்காகப் பெருக்கிக்கொண்டன.

ஊருக்குத் தேவையான ஒளியமைத்தல், நல்ல வழியமைத்தல், பள்ளியமைத்தல், பாலம் அமைத்தல், பாசன வசதி அளித்தல், மருத்துவ உதவி அளித்தல், மனமகிழ் மன்றம் அமைத்தல், குடி தண்ணீர் வசதி அளித்தல்—வானொலி நிலையம் அமைத்தல்—விதையளித்தல்—நல்ல உரம் அளித்தல்—உழவர்க்குத் தேவையான உதவியளித்தல்—போன்ற பணிகளை உள்ளடக்கி உள்ளவைதான் ஊராட்சி ஒன்றியங்களாகும்.

தமிழ்நாடு முழுவதும் ஆரம்பக் கல்வியை சமுதாய வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கொண்டு வந்தது ஒரு மாபெரும் சாதனையாகும். சென்ற ஆண்டு தமிழ்நாட்டில் 22,401 தொடக்கப் பள்ளிகளும், 4,991 உயர் தொடக்கப் பள்ளிகளும் இருந்தன. பள்ளிகட்கென 10,900 புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டுள்ளன. 1,09,616 ஆசிரியர்கள், 35½ இலட்சம் சிறுவர்களுக்குக் கல்வி பயிற்றுவித்தனர். இவ்வெண்ணிக்கை ஆண்டுதோறும் அதிகமாகுமென்பதில் ஐயமில்லை. இவ்வாண்டில் கிராமப் பணிகள் திட்டத்திற்கென 273·32 இலட்சம் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. 1966 டிசம்பர் 31-ந் தேதி முடிய 2,512 மேல்நிலை நீர்த் தொட்டிகள், 47,200 குடிநீர்க் கிணறுகள், 22,000 மைல்களுக்கும் மேற்பட்ட இணைப்புச் சாலைகள் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. பாதைப் பராமரிப்புக்கென ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திற்கும் 'சாலைகள் மானியம்' தனியாகத் தரப்படுகிறது. ஊராட்சி சிறுபாசனத் திட்டங்களைப் பொறுத்தவரை, இம் மாநிலத்தில் சுமார் 29,000 சிறு பாசன ஆதாரங்கள் உள்ளன. இவற்றில் சுமார்

**உள்ளாட்சி அமைச்சரின் விளக்கம்**

**23,275 ஆதாரங்களைப் பேணி வரும் பொறுப்பு ஊராட்சி ஒன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. இதற்காகத் "தல பாசன மானியம்" என்ற தலைப்பின்கீழ் இவ்வாண்டு ரூ. 50,00,000 ஒதுக்கப்பட்டிருக்கிறது.**

**உணவு உற்பத்திக்கு ஊக்கமளிக்கப் புதிய திட்டங்கள்**

வேளாண்மை உற்பத்தியை அதிகரிக்கும் பணிக்கு முதலிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான்காவது ஐந்தாண்டு திட்டத்திற்கான பணிகள் ஊராட்சி ஒன்றியங்களுடன் கலந்தாலோசித்து வகுக்கப்பட்டன. வேளாண்மைத் திட்டத்திற்காக அரசாங்க மானியம் கொடுப்பதற்கு அந்தந்தப் பகுதிகளுக்குரிய நிலைமைகளுக்கேற்பத் திட்டங்கள், "இன்றியமையாதவை", "விருப்பத் திட்டங்கள்" என இரு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இவை தவிர, 'குறிப்பிட்ட பகுதிகளுக்கான வேலைகள்' என்பதன் கீழும் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதுபோன்றே மீனள வளர்ச்சிக்காகத் தமிழ் நாட்டில் உள்ள ஒன்றியங்கள் நான்கு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனால் மீனளத் திட்டங்கள் நன்கு செயல்படுத்தப்படுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

மத்திய அரசின் உதவியுடன் செயல்படுத்தப்படும் 'கிராம மனித உழைப்புத் திட்டம்' 72 வட்டாரங்களில் செயல்படுத்தப்படுகிறது. வேளாண்மையில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வேளாண்மை இல்லாத காலங்களில், இத்திட்டத்தின்கீழ் வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் ஓர் இலட்சம் ரூபாய்வரை செலவு செய்யலாமென சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் சிறுவர் நிதி உதவியுடன் (UNICEF) சத்துணவுத் திட்டம் 9 வட்டாரங்களில் நிறைவேற்றப்பட்டு வருகின்றது, இவற்றின்கீழ்ப் பள்ளித் தோட்டங்கள், சமுதாயத் தோட்டங்கள், கோழி வளர்ப்புப் பண்ணைகள், மீன் வளர்ப்பு ஏரிகள் ஆகியவற்றை ஏற்படுத்திப் பேணி வருவதற்காக ஊராட்சிகளுக்கு நிதி உதவியும் வழங்கப்படுகின்றது. இதிலிருந்து கிடைக்கும் பொருள்கள், தாய்மார்களுக்கும், இளம் சிறுர்களுக்கும் கொடுக்கப்படுகின்றன.

மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக மத்திய அரசு உதவியுடன் தனித் திட்டம் ஒன்று கொல்லிமலை வட்டாரத்திலும், ஏர்க்காடு வட்டாரத்திலும் நடைபெற்று வருகிறது. இதை இவ்வாண்டு தென் ஆற்காடு மாவட்டத்திலுள்ள கல்ராயன் குன்று வட்டாரத்திலும் செயற்படுத்தி விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

சட்டப் பேரவையின் தனிக் கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது என்னவென்றால், 88 நகராட்சிகளுக்கு, 1964-65-ஆம் ஆண்டு ஏறக்குறைய வருமானம் 11,50,00,000 ரூபாய். வீட்டு வரியாக எல்லா நகராட்சிகளிலிருந்தும் 4 கோடி ரூபாய் வசூலித்திருக்கிறார்கள். கேளிக்கை வரியிலிருந்து அவர்களுக்கு வந்த வருமானம் 2 கோடியாகும். இதர வருமானம் 105 இலட்சம் ரூபாய். சுகாதார வசதிக்காக வசூலிக்கப்பட்டது 60 இலட்சம் ரூபாய். நாளங்காடி, லாரி, பேருந்து நிலையம் ஆகியவைகளிலிருந்து 150 இலட்சம். தண்ணீர் வரியாக 40 இலட்சம் ரூபாய். இவை எல்லாம் சேர்ந்து ஏறக்குறைய 9,55,00,000 ரூபாய் ஆகும். இது அல்லாமல் அரசாங்கத்திடமிருந்து மானியமாகவும், கடனாகவும் இந்த ஆண்டில் 195 இலட்சம் ரூபாய் பெற்றிருக்கிறார்கள்.

இந்த வருமானத்திலிருந்து எல்லா நகராட்சிகளும் சேர்ந்து 270 இலட்சம் ரூபாய் முதலீடு செய்திருக்கின்றன. ஆண்டு நடைமுறைச் செலவிற்கு 845 இலட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். மொத்தமாக 11,15,00,000 ரூபாய் செலவழித்திருக்கிறார்கள்,

பொதுவாக நோக்குமிடத்து உள்ளாட்சி மன்றங்கள் அனைத்தும் ஓரளவு தம் பணிகளைத் திறம்படச் செய்துள்ளன என்றே கூறலாம்.

எனினும் இவைகள் ஆற்றியுள்ள பணிகளைவிட ஆற்ற வேண்டிய பணிகள் பலப்பல; இவற்றையெல்லாம் நிறைவேற்றப் பெரும் நிதி தேவைப்படுகிறது. இதற்கெனக் கிடைத்து வந்த மத்திய உதவி நாளுக்கு நாள் குறைந்து வருவதும், நான்காவது திட்டத்தில் வெட்டுச் செய்திருப்பதும் நமக்குக் கவலையளிப்பதாக இருக்கிறது. இவற்றின் இன்றியமையாமையை எடுத்துரைத்து, வாதாடி, வேண்டிய நிதியைப் பெற இம்மாமன்றம் ஒருமனதாக முயல வேண்டும் என்பதைப் பணிவன்புடன் கவனப்படுத்த விரும்புகிறேன்.

(17-ம் பக்கம் பார்க்க)

**உரமும் விதைகளும் இனி கிராமங்களிலேயே கிடைக்கும்.**

---

**கிராம நல ஊழியர்கள் மூலம் வழங்க ஏற்பாடு**

விதைகள், பூச்சி மருந்துகளை விவசாயிகள் இனி தங்களது கிராமங்களிலேயே, உரிய காலத்தில், கிராம சேவக்குகளிடமிருந்து வாங்கிக்கொள்ளலாம்.

ஒவ்வொரு கிராமசேவக்கிடமும் ரூ. 250 மதிப்புள்ள விதைகளும் உரவகைகளும் ஒப்படைக்கப்படும். இவற்றைக் கிராமசேவக்குகள் விற்பனை செய்தவுடன், அவர்களுக்கு மேலும் ரூ. 250 வரை உரங்கள், விதைகள் அளிக்கப்படும். இந்த முறையினால் விவசாயிகள் தங்களது தேவைகளை கிராம சேவக்குகளிடமிருந்தே பெற்றுக்கொள்ள தமிழக அரசு, விவசாயத்துறை வாயிலாக, ஏற்பாடு செய்துள்ளது.

# கிராம வானொலி மன்றங்களின் தொண்டு

(திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்., *கிராம வளர்ச்சி நெறியாளர்.*)

[கிராம வாசிகளிடையே பண்ணை உற்பத்தியைப் பெருக்கவும், குடும்ப நல் வாழ்வைப் பேணவும் பண்ணைச் செய்தி (Farm and Home Broad Casts) என்னும் புதிய திட்டம் 1966 ம் ஆண்டு ஜூன் மாதம் 7–ஆம் தேதியன்று, திருச்சி வானொலி நிலையத்தின் வாயிலாக தமிழகத்தில் தொடங்கப்பெற்றது.

இத்திட்டத்தின் முதலாண்டு நிறைவு விழா தஞ்சாவூர் மாவட்டத்தில், செம்பொனூர் கோவிலில் நடைபெற்றது. விவசாய அமைச்சர் திரு. கோவிந்தசாமி அவர்கள் தலைமை வகித்தார். விவசாய நெறியாளர் திரு. கா. திரவியம், திருச்சி வானொலி நிலைய நெறியாளர் திரு. எம். எஸ். கோபால், பாராளுமன்ற உறுப்பினர் திரு. கே. சுப்ரவேலு ஆகியோர் மக்களுக்கு வானொலி பயன்படும் வழி வகைகளை எடுத்துக் கூறினர். காலை, மாயூரம் ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் திரு. வி. கோவிந்தசாமி சேர்வை அவர்களும் உறுப்பினர்களும், விவசாய அமைச்சருக்குச் சிறப்பான வரவேற்பு ஒன்று அளித்தனர். —ஆசிரியர்.]

வானொலிப் பெட்டி இல்லாத பஞ்சாயத்தே தமிழகத்தில் இல்லை. இந்தியாவிலேயே இந்த வகையில் தமிழக அரசு தனிச் சிறப்பு பெற்றுள்ளது. அதாவது இங்கு சுமார் 13,000 ஊராட்சி மன்றங்களில், கிராம வளர்ச்சித் துறையின் கீழ் ஏறக்குறைய 14,000 வானொலிப் பெட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு சில பஞ்சாயத்துக்களில் ஒன்றுக்கு மேற்பட்ட வானொலிப் பெட்டிகளும் உண்டு.

வானொலிப் பெட்டி அமைத்து விட்டால் மட்டும் போதாது. அதில் கிராம வாசிகளின் தேவைகளுக்காக ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளை கவனத்துடன் கேட்க வேண்டும். கேட்டு, அவரவர்களுக்குத் தக்கபடி செயல்பட வேண்டும். ஒவ்வொரு நாளும் மாலை 6–20 மணியிலிருந்து 8 மணி வரை கிராம நிகழ்ச்சிகள் ஒலிபரப்பாகின்றன.

ஒலிபரப்பாகும் முக்கிய நிகழ்ச்சிகளைக் கேட்டு, கிராம மக்கள் பயன்பெற வேண்டும் என்ற நோக்கத்தோடு கிராம வானொலி மன்றங்கள் தொடங்கப்பட்டன. அதாவது 20 உறுப்பினர் கொண்ட மன்றம் அமைக்கப்பட்டு, அதன் மூலம் கிராம மக்கள் சில குறிப்பிட்ட முக்கிய நிகழ்ச்சிகளை வானொலி வாயிலாகக் கேட்கவும், அவற்றைக் குறித்துத் தமக்குள் கலந்துபேசவும், அவற்றை நடைமுறையில் செய்து பயன்பெறவும், கிராம வானொலி மன்றங்கள் செயல்பட்டு வருகின்றன.

வாரந்தோறும் இரண்டு நாட்களில், அதாவது செவ்வாய்க்கிழமை—வெள்ளிக்கிழமைகளில் இரவு 7–30 முதல் 8–00 மணிவரை, கிராம வானொலி மன்றங்களுக்கான சிறப்பு நிகழ்ச்சிகளை, திருச்சி வானொலி நிலையம் ஒலிபரப்புகிறது. இதில் முக்கிய அம்சம், கேள்வி பதிலாகும். ஒலிபரப்பப்படும் விஷயத்தைப் பற்றிய சந்தேகங்களுக்கும், கேள்விகளுக்கும், அடுத்தவாரம் அதே நாளில் பதில்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இந்த ஏற்பாட்டின் மூலம் தமிழகத்தில் பதின்மூன்று மாவட்டங்களில் உள்ள பல்வேறு கிராமங்களிலிருந்தும், கேள்விகள் திருச்சி வானொலி நிலையத்திற்கு வருகின்றன. அந்தக் கேள்விகளை முறைப்படுத்தி, அரசாங்கத் துறையினரிடமிருந்து அதிகார பூர்வமான பதில்களைப் பெற்று, ஒரே வாரத்திற்குள் பதில்கள் ஒலிபரப்பப்படுகின்றன. இந்த கேள்விகளைக் கேட்கும் கிராம வானொலி மன்றங்களின் பெயர்களும் சொல்லப்படுகின்றன.

### கேள்வி கேட்கும் முறை

கேள்விகள் கேட்பதில் கவனிக்க வேண்டிய முக்கியமான குறிக்கோள் எதுவாக இருக்கவேண்டுமென்பதையும் இப்போது விளக்க விரும்புகிறேன். இந்த வானொலி மன்றங்களில் கேட்கப்படும் கேள்விகள், புகார் சம்மந்தப்பட்டதாக இல்லாமல், தத்தமக்குள்ள தொழில் துறைகளைப் பற்றியும், வாய்ப்பு வசதிகளைப் பற்றிய விவரங்களையும், விளக்கங்களையும் மேலும் திரட்டும் முறையில் அமைவனவாக இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட ஓரிரு துறைகளைப் பற்றி மட்டுமே, கேள்விகள் அமைதல் கூடாது. கேள்விகள் வாழ்க்கைக்குத் தேவையான உணவு—உடை—உறையுள் இவை அனைத்திற்கும் சார்புடைதாக அமைதல் வேண்டும் என்பது, என் கருத்தாகும். ரசாயன உர விநியோகம், காலா காலத்தில் கடன்வசதி தருதல் பற்றி, விவசாயப் பெருமக்கள் ஆலோசனைகள் கூறலாம். உதாரணமாக, குறிப்பிட்ட கிராமத்தில் வாழும் ஹரிஜனங்கள் சதுப்பு நிலத்தில் குடி இருப்பதாக வைத்துக் கொண்டால், வானொலி மன்றத்தின் வாயிலாக நாம்

**கிராம வானொலி மன்றங்களின் தொண்டு....**

கேட்க விரும்பும் கேள்வி, அந்த ஹரிஜனங்களுக்கு மேட்டுப்பாங்கான இடம் ஒதுக்கி, வசதியாக வீடுகள் அமைத்துக் கொள்ள வாய்ப்புகளைப் பற்றியதாக இருத்தல் வேண்டும். எனவே கேள்விகள் கேட்கப்படும் நோக்கம் புகார் எழுப்புவதாக இல்லாமல், குறிப்பிட்ட ஒரு நடவடிக்கையைப் பற்றி மேலும் தெளிவான விவரங்கள் அடங்கிய பதில்களைக் கோருவதாக இருத்தல் தேண்டும்.

ஒரு கிராமத்தில் குடிநீர் வசதி இல்லாதிருக்கலாம். பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டத்தைச் செயல்படுத்த சாத்தியக் கூறுகளும் இருக்கலாம். குடிநீர் வசதிபற்றிய நிகழ்ச்சிகள் நடைபெறும்போது, அந்தக் கிராமத்தில் உறுப்பினர்கள் கேட்கும் கேள்விகள், பதில் அறிந்து நடைமுறையில் பயன்கொள்ளத்தக்கதாகஇருக்கவேண்டும். சிறுபாசன வசதிகளைப் பெருக்குவதில் அரசினர் தீவிரமாயுள்ளனர். இது பற்றிய நிகழ்ச்சிகள் நடக்கும்போது, அதுபற்றிச் சொல்லப்படும் வழிமுறைகளை நன்ருகப் புரிந்து கொண்டு கேட்கப்படும் கேள்விகள், பயனளித்து, கிராமத்தில் பாசனவசதிகளை மேலும் அதிகரிக்கத் தக்கவையாக இருக்க வேண்டும்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் மட்டும் 85 கிராம வானொலி மன்றங்கள் இருக்கின்றன. தமிழ் நாட்டில் இன்று 1,020 கிராம வானொலி மன்றங்கள் பணியாற்றுகின்றன. அவற்றுள் சிறப்பான முறையில் பணியாற்றுகின்ற மன்றங்களுக்கு மேலும் ஊக்கமூட்டும் வகையில் பரிசுத்திட்டம் உருவாக்குவது நலம். ஏற்கெனவே தலை சிறந்த 7 வானொலி மன்றங்களுக்கும் கானடா தேசத்து உழவர்கள் அளித்த பரிசான 7 டிரான்சிஸ்டர் ரேடியோ பெட்டிகள் கொடுக்கப்பட்டுள்ளன.

**புதிய முறையில்**

1962-ம் ஆண்டு ஜூலை மாதம் தொடங்கப் பெற்ற கிராம வானொலி மன்றத் திட்டம் சென்ற ஆண்டு ஜூலை மாதம் மேலும் புதிய முறையில் திருத்தியமைக்கப் பட்டது. அதன் விளைவாக, இந்தியாவில் பத்து வானொலி நிலயங்களில் "தீவிர பண்ணைத்திட்டம்"வானொலிவாயிலாக நடைபெறத் தொடங்கியது. இந்தத் திட்டம் ஆரம்பமாவதற்கு முன்பு, இதைப் பற்றிய கருத்தரங்கு ஒன்று, அகில இந்திய நிலையில் நடைபெற்றது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த வானொலி நிர்வாகிகள் கிராம வானொலி மன்றத் தலைமை அமைப்பாளர்கள், கிராம நிகழ்ச்சிகளைத் தயாரிப்போர், விவசாய நிபுணர்கள் முதலியோர் கொண்ட ஆராய்ச்சி கருத்தரங்கு, சமுதாய நல தேசிய நிலயத்தில், இந்திய அரசாங்கத்தின் சார்பில் நடைபெற்றது.

இரண்டுவாரம் நடைபெற்ற அந்த ஆராய்ச்சியின் பயனுக, கிராம வானொலி நிகழ்ச்சிகள் பெரிதும் சீர்திருத்தி அமைக்கப்பட்டன. கிராம வளர்ச்சித் துறையில் அனுபவம் பெற்றுள்ள அதிகாரிகள் வானொலி நிலயத்திற்கும் கிராம விவசாயிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு ஏற்படுத்தி வருகின்றனர். வயலில் வேலை செய்யும் உழவர்களிடம் நேரில் சென்று ஒலிப்பதிவு செய்து அவர்களின் அனுபவத்திறன், நாடறிய ஒவ்வொரு நாளும் ஒலிப்பரப்பாகி வருகிறது. தமிழ் நாட்டின் பல் வேறு பகுதிகளில் வாழும் பலவகைப்பட்ட உழவர் பெருமக்களின் பண்பட்ட அனுபவங்கள் வானொலி மூலம் பரிமாறிக் கொள்ளப்படுகின்றன. திருச்சி நிலயம் இந்த வகையில் திறம்படச் செய்யும் இப்புதிய பணி பாராட்டுக்குரியது.

இந்த வகையில் கிராம வளர்ச்சித் துறையின் சார்பாக, நிறைவேறும் பொறுப்புகளை நான் எடுத்துரைக்க கடமைப் பட்டுள்ளேன். முதலாவதாக, வானொலிப் பெட்டிகளின் பராமரிப்பு, சிறந்த வகையில் அமைந்திருக்க வேண்டும். இதற்காக பஞ்சாயத்து வானொலி பராமரிப்பு நிலயம், வானொலி மேற்பார்வையாளர் மூலம் பணியாற்றிவருகிறது. இது மேலும் பயனுள்ள வகையில் பணியாற்றும் ஆலோசனைகள் இருப்பின் அவற்றை நான் வரவேற்கிறேன்.

**மேற்பார்வை குறித்து, அரசாங்க ஆணை**

இரண்டாவதாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள கலெக்டரின் பஞ்சாயத்து வளர்ச்சி தனி உதவியாளர், அந்தந்தப் பகுதிக்கான கிராம வானொலிமன்ற அமைப்பாளராகப் பணியாற்றுமாறு அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. இதை நினைவில் கொண்டு, இவர்கள் பல கிராமங்களுக்குச் செல்லும்போது வானொலி மன்றங்களை மேற்பார்வையிட்டு, அவை மேலும் சிறந்த வகையில் பயனளிக்க ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையாளர்களின் மூலமாக தீவிர நடவடிக்கை எடுப்பார்களென நம்புகிறேன்.

மூன்ருவதாக, கிராம வானொலி நிகழ்ச்சிகளின் முக்கிய பகுதிகளை 'கிராம நலம்' இதழில் தொடர்ந்து வெளியிட ஏற்பாடாகியுள்ளது. குறிப்பாக, மாண்பு மிகு விவசாய அமைச்சர், விவசாய நெறியாளர், கலெக்டர், திருச்சி வானொலி நிலய நெறியாளர், ஆகியோரின் வானொலிப் பேச்சுகளின் சாரத்தை அவ்வப்போது " கிராம நலத்தில் " காணலாம்.

'ரேடியோ மன்றம்' என்ற சிறப்பிதழ் சென்ற ஆண்டு முதல் நிறுத்தப்பட்டுவிட்டதால், அதை ஈடுசெய்யும் முறையில் சில முக்கிய வானொலி குறிப்புகளை " ரோட்டா " அச்சடித்து கிராம வானொலி மன்றங்களுக்கும்,ஊராட்சி ஒன்றிய செய்தி நிலயங்களுக்கும் அனுப்ப யோசித்துவருகிறோம்.

தமிழ் நாட்டில் கிராம வானொலி மன்றத் திட்டம் அகில இந்திய வானொலி டைரக்டர் ஜெனரல் அவர்களால், ஏற்கனவே பெரிதும் பாராட்டப் பெற்றது. அகில உலக ஸ்தாபனமான ஐக்கியநாடுகளின் சார்பில் அமைந்துள்ள கல்வி கலாச்சார சமூகக் குழுவினரின் (UNESCO) அறிக்கை ஒன்றில், தமிழ் நாட்டில் நடைபெறும் கிராம வானொலித் திட்டம் சிறப்பிடம் பெற்றுள்ளது. இந்தப் பழம் பெருமையோடு நமது எதிர்கால பொதுப்பணியும் சிறந்த முறையில் உருவாகும் என்று உறுதியாக நம்புகிறேன். மாண்புமிகு அமைச்சரும், உழவர் பெருமக்களும் கூடியுள்ள இந்த விழாவில் கூறப்படும் அரிய யோசனைகளை கிராம வளர்ச்சித்துறையின் சார்பாக, சிறந்த வகையில் நிறைவேற்றுவோம்.

விவசாய அமைச்சர், மாண்புமிகு திரு கோவிந்தசாமி அவர்கள் தமது தலைமையுரையில், ஊராட்சி மன்றத்திலுள்ள வானொலிப் பெட்டிகளைச் செப்பனிடுவதில் உள்ள காலதாமதம் தவிர்க்கப்பட வேண்டும் என்பதை வற்புறுத்தினர்.

ஆந்திராவிலுள்ள மதனப் பள்ளி வட்டாரமானது கிழக்கு மதனப் பள்ளி, மேற்கு மதனப்பள்ளி ஆகியவற்றைக் கொண்டது. சித்தூர் மாவட்டத்திலேயே ஆண்டு முழுவதும் ஆரோக்கியம் அளிக்கும் சிறந்த சீதோஷ்ணத்தைப் பெற்றது மதனப் பள்ளி. ஹார்ஸ்லிக் குன்றுகள், அநாதை விடுதி, க்ஷயரோக மருத்துவ நிலையம், ரிஷிப் பள்ளத்தாக்கு போன்ற இயற்கைக் காட்சிகள் மதனப்பள்ளியை அழகு செய்கின்றன.

அங்குள்ள பஞ்சாயத்து சமிதி 104,897 மக்களைக் கொண்டது. இது 47 ரெவின்யூ கிராமங்களைக் கொண்டது. மதனப்பள்ளியின் பரப்பளவு 369·4 சதுர மைல்கள். இங்குள்ள 36 பஞ்சாயத்துக்களில் 12 பஞ்சாயத்துக்களின் தலைவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்.

அங்கு விவசாயத்திற்குத் தகுதியாக உள்ள நிலப்பரப்பு 86,000 ஏக்கர்களாகும். அவற்றில் நீர்ப்பாசன வசதிகளுடன் பயிரிடப்படுவது 20,000 ஏக்கர்களேயாகும். நெல், தக்காளி, கரும்பு, ராகி முதலியன முக்கிய பாசனப்பயிர்கள். வேர்க்கடலை, மக்காச் சோளம் போன்றவை மாரிக்காலத்துப் பயிர்கள். உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகச் சமிதி, பொறுக்கு விதைகள், உரங்கள், இரும்புக் கலப்பை, விதை தூவிக் கருவிகள் போன்றவை விவ்சாயிகளுக்கு வழங்கப்படுகின்றன.

**பயிர்ப் பாதுகாப்பு**

பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள் ஒவ்வொரு கிராம சேவக்கிடமிருந்தும் கிடைக்கும். 221 விவசாயிகள் ஒவ்வொருவருக்கும் ரூ. 750, உதவி தொகையாக அளிக்கப்படுகின்றது. நீர்ப்பாசனக் கிணறுகள் வெட்டிக் கொள்வதற்காக, 109 விவசாயிகளுக்குக் கடன் வசதி செய்து தரப்பட்டுள்ளது. "ஆயில் என்ஜின்கள்", மின்சார பம்பு செட்டுகள் வாங்குவதற்காக ரூ. 2,44,300 வரை விவசாயிகளுக்குக் கடன் அளிக்கப் பட்டுள்ளது. இரசாயன உரம் வாங்குவதற்காக ரூ. 1,02,896 வரை கடன் அளிக்கப்பட்டுள்ளது.

மதனப்பள்ளிப் பகுதியில் கால் நடை முதலுதவி நிலையங்கள் மூன்று செயல்படுகின்றன. இது வன்றியும், மூன்று இடங்களில் மூன்று உதவி நிலையங்களும் செயல்பட்டுக் கால்நடைகளைப் பராமரித்து வருகின்றன. குரபலக் கோடாவில் கால்நடை மருந்தகம் ஒன்று இருக்கிறது. இன் விருத்திக்காக ஹலிகார் எருதுகள், நெல்லூர் செம்மறிக் கடாக்கள், வளர்ப்புக் கோழி இனங்கள், முர்ரா எருமை ஆகியவை பஞ்சாயத்துச் சமிதியால் வழங்கப்பட்டுள்ளன.

இங்கு 778 சிறிய நீர்ப்பாசன ஆதாரங்கள் இருக்கின்றன. அவற்றில் 313 ஆதாரங்கள் செப்பனிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டு, 226 ஆதாரங்களில் வேலை முடிந்து விட்டன. கிராமக்குடிநீர் வழங்கும் திட்டத்தில் ( Rural Water Supply ) குளங்களைப் பாதுகாக்கவும், புதுப்பிக்கவும், ரூ. 2,73,348 செலவிடப் பட்டுள்ளது.

நிம்மனப் பள்ளியில் ஆதார சுகாதார நிலையம் ஒன்று இருக்கிறது. அது நான்கு துணை நிலையங்களைக் கொண்டது. ஒவ்வொரு ஆண்டும், இங்கு சுமார் 34,000 நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில், 151 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. 78 குடி தண்ணீர்க் கிணறுகள் தோண்டப் பட்டுள்ளன. மேலும் 71 கிணறுகள் தோண்டுவதற்கான வேலை நடைபெற்று வருகிறது. இன்னும் 400 குக்கிராமங்களில் குடிதண்ணீர் வசதி செய்யப்பட வேண்டும்.

**போக்குவரத்து வசதிகள்**

முப்பது மைல் நீளமுள்ள புதிய சாலைகளும், 56 புதிய பாலங்களும் கட்டப்பட்டுள்ளன. ஊர்திகள் செல்லும் பாதைகளையெல்லாம் ரூ. 2,20,973 செலவில் சீர்திருத்தி யமைத்துள்ளது, மதனப் பள்ளி சமிதியின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும்.

## புதிய தோற்றத்தில் ஒரு 'பஞ்சாயத்து சமிதி'

மதனப்பள்ளி சமிதியின் மேற்பார்வையில், 126 ஆரம்பப் பள்ளிகள் நடத்தப்படுகின்றன. அவற்றுள் 5 பள்ளிகள் உயர்தர ஆரம்பப்பள்ளிகளாகும். கட்டாய ஆரம்பக் கல்வி அமுலில் இருக்கிறது. 2,875 குழந்தைகளுக்கு, 42 உணவளிக்கும் நிலையங்கள் இருக்கின்றன. 670 உறுப்பினர்களைக்கொண்ட, 38 இளைஞர் சங்கங்கள் வேலை செய்து வருகின்றன. 14 நூலகங்கள் திறக்கப்பட்டுள்ளன. 12 பஜனை மடங்களுக்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன. மதனப் பள்ளியில் தையல் கலை, ஆடைகள் தைக்கும் நிலையம் ஒன்றும், 313 உறுப்பினர்களைப் பெற்ற 23 மாதர் சங்கங்களும் வேலை செய்து வருகின்றன.

### தொழில் வளர்ச்சி

மதனப்பள்ளியிலுள்ள கிராம சமுதாயத் தொழில் பட்டறை ரூ. 78,478 மதிப்புள்ள மேஜை, நாற்காலி போன்ற பொருட்களை உற்பத்தி செய்து விற்பனையாக்கியுள்ளது.

முப்பத்தியேழு கூட்டுறவு நாணய சங்கங்கள், 45 கிராமங்களின் கடன் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது. இங்குள்ள 16,123 விவசாய குடும்பங்களில் 6,970 விவசாயக் குடும்பங்கள் கூட்டுறவினால் பயனடைந்து வருகிறது.

ஐந்து பஞ்சாயத்துக்கள் அலுவலகக் கட்டிடங்களைக் கட்டியுள்ளன. மேலும் 2 கட்டிடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. 15 பஞ்சாயத்துக்கள் வரி பாக்கியே இல்லாமல், முழுவரியையும் வசூலித்து விட்டன. கிராம மனித ஆற்றலைப் பயன்படுத்திக் கொள்ள முன்னோடித் திட்டம் ஒன்று இருக்கின்றது. இந்த வட்டாரத்திற்காக ரூ. 46,350 செலவிடப்பட்டுள்ளது. 16 சிறிய நீர்ப்பாசன ஆதாரத்தைச் சீர்திருத்துவதற்காக ரூ. 32,716 செலவிடப்பட்டுள்ளது.

### புத்துணர்வில் புதிய எழுச்சி

புதிய வாழ்க்கைக்கான மனக் கிளர்ச்சி கிராம மக்களிடையே எழுந்து விட்டதை உறுதியாகக் கூறலாம். மக்களுடைய நோக்கம் மிக முக்கியமாக மாறிக்கொண்டிருக்கிறது. சமிதியின் பல இடங்களிலும் விஞ்ஞான அறிவு வெளிப்பட்டு வருகின்றது. தன் சொந்த உழைப்பினாலும், சமுதாய முயற்சியினாலும், கிராமங்களை முன்னேற்றும் பணியில் மதனப் பள்ளி சமிதி அதிகாரிகளுக்குத் தன்னம்பிக்கை வளர்ந்து, ஓர் எடுத்துக் காட்டாக விளங்குகின்றது.

## கிராம ஆய்வுக் குழுக்கள்

சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் வெற்றியுற வேண்டுமாயின், அவற்றிற்கு மக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம். அதைப் பொறுத்தே திட்டத்தின் வெற்றி அமையும். மக்களிடையே விழிப்புணர்ச்சியை உண்டாக்கவும், அவர்களைச் செயல் துறைகளில் ஒருமுகப்படுத்தவும், மகாராஷ்டிர மாவட்டக் கூட்டுறவுச் சங்கம் ஆய்வுக் குழுக்களை (Study Circle) ஏற்படுத்தியிருக்கிறது. கிராம மக்களிடையே இவ்வித ஆய்வுக் குழுக்களுக்கு, சிறந்த ஆதரவு கிடைத்து வருகிறது.

'வாகோடி' ஆய்வுக் குழு இவ்வகையில், ஒரு முன்னோடியாக இருந்து மிகுந்த பயன் அளித்ததோடு, பிற குழுக்களுக்கு, அது சிறந்த எடுத்துக் காட்டாகவும் விளங்குகிறது.

### 'வாகோடி' கிராமம்

'வாகோடி' என்னும் கிராமம் மகாராஷ்டிர மாவட்டத்தில், அஹமத் நகரிலிருந்து, ஐந்து மைல் தொலைவில் உள்ளது. அங்கு பெய்யும் மழையின் அளவு 20 அங்குலம். கரும்பும், மக்காச் சோளமும், அங்கு விளையும் முக்கியப் பயிர்கள். விவசாயமே, மக்களின் இன்றியமையாத் தொழில்.

இந்த ஆய்வுக்குழு அஹமது நகரிலுள்ள, கூட்டுறவுப் பயிற்சி நிலையத்தால் நடத்தப்படுகின்றது. குழுவின் முதல் கூட்டத்தில் 15 உறுப்பினர்கள் சேர்ந்தனர். அவர்கள் தங்கள் கருத்துக்களை வெளிப்படையாகவும், தடையின்றியும் கூறினர். மக்களின் பல திறப்பட்ட பிரச்னைகளைத் தீர்க்கும் பணியில், ஆய்வுக் குழு வெற்றியளிக்கும் என்று, முதலில் அவர்கள் நினைக்கவேயில்லை. இருப்பினும் ஆய்வுக் குழுவின் முதல் கூட்டத்திலேயே பிரச்சினைகளனைத்தும் தீர்க்கப்பட்டுவிடாது என்று அவர்களுக்கு முதலில் உணர்த்தப்பட்டது. ஒன்றன் பின் ஒன்றுகவே அவற்றைத் தீர்ப்பது சிறந்த முறையாகும்.

ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்கு வந்த முதல் பிரச்சினை வருமாறு.—

வாகோடி கிராமத்தினருகில், ஓர் இராணுவப் பண்ணை உள்ளது. அப்பண்ணையில் 500 கோவேறு கழுதைகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

வாகோடி பலநோக்குக் கூட்டுறவு சங்கச் செயலாளர், இராணுவப் பண்ணையிலிருந்து கழிவுப் பொருளைப் பெறுவதற்குச் செய்த முயற்சி, வெற்றி பெறவில்லை. விவசாயிகளின் உபயோகத்திற்காக அக் கழிவுப் பொருளைக் கொள்முதல்செய்ய, ஆய்வுக் குழு தீர்மானம் செய்தது. இராணுவப் பண்ணை அதிகாரிகளுக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டன. அவர்கள் இசைவதற்கு, முயற்சிகள் செய்யப்பட்டன. சங்கத் தலைவர், ஆய்வுக் குழு விரிவுரையாளர், செயலாளர் ஆகிய மூவரும், இராணுவ அதிகாரிகளைக் கண்டு, வாகோடி கிராம விவசாயிகள் அக்கழிவுப் பொருளால் பெறக்கூடிய பயனை விளக்கி உணர்த்தினர்.

### 'வாகோடி' ஆய்வுக் குழுவின் வெற்றி

இதைப் பொறுமையுடன் கேட்ட இராணுவ அதிகாரிகள், அடுத்து வரும் 3 அல்லது 6 மாதங்களுக்கு, கழிவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள டெண்டர்கள் கொடுக்கும்படி கூறினர். செயலாளரும் தன் மேலதிகாரிகளின் அனுமதி பெற்று, டெண்டரைக் கொடுத்தார். இராணுவ அதிகாரிகளும் அதைப் பெற்றுக்கொண்டனர்.

ஆய்வுக் குழு உறுப்பினர்கள் தங்கள் வெற்றி கண்டு மகிழ்ந்தனர். தங்கள் சக்தியையும், ஆய்வுக் குழுவின் இன்றியமையாத தேவையையும் உணர்ந்து கொண்டனர். கிராமத்திற்குத் தேவையான, சுத்தம் செய்யப்படாத எண்ணெயையும், மின்சார வசதியையும் பெறுவது போன்ற, பெரிய திட்டங்களைத் தீட்டும் அளவிற்கு அவர்களின் ஆரம்ப வெற்றி அடிகோலியது. ஆய்வுக் குழுவின் அவசியத்தை மக்கள் உணரலாயினர். வாரந்தோறும் கூட்டங்கள் நிகழ்கின்றன. வாகோடி கிராம வளர்ச்சிக்கு இவ்வாய்வுக்குழு பெரிதும் உதவுகின்றது.

கருதுகிறது. இது குறித்துச் சட்டப்பேரவை உறுப்பினர்களையும் கலந்து இக் குழுவின் அறிக்கையை ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவுகள் எடுக்கவேண்டும் என்பதே அரசின் விருப்பமாகும். இதற்கிடையில், தற்போதைய நிலவரி ஏற்பாட்டின் பிணைப்பிலிருந்து மக்களில் பலருக்கு இயன்ற அளவிற்கு விலக்கு அளிக்க வேண்டுமென்ற தனது கொள்கைக் கிணங்க, புன்செய் எனப் பதிவாகியுள்ள அனைத்து நிலங்களுக்குமுரிய அடிப்படைத் தீர்வையை 1967 ஜூலை 1-ம் தேதியன்று தொடங்கும் பசலியிலிருந்து விட்டுவிட அரசு முடிவு செய்துள்ளது. அதே நேரத்தில் புன்செய் எனப் பதிவு செய்யப்பட்டிருந்து அரசின் பாசன ஆதாரங்களிலிருந்து பயன்பெறும் நிலங்கள், முன்பே குறிப்பிட்டுள்ள வீதங்களில் தொடர்ந்து தண்ணீர்த் தீர்வை செலுத்தி வர வேண்டும். புன்செய் நிலங்களுக்கென பஞ்சாயத்து ஒன்றிப்புகளுக்குச் செலுத்த வேண்டிய உள்ளாட்சிகளும் நாட்டு நலனிற்காகச் சற்றுக் கூடுதலான சுமையினை ஏற்கும்படி அவர்களைக் கேட்க வேண்டுமெனக் கருதியுள்ளது. நிலவரி நீக்கம் காரணமாக ஏற்படும் வருமான இழப்பினை, வேளாண்மை விளைபொருள்களில் அரசு வாணிபம் செய்து ஈடுசெய்ய வேண்டுமென முந்திய அரசு கருதியிருந்தது. வருவாய் இழப்பினை ஈடு செய்யும் ஒரே நோக்கத்துடன் மட்டும் அரசு வாணிபத் துறையில் ஈடுபட்டால், உழவர்களுக்கு, குறிப்பாகச் சிறு உழவர்களுக்கு இன்னல் விளையும் ; அல்லது மாறாக, நகர மாந்தருக்குக் கூடுதல் சுமைகள் ஏற்படும். எனவே, நிலவரி நீக்கங் காரணமாய் ஏற்படும் வருவாய் இழப்பினை பெருநிலக்கிழார்களிடமிருந்து ஓர் அளவிற்கு ஈடு செய்வது அதனைவிட நியாயமானதென்று நாங்கள் கருதுகிறோம். இது குறித்து அரசின் செயற்குறிப்புகளைப் பற்றி பின்னால் எனது உரையில் இன்னும் சற்று விரிவாகக் குறிப்பிடுகிறேன்.

---

## பஸ் போக்குவரத்தை நாட்டு உடமையாக்கும் கொள்கை

---

செஸ் வரியும், செஸ் மேல் வரியும் வசூலிக்கப்படும். புன்செய் நிலங்களுக்குரிய அடிப்படைத் தீர்வையை விட்டுவிடுவதால், ஒரு முழு ஆண்டில் ஒரு கோடியே 60 லட்சம் ரூபாய் இழப்பு ஏற்படுமென்று மதிப்பிடப்படுகிறது. இதில் நடப்பு ஆண்டில் மட்டும் ஒரு கோடி ரூபாய்க்குக் குறையாமல் இழப்பு ஏற்படும். இம் முடிவு காரணமாய், அரசுக் கணக்குகளில் புன்செய் எனப் பதிவாகியுள்ள சுமார் 1 கோடியே 40 லட்சம் ஏக்கர் நிலங்களுக்கு வரிவிலக்குக் கிட்டும். நமது மாநிலத்தில் தனிப் பட்டா, கூட்டுப் பட்டா ஆகிய இவை இரண்டும் சேர்ந்த ஏறக்குறைய 60 லட்சம் பட்டாக்களில், சுமார் 45 லட்சம் பட்டாக்களாவது புன்செய் நிலங்களென நாம் மதிப்பிடலாம். எனவே, அரசு மேற்கொள்கிற இம் முடிவு காரணமாக உழவர் பெருமக்களில் மிகப் பெரும் பகுதியினர் பயனடைவார்களென நம்புகிறேன்.

இதன் விளைவாக, கரும்பு, மஞ்சள், பாக்கு போன்ற மிக ஆதாயம் தரும் வாணிபப் பயிர்களை விளைவிப்போர் உட்பட, பல பெருநிலக்கிழார்களும் பயனடைவார்கள் என்பதிலும் ஐயமில்லை. வரவினமும் செலவினமும் ஊசி முனையிலே சமன் செய்யப்படும் இடர்ப்பாடான இவ்வேளையில், வருவாய் எத்தலைப்பில் குறைந்தாலும், அந்த இழப்பை வரியை உயர்த்துவதன் மூலமாகவோ, அல்லது பலன்தரும் செலவினங்களைக் குறைத்துக் கொள்வதன் வாயிலாகவோ, ஏனைய மக்கட் பிரிவினரின் மீதுள்ள சுமை சிறிது கூடுமென்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்களென்று நினைக்கிறேன்.

எனவே மக்களிடையே ஒரு பிரிவினருக்குப் பரிகாரம் அளிக்கும்போது, அதன் விளைவால் ஏற்படும் சுமையினை தாங்கக்கூடிய நிலையில் உள்ள ஏனைய மக்களின்மீது வைத்தல் வேண்டும் என்பதே அரசின் முயற்சியாக இருத்தல் வேண்டும். இக் கருத்தின் அடிப்படையில்தான் அரசு நிலவரியை நீக்குவதுடன் கூடவே, பெருநிலக்கிழார்

இவ் வரவு-செலவுத் திட்டம் செயல்படுத்த முற்படும் அரசின் மற்றொரு முக்கியக் கொள்கை பஸ் போக்குவரத்தினை நாட்டு உடமையாக்குவதாகும். 120 மைல்களுக்கும் அதற்கு மேற்பட்டும் உள்ள சில நெடுந்தொலை பஸ் வழித் தடங்களில் (Long distance routes) தவிர, இப்போது அரசினர் போக்குவரத்துத் துறை பெரும்பாலும் சென்னைமா நகரிலும் கன்னியாகுமரி மாவட்டத்திலுமே பஸ்களை நடத்தி வருகிறது. இவை நீங்கலாக, இத் துறை முழுவதும் தனியாருக்கு விடப்பட்டுள்ளது. பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்படும் ஒரு சிறந்த பணியாகவே சாலைப் போக்குவரத்து உள்ளது.

தனியாரின் ஊக்கத்திற்கும் முயற்சிக்கும் முதன்மையிடம் அளிக்கப்பட்டுள்ள நாடுகள் பலவற்றிலும், சாலைப் போக்குவரத்துப் பணியை அந்த நாட்டு அரசும் ஊராட்சி மன்றங்களும் பெரும்பாலும் மேற்கொண்டு செயல்படுத்தி வருகின்றன. நம் நாட்டிலும்கூட, பல மாநில அரசுகள் சாலைப்போக்குவரத்தினை மிகப்பெருமளவிற்கு நாட்டுடைமையாக்கியுள்ளன. மக்கள் தொகை மிக நெருக்கமாகவும், நல்லதொரு சாலை அமைப்பைக் கொண்டதாகவும் உள்ள தமிழகத்தைப் போன்றதொரு மாநிலத்தில் நெடுந்தொலை பஸ் போக்குவரத்து, அரசிற்கு வருமானத்தை ஈட்டித் தரும் முக்கிய ஆதாரமாயிருந்திருக்கவேண்டும். ஆனால், இப்போது நாம் ஆராயத் தேவையற்ற சில காரணங்களுக்காக, சாலைப் போக்குவரத்துப் பணியை நாட்டுடைமையாக்குவதற்கு முனைப்பாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை. வரியில்லா வருமான இனங்களைப் (Non-tax Reveuue) பெருக்குவதன் மூலமாகவே மக்களின் வரிச் சுமைகளை நியாயமான எல்லைக்குள் நிற்குமாறு செய்து, வளர்ச்சிப் பணிகளுக்கு மிக அவசியமாகத் தேவைப்படும் நிதி வசதிகளை மேலும் திரட்ட முடியுமென இன்றைய அரசு கருதுகிறது.

எனவே, 75 மைல்களுக்கும் அதற்கு மேலும் உள்ள பஸ் வழித் தடங்களனைத்தையும் தமிழக அரசு போக்கு வரத்துத் துறை மேற்கொள்ளவேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது. இந்த பஸ் வழித் தடங்களின் தற்போதைய அனுமதிச் சீட்டுகள் முடிவடையும் தருணத்தில் அவற்றை அரசு மேற்கொள்ளும். தவிர சென்னை மாநகரிலிருந்து தொடங்குகின்ற, அல்லது முடிவுறுகின்ற வழித் தடங்கள் (Routes) அனைத்தையும் தற்போதைய பஸ் வழித்தட அனுமதிச் சீட்டுகள் முடிவடைந்தவுடன் நாட்டுடைமையாக்க வேண்டு மென்றும் அரசு கருதியுள்ளது. அன்றியும், கன்னியா குமரி மாவட்டத்தின் எல்லைகளைத் தொடுகின்ற வழித்தடங்கள் அனைத்தையும், அந்தந்த பஸ் முதலாளி களின் அனுமதிச் சீட்டுக்கள் முடிவடையும்போது படிப் படியாக மேற்கொள்வதன்மூலம் அங்கு பஸ் போக்கு வரத்தினைநாட்டுடைமை யாக்குவதில் முழுமை காண அரசு கருதுகின்றது. இம் மூன்று வகை வழித் தடங் களது வளர்ச்சியும், இனி அரசின் தனிப் பொறுப் பாக இருக்கும். நடப்பு ஆண்டினைப் பொறுத்தமட்டில் தமிழக அரசு போக்குவரத்துத் துறைக்கு வகை செய்யப் படும் மூலதன முதலீடான சுமார் இரண்டரைக் கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்தைக் கொண்டு இத் திட்டத்தைச் செயல்படுத்திவிட முடியும்.

கடந்த ஆண்டுத் திட்டத்திற்கெனச் செய்த நிதியொதுக்கத்தைவிட, இவ்வாண்டு கூடுதலாக நிதி யொதுக்கம் செய்ய முடிந்த ஒரு சில மாநிலங்களிலே தமிழகமும் ஒன்று என்பதை அறிய, இப் பேரவையின் மாண்புமிக்க உறுப்பினர்கள் பெருமகிழ்ச்சி அடை வார்கள் என நான் நம்புகிறேன். இத்துடன் அரசு நடப்பு ஆண்டுக்குரிய திட்டத்தை வகுக்கையில், நமது பொருளாதாரத்தில் இயங்கிவரும் பணவீக்கச் சக்தி களையும் எண்ணத்தில் இருத்தி, விரைந்து பயனளிக் கும் திட்டங்களில் தனதுநாட்டம் முழுவதையும் செலுத்த முற்பட்டுள்ளது.

சிறுபாசனத் திட்டங்களின் துணை கொண்டும், அதிக விளைச்சலைத் தரும் புதிய ரக விதைகளைப் பெருக்குவதன் மூலமும், போதிய உரவகைகளை உரிய காலத்தில் வழங்கு தவன் வாயிலாகவும் வேளாண்மையைப் பெருக்குவதில் அதிக நாட்டம் செலுத்தப்பட்டிருக்கிறது. நமது நிதி வசதிகளை உற்பத்தித் திட்டங்களுக்காக கட்டிக்காக்க வேண்டி, கட்டிட வேலைகளில் செய்யப்படும் முதலீடு களைப் பெரிதும் குறைத்துக்கொண்டுள்ளோம். வழக்கம் போல் பாசன, மின்சாரத் திட்டங்களுக்குப் பெரிதும் முதன்மை அளிக்கப்பட்டுள்ளது. இந்த இரு துறைகளுக் குமான மொத்த முதலீடுகள், ஆண்டுத் திட்டத்தில் 40 சதவீதமாகும். இத் திட்டங்களை விரைவில் முடிப் பதற்காக நாம் இவற்றிற்குத் தந்துள்ள சிறப்பும் இதன் மூலம் ஓரளவிற்கு எதிரொளிப்பதை நன்கு காண லாம்.

சமூகப் பணிகளின்கீழ் நமது தேவைகள் எண் ணற்றவை. நடப்பு ஆண்டைப் போன்ற இடர் மிகுந்த ஓராண்டில், சமூகப் பணிகளைப் பெருக்க வேண்டுவது குறித்து மக்களின் அவாவினையும் தேவை களையும் முற்றிலும் நிறைவேற்ற இயலாத நிலையில் உள்ளோம். இருப்பினும், கல்வி, மருத்துவம், பொதுச் சுகாதாரம், தூநீர் வழங்கல், போன்ற வசதிகளைப் பெருக்கும் திட்டங்களைத்தான் பொதுமக்கள் பொருள் நிறைந்த திட்டங்களாகப் போற்றுவார்கள் என்பதை நாங்கள் முற்றிலும் உணர்ந்து, இத் துறைகளில் இயன்ற வரை பெருமளவிற்கு வசதிகளைப் பெருக்குவதற்கு வகை செய்ய முற்பட்டிருக்கிறோம். இப்போது திட்டத்தின் முக்கியமான சில வளர்ச்சித் தலைப்புகளின்கீழ் ஒதுக்கப் பட்டுள்ள நிதியளவுகளைப் பற்றியும், அவற்றின் வாயி லாக எய்தக் கருதியுள்ள குறிக்கோள்களைப் பற்றியும் நான் சுருங்கக் கூற விரும்புகிறேன்.

நடப்பு ஆண்டுக்குரிய திட்டத்தை உருவாக்கும் பொழுது, வேளாண்மை உற்பத்தி குறித்த திட்டங்களே நமது நிதி வசதியின் முதல் பொறுப்பாக விளங்கும் என்பது வெள்ளிடைமலை. தொடர்ந்து நடத்தப்பட்டு வந்த ஐந்தாண்டுத் திட்டங்களின்போது, நாட்டின் பொருளாதார மேம்பாட்டிற்கு, வேளாண்மைத் துறை யின் வலிவே அடிப்படையானது என்ற பேருண்மையை உணர்ந்து செயல்படாததாலேயே, இன்றைய நலிவுகள் நெளிகின்றன என்று விற்பன்னர்கள் எடுத்துக் காட்டி யுள்ளனர் என்பதையும், திட்டங்களை நடாத்தியவர் களும் தவற்றினை ஒப்புக்கொண்டுள்ளனர் என்பதையும் பேரவையினர் அறிவர் என்று கருதுகிறேன். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தை நமது மாநிலத்தில் துவக்கி நடத்தியபோது, அன்றைய அரசினர், 53 இலட்சம் டன்னைக் இருக்கும் உணவு உற்பத்தி, 70 இலட்சம் டன் அளவுக்கு உயரும் என்ற இனிப்பான நம்பிக்கையைத் தெரிவித்தனர். அதன்படி செம்மையான நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு உணவு உற்பத்தி வளர்ச்சி அடைந்திருப்பின், இன்றைய இன்னல் எழ நியாயமில்லை. ஆனால், 1965-66-ல் 52.59 இலட்சம் டன் அளவே உற்பத்தியாயிற்று. மூன்றும் திட்டம் முடி வடைந்து நான்காம் திட்டத்தில் அடி எடுத்து வைக்கும் போது, உணவு உற்பத்தியைப் பொறுத்த மட்டில், புறப் பட்ட இடத்திலேயே இருக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

## பசுந்தாள் பயிர் மூலம் நெல்லுக்குப் பாஸ்பேட் உரம் தரலாம்

'பாஸ்பேட்' உரத்தை நேரடியாக நெற்பயிருக்கு இடு வதைவிட பசுந்தாள் உரத்தின் வழியாக இடுவது மகசூலை அதிகரிக்கச் செய்கிறது என்று ஆடுதுறை விவசாய ஆராய்ச்சி நிலையத்தில் செய்த சோதனைகள் நிரூபித் துள்ளன. கொளுஞ்சி, பில்லி பசரா இரண்டிற்கும் பாஸ் பேட் உரத்தையிட்டுப் பயிராக்கி விளைந்த பசுந்தாளை நெற்பயிருக்கு உரமாக இட்டார்கள். இவ்வாறு பசுந்தாள் உரத்தின் வழியாக பாஸ்பேட் இடுவதால் மகசூலில் 41 சதவிகிதம் கூடுதல் காணுகிறது என்று கண்டறியப்பட்டது.

இந்நிலையில், நாம் வளர்ந்துவரும் நமது மக்கள் தொகையினரின் குறைந்த அளவு ஊட்டச் சத்துத் தேவைகளையேனும் நிறைவு செய்யும் முறையிலும், உணவு தானிய விலைவாசிகளை நியாயமான வரையறைகளுக்குள் கட்டுப்படுத்த வேண்டுமென்கிற நமது குறிக்கோள் நிறைவேறும் வகையிலும் மேலும் உற்பத்தியைப் பெருக்கியே ஆகவேண்டும்.

திட்ட இறுதிக்குள் உயரிய உற்பத்தி இலக்குகளை அடைவதை விட, விரைந்து பலன் தரும் திட்டங்களில் அதிக நாட்டம் செலுத்தி, ஆர்வத்தோடு உற்பத்தியைக் கணிசமாக நடப்பாண்டில் உயர்த்துவதே இன்றியமையாததாகும். இந்த ஆண்டில் வேளாண்மை உற்பத்தி எந்த அளவில் குவிந்து-உயர்ந்து நிற்கிறதோ அதையொட்டியே நான்காம் திட்டத்தின் வெற்றி அமையும்.

மிகு பயன் தரும் (High Yielding) விதைகளைப் பயன்படுத்தும் நிலப் பரப்பை எவ்வளவு விரிவாக்க முடியுமோ, அவ்வளவு விரிவாக்கி, உற்பத்தி அளவைப் பெருக்குவதே நடப்பு ஆண்டில் நமது வேளாண்மைத் திட்டத்தின் சிறப்புக் கூறாக அமையும். நமது மாநிலத்தில் 13.5 லட்சம் ஏக்கர் நிலங்களில் ADT-27 நெல் ரகத்தைப் பயிரிடுவதோடு, CO-25, CO-29 நெல் ரகங்கள், கலப்பினச் சோளம் CSH-I, கலப்பினக் கம்பு HB-I, போன்ற புதிய ரகங்கள் அதிக நிலப்பரப்பில் பயிரிடப்படும். மொத்தத்தில் மிகுபயன் தரும் புதிய வித்துக்களைக்கொண்டு பயிரிடும் திட்டம் 17.4 லட்சம் ஏக்கர் நிலங்களில் நிறைவேற்றப்படும். கடந்த ஆண்டு, இத்தகைய புதிய ரகங்களைக் கொண்டு பயிரிடப்பட்ட நிலப் பரப்பு 5·27 லட்சம் ஏக்கர் என்பதைக் காணும் போது, இந்த ஆண்டு இந்த அரசு எந்த அளவுக்கு இதிலே முன்னேற்றம் பெறத் திட்டமிடுகிறது என்பதை

## 2 லட்சம் எலிகள் வேட்டை

வலங்கைமான் பஞ்சாயத்து யூனியன் எல்லைக்குள், 50 கிராமங்களில் தொடர்ந்து நடைபெற்ற எலி வேட்டையில், சுமார் 2 லட்சம் எலிகள் கொன்று குவிக்கப் பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் 7 நாட்களுக்கு எலி ஒழிப்பு வாரம் நடைபெற்றது. நாள்தோறும் எல்லாக் கிராமங்களிலும் சராசரி 3,000 எலிகள் கொல்லப்பட்டன. ஒரே சமயத்தில் எல்லாப் பகுதிகளிலும் வரப்புகளை வெட்டி எலிகள் பிடிக்கப்பட்டன.

நெற் பயிர், முதற் பயிராக விளைவிக்கப்படும். இதை அறுவடை செய்த பின்னர், ASD-5, CO-32 நெல் ரகங்கள், 4 லட்சம் ஏக்கர் பரப்பில் இரண்டாவது பயிராகப் பயிரிடப்படும். காவிரிக் கழிமுகத்தில் பயிர் முறையில் செய்யக் கருதியுள்ள இம்மாறுதல், இப்போது ஒரு போகம் மட்டுமே விளைவிக்கப்படும் நிலங்களில் இருபோகப் பயிர்களை விளைவிக்க நாம் எடுத்துக் கொள்ளும் முயற்சியின் முடிமணியாக அமைந்து நமது உணவு உற்பத்தித் துறையில் புதியதோர் ஒளித் திருப்பத்தை உண்டாக்கும் என்பதில், மிகைப்படக் கூறல் எதுவுமில்லை.

புதிய பயிர் முறைகளில் மேன்மேலும் உற்சாகம் காட்டிவரும் தஞ்சை மாவட்ட உழவர் பெருமக்கள், இந்த திட்டத்தை வெற்றியோடு செயல்படுத்துவதற்குத் தேவையான எல்லா முயற்சிகளையும் மேற்கொள்வார்கள் என்பதிலும் அரசுக்குச் சிறிதும் ஐயமில்லை. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதில் உழவர்களுக்கு முழு ஒத்துழைப்பு நல்கும் வண்ணம், நமது வேளாண்மை வளர்ச்சிப் பணியாளர்களையும் ஆயத்தப்படுத்தி வருகிறோம்.

## மின்சார உற்பத்தித் துறையில் தனிப்பட்டோர் உரிமைகளை அரசு மேற்கொள்ளும்

உணரலாம். தஞ்சாவூர் மாவட்டத்தில் "பயிர் முறையில்" (Cropping Pattern) அரசு செய்யக் கருதியுள்ள மாற்றத்தின் காரணமாக, மிகுபயன் தரும் விதைகளைக் கொண்டு பல லட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிட முடியும்.

வழக்கமாக தஞ்சாவூர் மாவட்டத்தில் 3.2 லட்சம் ஏக்கர் நிலப் பரப்பில் மட்டுமே குறுவை பயிர் சாகுபடி செய்யப்படுகின்றது. அதையடுத்து இரண்டாவது பயிராக தாளடிப் பயிர் விளைவிக்கப்படுகிறது. பாசன வசதியுள்ள எஞ்சிய 9 லட்சம் ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப் பரப்பில், சம்பாப் பயிர் ஒரு போகமே பயிரிடப்படுகிறது. இப்போது நிறைவேற்றக்கூடியதென நாம் கருதும் புதிய பயிர் முறையின்படி சுமார் 3.2 லட்சம் ஏக்கர் பரப்பில் குறுவைப் பயிரும், அதையடுத்து தாளடி பயிரும் வழக்கம்போல் விளைவிக்கப்படும். வழக்கமான சம்பாப் பயிர் விளையும் 9 லட்சம் ஏக்கர் பரப்பில், 3 லட்சம் ஏக்கர் தொடர்ந்து ஒரு போக நிலமாகவே இருந்து வரும். ஏனைய 6 லட்சம் ஏக்கர் பரப்பில் ADT-27

தஞ்சாவூர் கழிமுகப் பகுதியில் உணவு தானிய உற்பத்தியைப் பெருக்கும் நமது திட்டம், இறைவைப் பாசனத்திற்கு வேண்டிய மின்சார வசதியை நீட்டித் தருவதில் ஏற்பட்ட முன்னேற்றக் குறைவால் பெரிதும் தடைப்பட்டுள்ளது. ஆதாய நோக்கத்தையே பெரிதும் கொண்ட தனிப்பட்ட மின்சாரம் வழங்கும் உரிமை பெற்றவர்களின் பொறுப்பில் இம்மாவட்டத்தின் பெரும் பகுதி உள்ளதால், வேளாண்மைப் பணிகளுக்காக மின்சார வசதியை விரிவாக்குவதில் அவர்கள் ஆர்வமுடையவர்களாய் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக, தஞ்சாவூர் மாவட்டத்தில், மின்சாரம் வழங்க உரிமை பெற்றவர்களுக்குக் கடன் வழங்குவதன் மூலம், கிராமங்களுக்கு மின்சார வசதியைப் பெருக்குவதற்காக அரசு மிகவும் முயன்று வந்துள்ளது. ஆனால், இதுவரை கண்டுள்ள முன்னேற்றம் கணிசமானதாக இல்லை.

உணவு உற்பத்தியின் பொருட்டு, வடிமுனைக் குழாய்க் கிணறுகளுக்கும், கிணறுகளுக்கும் மின்சாரம் வழங்கும்

அமைப்பை விரிவாக்கி, அதன் மூலம், இருபோகம் விளை வித்தலைப் பெருக்க, மாபெருந் திட்டமொன்றை மேற் கொள்ள வேண்டியது மிகவும் இன்றியமையாதது என் பதை அரசு உணருகிறது. எனவே, தஞ்சை மாவட்டத் தில் இயங்கி வருகின்ற கும்பகோணம் மின்சார வழங்கு உரிமம், 1930, நாகைப்பட்டினம் மின்சார வழங்கு உரிமம் 1933, மாயவரம்-மன்னார்குடி-திருவாரூர் மின்சார வழங்கு உரிமம், 1933, ஆகிய மூன்று தனிப்பட்டோர் உரிமங்களையும், காலதாமதம் ஏதுமின்றி, மேற்கொள்ள வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது. இம்முடி விற்கிணங்க, தமிழக அரசினால், 1954 தமிழக மின்சாரம் வழங்கும் நிறுவனங்களைக் கைவசமாக்கும் சட்டம் 4(1)-வது பிரிவின் கீழ், ஓர் அறிவிப்பு வெளியிடப்படும். உரிமம் பெற்றவர்களுக்கு அடுத்த நிதி ஆண்டில்தான் இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டி வருமாதலால், நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கத் திற்கான வகை ஏதும் செய்ய வேண்டிய தேவை இல்லை.

## ரசாயன உர வினியோகமும் சிறு பாசன வசதிகளும்

மாநில அரசு மிகுந்த அக்கறையுடன் திறமை மிக்க அதிகாரிகள் திட்டித் தரும் திட்டத்தின் மூலம் உணவு உற்பத்தியைப் நாம் விரும்பும் அளவுக்குப் பெருக்க முனையும்போது, அத்திட்டத்தின் வெற்றிக்கு இன்றியமையாத இரசாயன உரம் வழங்குவதில், மத்திய அரசு முழு அளவு ஒத்துழைக்க வேண்டியது தேவை யாகும். ஆனால், இராசயன உர வகைகள் வழங்குவதில் ஏற்பட்டுள்ள கடும் பற்றுக்குறைதான் பெருந் தடையாக இருந்து வந்துள்ளது. மத்திய அரசு நமது மாநில அரசின் தேவை அளவு அறிந்து உரம் ஒதுக்கருவதில்லை. ஒதுக்கிய அளவு முழுவதையும் கூடத் தருவதில்லை.

நடப்பாண்டில் 1.63 லட்சம் டன் நைட்ரஜன் உரங்க ளேனும் அல்லது 8.15 லட்சம் டன் அம்மோனியம் சல்பேட் உரங்களேனும் நமக்குத் தேவைப்படும். இதற்கு எதிராக 83 ஆயிரம் டன் நைட்ரஜன் உரங்கள் மட்டுமே அல்லது 4.10 லட்சம் டன் அமோனியம் சல்பேட் உரங்கள் மட்டுமே இந்திய அரசு ஒதுக்கக் கருதியுள்ளது. அதா வது, நமது உரத் தேவையில், ஏறக் குறைய பாதியள வுக்கே வழங்குவதாக மத்திய அரசு கூறியுள்ளது.

நாட்டின் நலிவு போக்க ஒரேவழி உணவு உற்பத்திப் பெருக்கமே என்ற நல்லுரையைக் கூறிடும் மத்திய அரசு, அதற்கான திட்டத்தை மாநில அரசு முனைந்து மேற் கொள்ளும்போது, உரம் வழங்குவதில் இப் போக்கினில் இருப்பது காண, விந்தை நிரம்பிய வேதனை அடை கின்றோம்.

பெரிதும் தேவைப்படுகிற உர வகைகளில் எஞ்சிய அளவையும் நாம் பெறுவோமென்ற நம்பிக்கையின் மீதே நமது திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. மிகு பயன் வித்துக்கள் திட்டத்தை, உர வகைகள் வழங்குவதன் மூலம் முற்றிலும் ஆதரிப்பதாக இந்திய அரசு நமக்கு உறுதியளித்துள்ளது. எனினும், நமக்குத் தேவைப் படும் உரங்கள் முழுவதையுமோ, அல்லது ஏறத்தாழ அதற்கு நிகராகவோ உள்ள அளவிற்கு வழங்கும் வகை யிலே நமக்கு உறுதியளிக்க வேண்டுமென்று விழை கிறோம். நமது மாநில உழவர் பெருமக்கள் முற்போக்கு எண்ணமுடையவர்கள். தூண்டாமணி விளக்குப் போன்ற வர்கள். ஆதலால், உர வகைகளை இன்னும் அதிக அளவில் பயன்படுத்துமாறு அவர்களைத் தூண்டுவதற்கு சிறப்பான முயற்சிகள் எதையும் மேற்கொள்ள வேண் டிய தேவையில்லை. முனைப்பான பயிர் விளைச்சல் திட்டங் கள் இனிதே நிறைவேறும் வகையில், உரிய காலத்தில் போதிய அளவுக்கு உர வகைகளை வழங்க வேண்டிய இன்றியமையாத் தேவையை உணர்ந்து, நமது வேண்டு கோளுக்கு மத்திய அரசு முற்றிலும் செவி சாய்க்குமென நம்புகிறோம்.

நடப்பு ஆண்டிற்குரிய நமது திட்டத்தைத் தயாரிக் கையில், சிறு பாசனத் திட்டங்களின் சிறப்பினைப் பற்றியும் நாம் நன்கு உணர்ந்துள்ளோம். ஏரிகளையும் ஏனைய சிறு பாசன ஆதாரங்களையும் புதுப்பிப்பதோடு கூடவே, கிணறுகள், துளைக் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் ஆகிய இவற்றைத் தோண்டுவதிலும், இன்று கடைப் பிடித்துள்ள விரைவு சிறிதும் நெகிழாமல் அரசு பார்த்துக் கொள்ளும். இறைவைப் பாசனத்திற்கு கூடு தல் மின்சார வசதி அளிப்பதன் வாயிலாக, இத் திட்டத் திற்கு மேலும் ஆக்கம் அளிக்கப்படும். கிணறுகள் தோண்ட கடன்கள் வழங்குவதற்கென சமுதாய வளர்ச் சித் தலைப்பிலிருந்து ஒதுக்கப்படும் 233 லட்சம் ரூபாயும், மத்திய நில அடமான வங்கியின் கடன் பத்திரங்களில் அரசு முதலீடு செய்யப்படக்கூடிய தொகையான 1 கோடியே 50 லட்சம் ரூபாயும் சேர்த்து, நடப்பு ஆண்டில் சிறு பாசனத் திட்டங்களுக்காக 11 கோடியே 69 லட்சம் ரூபாய் செலவு செய்யப்படும். கிராம மின்சாரத் திட்டத் திற்காக, இடைக்காலத் திட்டத்தில் வகை செய்திருந்த 4 கோடி ரூபாய் நிதி ஒதுக்கத்தை, 6 கோடி ரூபாய் அளவிற்கு இப்போது உயர்த்தியுள்ளோம்.

திட்டத்தில் வகை செய்திருக்கிற தொகைகளுக்குமேல், நடப்பு ஆண்டில் ஏறக்குறைய 20 கோடி ரூபாய் அள விற்கு முதலீடு செய்திடின், மாநிலத்தின் உணவு உற் பத்தியும், அதன் விளைவாகக் கிடைத்திடும் வளமும் மகிழத்தக்க அளவினதாக்கும் என்பது உறுதி. ஆனால்,

(26-ம் பக்கம் பார்க்க)

### 4,533 பேர்களுக்கு அறுவைச் சிகிச்சை

**கோயம்புத்தூர் மாவட்டத்தில் இதுவரை 4,533 பேர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டுள்ளது. இம்மாவட்டத்திற்கு, 1967-ம் ஆண்டிற்குரிய திட்ட இலக்கின்படி 16,400 பேர் களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட வேண்டும். சிகிச்சைக்குத் தகுதியுள்ள குடும்பங்கள் பற்றிய விவரங்களைத் தயாராக வைத்திருக்கும்படியும், அக் குடும்பங்களுடன் அடிக்கடி தொடர்பு கொண்டு, இச் சிகிச்சைக்கு இசையுமாறு இவர்களைக் கேட்க வேண்டுமென்றும் வட்டார வளர்ச்சி அதிகாரிகள் கோரப்பட்டுள்ளார்கள்.**

## உள்ளாட்சி அமைச்சர் வழங்கிய கொள்கை விவர அறிக்கை

8-ம் பக்கத் தொடர்ச்சி

மாநில அரசினையும், மத்திய அரசினையும் நம்பிக் கொண்டிருப்பதோடு நில்லாமல் தமக்குத் தேவையான நிதியைப் பெருக்க இவ்வமைப்புகள் மேலும் முயலவேண்டும் என்பதையும், வரிகளை முறையாக விதித்து அவற்றைத் தவறாது வசூலிக்க வேண்டும் என்பதையும் இந்த அரசு அவர்களுக்கு அடிக்கடி வற்புறுத்தி வருகின்றது. இம்முயற்சிக்குப் பொது மக்கள் பெரிதும் துணை நிற்பார்கள் என்று நம்புகிறேன்.

அடுத்து நான் எடுத்துரைக்க விரும்புவது கதர்-கிராமக் கைத்தொழில் பற்றியது.

கதர்-கிராமக் கைத்தொழில்களுக்கு இந்த அரசு எந்த வகையிலும் எதிரியல்ல என்பதை இந்த நேரத்தில் இம்மாமன்றத்தின் கவனத்திற்கு வைக்கின்றேன். மாறாக, இத்துறையில் ஏற்படும் வீண் விரயங்களைப் போக்கி, இலாபகரமானதாக்கி, இது எல்லா மக்களுக்கும் பொதுவானது என்னும் நிலையை உருவாக்க வேண்டுமென்பதே இந்த அரசின் எண்ணமாகும்.

கதரும் கிராமத் தொழில்களும் அரசின் தனித் தனித் துறைகளால் நிருவகிக்கப்பட்டு வந்ததை ஒருங்கிணைத்து செவ்வையான முறையில் நடத்துவதற்குக் கதர், கிராமக் கைத்தொழில் ஆயம் தோற்றுவிக்கப் பட்டது. கதர் வளர்ச்சியும் கைத்தொழில் வளர்ச்சியும் இந்நிறுவனத்தின் மேற்பார்வையில் இயங்கி வருகின்றன. இதற்கான நிதி வசதியில் பெரும் பகுதி பம்பாயிலுள்ள அகில இந்தியக் கதர்-கிராமத் தொழில் நிறுவனத்திடமிருந்து மானியமாகவும் கடனாகவும் கிடைக்கிறது. மேற்கொண்டு தேவைப்படும் செலவினங்களைத் தமிழக அரசு உதவி வருகின்றது.

### நூற்பாளர், நெசவாளர் ஊதியம்

இத் திட்டத்தினால் சுமார் 1,09,862 நூற்பாளர்களும் நெசவாளர்களும் பயனடைகின்றனர். 1966–67-ல் அவர்கட்கு 106·99 இலட்ச ரூபாய் ஊதியமாக வழங்கப் பெற்றது. 1966 நவம்பர் வரை 505 ஆறு கதிர் இராட்டைகள் மாற்றிக் கொடுக்கப்பெற்றன. மேலும் 835 டெக்ஸ்டூல் இராட்டைகளும் தரப்பெற்றன. பழைய இராட்டையில் தினசரி ரூ. 1·60 ஊதியம் பெறுபவர் டெக்ஸ்டூல் இராட்டை மூலம் ரூ. 2·40 வரை ஊதியம் பெற வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. 1966–67, 1967–68 ஆண்டுகளில் முறையே வரவு-செலவுப் புள்ளி விவரங்கள் வருமாறு:

| | | 1966–1967. (இலட்சம்.) ரூ. | 1967–68 (இலட்சம்.) ரூ. |
|---|---|---|---|
| வரவு: | கதர்-கிராமத் தொழில் நிறுவனத்தின் மூலம் (மான்யம்). | 71·29 | 66·59 |
| | இலாகாவின் மூலம் (விற்பனைப் பொருள்கள்). | 243·41 | 269·99 |
| | | 314·70 | 336·58 |
| | காதி கமிஷன் கடனுதவி | 66·40 | 60·78 |
| | செலவு .. .. | 324·44 | 357·67 |

### தமிழ்நாட்டில் உள்ள கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை

| வரிசை எண். (1) | மாவட்டம். (2) | கிராமங்கள். (3) | குக்கிராமங்கள். (4) |
|---|---|---|---|
| 1. | செங்கற்பட்டு | 2,331 | 1,092 |
| 2. | வட ஆர்க்காடு | 2,024 | 1,682 |
| 3. | தென் ஆர்க்காடு | 2,370 | 1,637 |
| 4. | தஞ்சாவூர் | 2,366 | 3,810 |
| 5. | திருச்சிராப்பள்ளி | 1,401 | 5,416 |
| 6. | மதுரை | 1,148 | 3,220 |
| 7. | இராமநாதபுரம் | 1,452 | 4,420 |
| 8. | சேலம் | 881 | 3,003 |
| 9. | கோயம்புத்தூர் | 988 | 5,371 |
| 10. | நீலகிரி | 54 | 585 |
| 11. | திருநெல்வேலி | 1,043 | 3,443 |
| 12. | கன்யாகுமரி | 64 | 1,046 |
| 13. | தர்மபுரி | 718 | 2,967 |
| | மொத்தம் .. | 16,840 | 37,692 |

1967–68-ல் கதர் உற்பத்தியின் மதிப்பு ரூ. 211 இலட்சம் என எதிர்பார்க்கப்படுகிறது. இத்தொகையில் பட்டாடை உற்பத்தியின் மதிப்பாக உள்ள ரூ. 49 இலட்சமும் சேரும். தமிழக அரசு 1966–67-ல் 12 இலட்சம் மானயமும் ரூ. 9 இலட்சம் கடனுமாகக் கொடுத்துதவியுள்ளது. 1967-68-ல் 12 இலட்சம் மானயமும் 16 இலட்சம் கடனுமாகக் கொடுத்து உதவுகிறது.

தமிழகத்தில் 161 விற்பனை நிலையங்களும், இராமநாதபுரம் மாவட்டத்தில் கமுதி என்னுமிடத்தில் ஒரு பயிற்சி நிலையமும், திருப்பூர், ஈரோடு ஆகிய இடங்களில் இரண்டு சாய அச்சுத் துறை நிலையங்களும் இயங்கி வருகின்றன. சென்ற ஆண்டில் ரூ. 203 இலட்சம் மதிப்புள்ள கதர் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

### கிராமத் தொழில்களில் வேலைவாய்ப்பு.

கூட்டுறவுச் சங்கங்கள், கதர்–கிராமத் தொழில் நிறுவனம் ஆகியவற்றின் நேரடிக் கண்காணிப்பில் கிராமத் தொழில்கள் செயல்பட்டு வருகின்றன.

1966–67-ம் ஆண்டு வரவு-செலவு விபரமும், 1967–68-ஆம் ஆண்டு எதிர்பார்க்கப்படும் புள்ளி விவரங்களும் பின்வருமாறு:—

| | | 1966–67 (இலட்சம்). | 1967–68 (இலட்சம்). |
|---|---|---|---|
| வரவு— | கதர்-கிராமத் தொழில் நிறுவனத்தின் மூலம் (மான்யம்). | 26·68 | 28·44 |
| | இலாகாவின் மூலம் (விற்பனைப் பொருள்கள் மூலம்). | 29 53 | 37·09 |
| | | 56·21 | 65·53 |
| | செலவு .. .. | 70·59 | 80·37 |
| கடன் | நிலை—கதர்-கிராமத் தொழில் நிறுவனத்திடமிருந்து பெறும் தொகை. | 228·41 | 152 85 |

### உள்ளாட்சி அமைச்சரின் விளக்கம்..

இத் துறைக்கு 1966-67-ல் தமிழக அரசு ரூ. 14 இலட்சம் மான்யமாகத் தந்துள்ளனர். 1967-68-ல் ரூ. 15 இலட்சம் ஒதுக்கப் பெற்றுள்ளது.

சென்ற ஆண்டு 2,57,368 பேர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் மூலம் அவர்கள் பெற்ற ஊதியம் ரூ. 269·57 இலட்சம். இவர்கள் உற்பத்தி செய்த பொருள்களின் மதிப்பு ரூ. 753 இலட்சமாகும்.

சென்ற ஆண்டிலிருந்தே கருமான் தொழிலும் தச்சுத் தொழிலும் கதர் கிராமத் தொழில் ஆயத்துடன் இணைக்கப்பெற்றாலும், இத் தொழில்களின் இன்றியமையாமையை நோக்கி விரைவில் உதவியளிக்கக் காதிக் குழுவைக் கேட்டுக்கொள்ள வேண்டும்.

(1) இத் தொழிலாளர்கள் தமக்குத் தேவையான மூலப் பொருளை வாங்குவதற்குரிய கடன் வசதி, அவற்றை உருவாக்குவதற்குரிய தொழில் வசதி, உருவான பொருள்களை விற்பதற்குரிய வியாபார வசதி ஆகியவை செய்யப் பெற, ஒருங்கிணைந்த ஒரு கூட்டுறவு முறையில் அவர்கள் தொழில்படுவதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டும். இக்கூட்டுறவு நிறுவனம் அந்த வட்டாரத்தின் தண்ணீர் இறைக்கும் மின்பொறி உட்பட விவசாயத் தேவைகளைப் பூர்ததி செய்யும்.

(2) தற்போது மாநில ஆயம் பனை நார் சேகரிப்புத் தொழிலில் ஈடுபட்டுச் சென்ற ஆண்டில் 37 இலட்சம் ரூபாய்க்குப் பனை நார் ஏற்றுமதி செய்துள்ளது. என்றும் பிற நாடுகளில் நம்முடைய கச்சாப் பொருளைப் பயன்படுத்திச் செய்யப்படும் துடைப்பான்களை (Brush) வரவழைத்து அவை செய்யப்பெற்றுள்ள வகையை ஆய்ந்து நாமே துடைப்பான்களைத் தயாரித்தல் நலமாக இருக்கும். இதற்கான செயல் முறைகள் பரிசீலிக்கப் பட்டு வருகின்றன.

(3) ஆண்டு ஒன்றுக்கு 2 கோடி ரூபாய் பெறுமான முள்ள எண்ணெயும் பிண்ணாக்கும் சென்னை மாநிலம் உற்பத்தி செய்கிறது. செக்கின் மூலம் ஆட்டப்படும் கடலைப் பிண்ணாக்கில் ஓரளவு எண்ணெய் தங்கிவிடுவதால், அதனைப் பிரித்தெடுக்கும் கருவி (Solvent Extraction Plant) தென்னார்க்காடு மரவட்டம் போன்ற ஒரு மாவட்டத்தில் இருக்குமேயானால், தொழிலாளர்கள் இன்னும் அதிகமாகப் பயன்பெறக்கூடும். இங்ஙனம் பிரிக்கப்பட்டப் பிண்ணாக்கைக் கலவை உரத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அனைத்திந்தியக் கிராமத் தொழிலபிவிருத்திக்கு நான்காவது திட்டத்தில கேட்டிருந்த ரூ. 104 கோடியில் ரூ. 40 கோடிதான் ஒதுக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். கிராமங்களில் தொழில்கள் வளர வேண்டுமானால், இத்தொகை போதுமானதாக இராது என்பதை மத்திய அரசுக்கு வலியுறுத்த இம் மாமன்றம் ஒருமனதாக முன்வர வேண்டும் என வேண்டுகிறேன்.

### கண்மாய்ப் படுகையில் கருவேல மரங்கள்

தர்மபுரி மாவட்டத்தில் கிழமங்கலம் ஊராட்சி ஒன்றியத்தில் 115 ஏக்கர் கண்மாய்ப்படுகையில் கருவேல மரங்கள் நடப்பட்டுள்ளன. அந்த வட்டாரத்தில் எல்லா கண்மாய்ப் படுகைகளிலும் இந்த மரங்களை நடுவதென தீர்மானிக்கப்பட்டுள்ளது.

காதி-கிராமத் தொழில் ஆயத்தின் வைப்புத் தொகைக்கு மாநில அரசு, மின் கழகத்திற்கு வழங்குவதுபோல் வட்டி தரக்கூடுமானால், மானியத் தொகையில் குறைந்தது 5 இலட்சம் குறைக்க வழியுண்டு.

இதுவரை கூறியவற்றிலிருந்து இவ்வமைப்புகளின் பொறுப்பு எவ்வளவு சிறப்பு வாய்ந்தது என்பதை அறியலாம்.

#### பொதுநலமே சுயபலமாகும்

எனவேதான் இந்த உள்ளாட்சி மன்றங்களில் ஏற்படும் வீண் விரயங்களைத் தடுக்கவும், வேண்டாத பதவிகளை மாற்றியமைக்கவும், வேண்டியவைகளை உருவாக்கவும் இந்த அரசு விரும்புகிறது.

இம்மன்றங்கள் கிராமங்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றும் அமைப்புகள் என்ற அந்த அளவோடு நின்று, காய்தல் உவத்தல் அகற்றி, கட்சி மாச்சரியங்களை மறந்து, அனைவரும் ஒரு குடும்பத்தைச் சார்ந்தவர்கள் என்னும் உணர்வோடு செயலாற்றுமானால் சிறப்பான பணியாற்ற முடியும். இம்முறையில் செயலாற்ற வேண்டுமென வேண்டுகிறேன்—செயலாற்றுமென நம்புகிறேன்.

இத்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரும், அரசுக்கும், பொது மக்களுக்கும் இடையில் நற்றூதுவர்களாகி நின்று, தமக்குக் கிடைத்துள்ள இப்பொறுப்பு பொது மக்களுக்குச் சேவை செய்வதற்குக் கிடைத்துள்ள அரியதொரு வாய்ப்பு என்னும் தியாக உணர்வோடு அரசுடன் ஒத்துழைக்கவேண்டும் என வேண்டுகிறேன்.

சமுதாய வளர்ச்சித்துறை மேலும் நன்கு செயல்பட்டு பொலிவும் வலிவு முடையதாயும், ஒப்பிலாததாயும், உலகத்திற்கொரு புதுமையானதுமாய சமுதாயம் அமைக்கத்தக்க ஆக்கபூர்வமான கருத்துக்களை வழங்குமாறு மன்றத்தின் மாண்புமிகு உறுப்பினர்களை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இவற்றை எடுத்து விளக்க இடமளித்த மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களுக்கு என் நன்றி. வணக்கம்!

மா. முத்துசாமி,
உள்ளாட்சித் துறை அமைச்சர்.

# சோவியத் பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் அளித்த வரவேற்பு

**சோவியத் பத்திரிகையாளர்** குழு ஒன்று தமிழ் நாட்டில் ஏற்பட்டு வரும் பலதிறப்பட்ட வளர்ச்சியை நேரில் கண்டறிந்து கொள்வதற்காக மூன்று நாட்கள் சென்னையில் தங்கியிருந்தனர். இவர்களில் ஒருவர், சோவியத் யூனியனைச் சார்ந்த "கிர்கீஸ்" என்ற மாநிலத்தின் அமைச்சர். மற்றொருவர், வார இதழ் ஒன்றின் ஆசிரியர்.

தமிழக அரசின் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள், மாமல்லபுரத்தில் சோவியத் பத்திரிகையாளருக்கு வரவேற்பு விருந்து அளித்தார். அதில் அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்களும் கலந்து கொண்டார்.

விருந்தை அடுத்து, உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் சுவை மிகுந்த தமிழில், இனிய சொற்பொழிவாற்றினார். அவர் பேசியதன் சுருக்கம் வருமாறு :

"தமிழ் நாட்டுக்குச் சிறந்த வரலாறு உண்டு. உலகத்தின் தலை சிறந்த மொழிகளில் ஒன்று தமிழ் மொழியாகும். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்பது நமது பண்பாடு. வந்தவர்களை வரவேற்று, வாழவைத்த பெருமை நமக்குண்டு. பழைய காலத்து ரஷ்ய மக்களைப் போலவே, இங்கும் ஒரு சில ஆண்டுகள் இந்நாட்டு மக்கள் அடங்கி, ஒடுங்கிக் கிடந்த பின்னர், எழுச்சி பெற்று சுதந்திரம் பெற்றனர். நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், சமுதாயத் துறையில் மறுமலர்ச்சி ஏற்பட்டு வருவதைக் காண்கிறோம். அதற்காக அயராது பாடுபட்டு வருகிறோம்.

ரஷிய நாடு அளிக்கும் உதவிகளை நாங்கள் மறக்கமாட்டோம். உலகம் முழுவதும் செழிப்பாக இருக்க, அனைவரும் சேர்ந்து பாடுபடும் முயற்சிக்கு, நமது ஒத்துழைப்பு எப்போதும் உண்டு. எங்கள் இதயத்தை, அன்பை, பண்பை, கலையை, உழைப்பை உங்களுக்குக் கொடுத்தனுப்புகிறோம். அத்துடன் ஏழ்மையையும் சேர்த்துக் கொடுக்கிறோம், நீங்கள் அதை துடைப்பீர்கள் என்ற நம்பிக்கையில். உடம்பில் ஒரு பகுதியில் கோளாறு இருந்தால் நன்மை இல்லை. அது போல, உலகின் எந்தப் பகுதியில் ஏழ்மையும் பற்றுக் குறையும் இருந்தாலும் கூட அது, மனித சமுதாயத்தின் பொது நலனுக்கு ஏற்றதல்ல. இந்த உண்மையை நாங்கள் நன்கு உணர்ந்துள்ளோம்.

இந்த நாட்டு மக்களின் இதயங்கனிந்த அன்பை தமிழக முதலமைச்சர் சார்பாகவும், எனது சார்பாகவும் தமிழ்நாட்டு மக்கள் அனைவரின் சார்பாகவும், உங்கள் நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரிவித்துக்கொள்கிறோம். நம்முடைய நட்புறவு, உலக சமாதானத்துக்கு வழி வகுக்க வேண்டும் என்பது எனது ஆவல். இன்பம் தத்தித் தவழும் உலகை உண்டாக்கும் முயற்சியில், நாம் ஒன்று சேர்ந்து ஒத்துழைப்போமாக.

உழைப்பின் தரத்தாலேயே உலகத்தின் பல்வேறு கொடுமைகளையும் நாம் தகர்த்தெறிய முடியும். வரலாறு உள்ள வரையில் லெனின் போன்ற அரசியல் தலைவர்கள் ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை யாரும் மறக்க முடியாது. இதுவே நமக்கு வரலாறு புகட்டும் பாடமாகும்."

அமைச்சர் ஆற்றிய உரைக்குப் பின்னர், சோவியத் பத்திரிகையாளர் குழுத் தலைவர், மேன்மை தங்கிய **அசன் பெத் தக்கம் பேவ்** கூறியதாவது :—

"நமது நாட்டு வரலாறுகளை, நீங்கள் நன்கு அறிந்திருக்கிறீர்கள். தேசியப் பண்பாடு என்பது, இப்போது உலகெங்கும் ஒன்று கலந்து விரிவாகி,

தழைத்தோங்கி வருவதை, நாம் காண முடி கிறது. சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முன்பு, அந்நியர் பலர் உங்கள் நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டதை அறிகிறோம். கடைசியாக, பிரிட்டிஷ் ஆதிக்கத்தை எதிர்த்து நீங்கள் வெற்றி கண்டீர்கள். அதையடுத்து நாட்டு வளர்ச்சியில், நீங்கள் மிகவும் முன்னேறி வருகிறீர்கள்.

உங்கள் நாட்டில், நாங்கள் தங்கிய ஒரு சில நாட்களில் நீங்கள் சாதித்துள்ள மாபெரும் தொழிற்சாலைகளையும், கிராம வளர்ச்சித் திட்டங்களையும் கண்டு மகிழ்ந்தோம். குறிப்பாக, அண்மையில், நாங்கள் கேரள மாநிலத்திற்குச் சென்றபோது, குழந்தைகள், மகளிர் நல மன்றங்கள் அளித்த வரவேற்பைக் கண்டோம். அதே போல், இங்கே உள்ள கிராம மக்கள் அளித்த உளமார்ந்த வரவேற்பையும், கலை நுட்பம் செறிந்த அன்புப் பரிசுகளையும் கண்டு, ரஷ்ய மக்களின் சார்பாக, நாங்கள் பரவசமடைகிறோம். நீங்கள் அளித்த பரிசுகள், இந்த நாட்டின் கைத்தொழில் திறனையும், கலையாற்றலையும் திறம்பட எடுத்துக் காட்டுகின்றன. நீங்கள் அளித்த வரவேற்புக்கு, சோவியத் நாட்டு மக்கள் அனைவரின் சார்பாக, எங்கள் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்."

அவ்வமயம், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் செயலாளர் திரு டி. ஏ. எஸ். பால்கிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்., கிராம வளர்ச்சி நெறியாளர் திரு வி. நடராசன், ஐ.ஏ.எஸ்., செங்கற்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு லட்சுமி காந்தன் பாரதி, ஐ.ஏ.எஸ். ஆகியோரும் விருந்தில் கலந்து கொண்டு, கிராம வளர்ச்சி பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். உள்ளாட்சித் துறை அமைச்சர், சோவியத் பத்திரிகையாளர்களுக்குத் தமிழ் நாட்டிலுள்ள கிராமத் தொழில் நிலையங்களில் தயாரான சில அரிய பொருட்களை, அன்பளிப்பாக அளித்தார். தோற்பை, பனை ஓலையால் செய்யப் பெற்ற வனப்புடைய பொருட்கள், உலகப் புகழ் பெற்ற திருக்குறள் ஆசிரியர் திருவள்ளுவரின் திரு உருவம் (பனை ஓலையில் கலை நுட்பத்தோடு வரையப் பெற்றது) முதலிய அன்பளிப்புகள் சோவியத் பத்திரிகையாளரால் பெரிதும் பாராட்டப் பெற்றன. முதல் அமைச்சரின் ஆலோசகரான திரு நல். முருகேச முதலியார் அவர்கள், இக் குழுவின் தலைவரைக் கண்டு கிராம வளர்ச்சி பற்றிய பொதுவான கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.

ஜூன் 22,23 தேதிகளில், சென்னை நகரிலுள்ள தொழில் பேட்டை, ரயில் பெட்டிகள் தயாரிக்கும் நிலையம், "இந்து", "தினத்தந்தி" பத்திரிகை அலுவலகங்கள் முதலியவற்றை அவர்கள் பார்வையிட்டதோடு, தமிழக செய்தி அமைச்சர் ராஜாஜி மண்டபத்தில் அளித்த விருந்திலும் கலந்து கொண்டு, முதலமைச்சர் உள்பட, பல்வேறு பத்திரிகையாளருடனும், அரசாங்க அலுவலர்களுடனும் கலந்து பேசினார்கள். அவர்கள் ஜூன் 26-ம் தேதி, செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள வட்டாரங்களுக்குச் சென்று கிராம வளர்ச்சித் திட்டங்களை பார்வையிட்டார்கள். காட்டாங்கொளத்தூர் வட்டாரத்துக்குச் சென்று சிங்கப்பெருமாள் கோயில் ஊராட்சித் தலைவர் திரு சி. என். சந்திரசேகரன், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் திரு பழனிசாமி, மற்றும் அங்குள்ள மக்களின் பிரதிநிதிகள் பலரையும் சந்தித்து அன்புடன் அளவளாவினர். சோவியத் பத்திரிகையாளர்கள், கிராம வளர்ச்சி பற்றியும், மக்களின் பங்கையும், சிங்கபெருமாள்கோயில் ஊராட்சி மன்றத்திற்கு வருகை தந்த போது, நேரில் அறிந்து, கிராம மக்கள் பயனடைவதற்காக உருவாகியுள்ள படிப்பகம், நூலகம், வானொலி ஏனைய வசதிகளனைத்தையும் பாராட்டினர். பிறகு அவர்கள் மாமல்லபுரம் சென்று அங்குள்ள சிற்பக் கலை மிளிரும் கடற்கரைக் கோயிலையும், கல் ரதங்களையும் கண்டு மகிழ்ந்தனர்.

சோவியத் பத்திரிகையாளர்கள், தமிழ் நாட்டில் கிராம வளர்ச்சிக்கான நீர்ப்பாசனம், மின் வசதி, சிறந்த விவசாய முறைகள், ஆழமாக உழுவது, கால் நடை விருத்தி, கிராம மக்களிடையே செய்தி பரவல் முறை போன்ற பல சிறப்புத் திட்டங்கள் நிறைவேறி வருவதை நேரில் பார்த்துப் பாராட்டியதுடன், தமிழ்நாட்டிலே அவர்களது குறுகிய கால பயணம் அவர்களுடைய உள்ளத்திலே என்றும் மங்காது நீடித்து நிலைத்து இருக்குமென்றும் கூறினர்.

அவர்கள் 27-ந் தேதியன்று சென்னையிலிருந்து புறப்பட்டு டெல்லி சென்றார்கள். அவ்வமயம் சென்னை விமான நிலையத்தில் செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அம்மையார், கலைச்சின்னம் ஒன்றை அவர்களுக்குப் பரிசாக அளித்தார். செய்தித் துறை நெறியாளர் பொறுப்பு வகிக்கும் திரு கூ. ஏ. வாசுதேவன் அவர்களும் மற்ற அன்பர்களும் அவர்களை வழியனுப்பி வைத்தனர்.

(இந்நிகழ்ச்சிகள் பற்றிய படங்களை 21-ம் பக்கத்தில் காண்க).

## ராட்சச உருளைக்கிழங்கு

மாஸ்கோ பகுதிகளின் அனிஸ்கினு கிராமத்தில் ராட்சச உருளைக்கிழங்கு விளைகிறது. இக் கிழங்கின் எடை 1,130 கிராம். ஒரு பெரிய குடும்பத்திற்கு விருந்து சமைக்க இது போதுமானது.

சோவியத் யூனியனில், தானியத்திற்கு அடுத்தபடியான முக்கிய பயிர் உருளைக் கிழங்குதான். சோவியத்தில் 3,900,000 ஹெக்டர்களுக்கும் அதிகமான நிலங்களில் உருளைக்கிழங்கு பயிர் செய்யப்படுகிறது. ரஷ்ய சமஷ்டியில் 2,300.000 ஹெக்டர்கள் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு பயிராகிறது.

சமீபகாலமாக, இயந்திரங்களை அதிக அளவில் உபயோகிப்பதாலும், புதிய விஞ்ஞான முறையில் பயிர் செய்வதாலும் உருளைக்கிழங்கு ஒரு லாபகரமான பயிராக உள்ளது.





படம் 1—அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் 22—6—67-ல், சோவியத் பத்திரிகையாளர்களுக்கு அளித்த வரவேற்பில் முதலமைச்சரும் மற்ற அமைச்சர்களும் கலந்து கொண்டனர், குழுத்தலைவர் (இடமிருந்து இரண்டாவது) முதலமைச்சருடன் அளவளாவல்.

படம் 2 - 27—6—67-ல் அக்குழு டில்லிக்குப் புறப்பட்டுச் சென்றபோது விமான நிலையத்தில் செய்தி அமைச்சர், மாமல்லபுரம் கடற்கரைக் கோயிலின் கலைச்சின்னம் ஒன்றை அன்பு நினைவாகப் பரிசளித்தார்.



படம் 3—26—6—67-ல். மாமலலபுரத்தில் உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு முததுசாமி அவர்கள், குழுவினருககு அளிதத விருந்தின இறுதியில் தமிழகத்தின் கிராமக் கைத்தொழிலகளின் சிறபபை விளககும் சில கலைப் பொருட்களை (திருவளளுவரின் உருவம் உள்பட) அன்பளிபபாகத தரும் காட்சி.



படம 4—கிராம வளர்ச்சி பற்றி. முதலமைச்சரின் சிறபபு ஆலோசகர், திரு நல். முருகேச முதலியார், செங்கை மாவட்ட ஆட்சித் தலைவா. திரு கே. லக்ஷ்மிகாந்தன் பாரதியுடன், கலந்து பேசினர்.









படம் 1—புது டில்லியில் நடைபெற்ற பத்திரிகை நிருபர்கள் கூட்டத்தில, உலக ப்ராங்கியின தலைவர் திரு ஜார்ஜ் உட்ஸ் அவர்கள, நமது நாட்டின் நிதி நிலைமை குறித்து விவாதித்தார்.

படம் 2—சுமார் ஒரு லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைந்த அறந்தாங்கி ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடத்தை, அமைச்சா திரு மு. கருணாநிதி அவர்கள் திறந்துவைத்தார்.

படம் 3—வானொலி பண்ணைச் செய்தியின (Farm and Home Broadcasts) ஓராண்டு நிறைவு விழா செம்பொனா கோவிலில் (தஞ்சை மாவட்டம்) 9-6-67 ல் நடைபெற்றது. திருச்சிவானொலி நிலைய கலைஞர்கள் விழாவிற்கான சிறப்புப் பாடல ஒன்றைப் பாடினர்.










படம் 6—கால்நடை மருத்துவ மனைக் கட்டிடத்தின் முன்பு அதிகாரிகளும், பொதுமக்களும்.

படம் 7—கலசப்பாக்கம் (வட ஆற்காடு மாவட்டம்) ஊராட்சி ஒன்றிய கால்நடை மருத்துவ மனைக் கட்டிடத்தை, முதலமைச்சர் குத்து விளக்கு ஏற்றி திறந்துவைத்தார்.

படம் 4—நிகழ்ச்சியில் கலந்துகொண்டவர்களின் ஒரு பகுதி.

படம் 5—சிறு சேமிப்பு ஆயத்தின் துணைத் தலைவராக, திரு எம். ஜி. ராமச்சந்திரன் M. L. A அவர்கள், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில், 26—6 67-ல் பதவியேற்றார். திரு அரங்கண்ணல் M. L. A., மற்ற அன்பர்களுடன் அளவளாவல்.










படம் 1—'நல்வரவு' என்ற பெயரில், திருவாளர்கள் அரு ராமநாதன், 'தினகரன்' ஆகியோரால் உருவான கலைமலர், திரு ம. பொ. சிவஞானம் M. L. A. அவர்கள் தலைமையில் சென்னை 'பாலர் அரங்கில்', 30—6—1967 அன்று வெளியிடப்பட்டது. அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் உரை நிகழ்த்துவதையும் மற்ற அமைச்சர்களையும் காணலாம்.

படம் 2—நிகழ்ச்சியில் கலந்து கொண்டவர்களின் ஒரு பகுதி.









படம் 3—திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர், திரு எம். எம். ராஜேந்திரன் முன்னிலையில் 12—6—67-ல் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கில், மலரை வெளியிட்டு விவசாய அமைச்சர், திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் உரை நிகழ்த்துகிறார்.

படம் 4—கருத்தரங்கில் ஆர்வமுடன் கலந்துகொண்ட

## விமான மூலம்

## பயிர்ப் பாதுகாப்பு

**ஹெலிகா.:.ப்டர்** மூலம் மருந்து தெளிப்பதால் நமக்கு எவ்வளவோ நன்மைகள் உள்ளன. காலமும் நேரமும் வீணுவதில்லை. ஒரே நாளில் 800 முதல் 1,000 ஏக்கர்கள் வரை மருந்து அடித்துவிட முடிகிறது. ஒரே நேரத்தில் ஒரு குறிப்பிட்ட பரப்பளவு முழுமைக்கும் மருந்து தெளிக்கப்படுவதால், மருந்து தெளிக்காத வயலி லிருந்து மருந்து தெளித்த வயலுக்கு நோய் பரவாமல் தடுக்கப்படுகிறது.

1966–67-ம் ஆண்டு தமிழகத்திலேயே முதல் தடவை யாக விமானம் மூலம் நெற்பயிருக்கு திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி விவசாயப் பகுதிகளில், 11,179 ஏக்கரில் மருந்து தெளிக்கப்பட்டது. பூச்சி மருந்தான டெமிக்கிரானும், பூஞ்சான மருந்தாகிய குயுமானும் கலந்து தெளிக்கப்பட்டன. மருந்திற்காக ரூ. 1,06,631-ம் ஹெலிகாஃப்டருக்கு வாடகையாக ரூ. 1,11,790-ம் செலவு செய்யப்பட்டன. மருந்துச் செலவில் ¼ பாகமும் விமானத்தின் வாடகையில் 2/3 பாகத்தையும் மத்தியஅரசு இனமாகக் கொடுத்தது. மீதிப்பணம் விவசாயியிட மிருந்து கிஸ்தியாக வசூலிக்கப்படும்.

நாள் ஒன்றுக்கு சுமார் 800 ஏக்கர் வீதம் நெல் வயலின் மேல், 3 அடி உயரத்தில் பறந்து மருந்து தெளிக் கப்பட்டது. பெரிய விமானத்தை விட, ஹெலிகாஃப்டர் தான் நெல் வயலுக்குச் சிறந்ததாகத் தெரிகிறது. மருந்து அடித்த இடத்தில், மற்ற வயலைவிட மகசூல் அதிகமாக இருந்திருக்கிறது. ஹெலிகாப்டர் விமானம் மூலம் மருந்து தெளிக்க ஓர் ஏக்கருக்கு ரூ. 19·31 செல வாகிறது. இதில் விவசாயி கொடுக்க வேண்டிய தொகை ரூ. 10·32. பாக்கித் தொகையை மத்திய அரசு மான்ய மாகக் கொடுக்கிறது. விவசாயிகள் ஹெலிகாஃப்டர் மூலம் மருந்தடிப்பதை விரும்புகின்றனர்.

ஆதாரம்—நெல்லை மாவட்ட விவசாயக் கருத்தரங்கு மலர்—1967–68.

---

**நெல்லை கருத்தரங்கு விழாவினை யொட்டிய படங்களை எதிர்ப்பக்கத்தில் காண்க.**

## "வெற்றி விழா"

(பிலஹரி—ஆதி)

வெற்றி விழாக் கொண்டாடி மகிழ்ந்திடுவோம்—நம்
வேளாண்மை ஒலிபரப்புத் துறையின் முதல் ஆண்டு
(வெற்றி)

வற்றுச் சுரபி என வயல்கள் உண்டு — எந்த
மண்ணிலும் பொன்னிளைவிக்கும் திறமை உண்டு
பற்றுக்குறைப் பஞ்சத்திற்கு இடமில்லை — இந்தப்
பைந்தமிழ் நாட்டின் பெருமையை ஒலிபரப்பி
(வெற்றி)

நெற்பயிரில் அற்புதங்கள் செய்கின்றோம் — நாடு
நெடுகிலும் ஆராய்ச்சி நடத்துகின்றோம் — இன்று
பொற்கால உதயமென்றும் போற்றுகின்றோம்—உழவில்
புத்துணர்ச்சி பெற்றெல்லோரும் உழைக்கின்றோம்—
என்று
(வெற்றி)

கூடுதல் விளைவினைப் பெருக்குகின்ற — இனம்
கோவை கோயில்பட்டி வகைகள் உண்டு
ஆடுதுறை இருபத்து ஏழும் உண்டு — நம்
ஆராய்ச்சியின் அதிசய சாதனை கண்டு — இன்று
(வெற்றி)

பட்டமரமும் தளிர்த்து நிற்கும் — புனித
பாரத விவசாயிகள் பேர் சொன்னால்
பொட்டல் நிலமும் சொர்க்கமாகும் — அந்தப்
புண்ணியவான்கள் உழைப்பினாலே — என்று
(வெற்றி)

காடுகரை கண்கண்ட கோயில்களாம் — உயிர்
காத்துவரும் கோட்டை வாயில்களாம்
பாடுபடும் பண்ணை மக்களெல்லாம் — நவ
பாரதம் வணங்கிடும் தெய்வங்களாம் — என்று
(வெற்றி)

—என். ஆர்.

[படங்கள் நடுப்பக்கம்]

கிராம வானொலி மன்றங்கள் பற்றிய சிறப்புக் கட்டுரை—பக்கம் 9.

தமிழக அரசு வரவு-செலவுத் திட்டம்

16-ம் பக்கத் தொடர்ச்சி.

இம் மாபெரும் திட்டத்தை, மாநில அரசு வரையறைக் குட்பட்ட தனது நிதி வசதியைக் கொண்டு செயல்படுத்த இயலாது என்பது வெளிப்படை. சிறு பாசனத் திட்டத்தின் சிறப்பியல்பையும், பயன் அளிக்கும் வெற்றியையும் உணர்ந்து, பெருமளவில் நிதி உதவியளித்து மாநில அரசின் இத்திட்டத்தை ஆதரிக்க இந்திய அரசு முன் வருமென்று எதிர்பார்க்கிறேம். சிறு பாசனத் திட்டங்களுக்கு நிதி உதவி அளிப்பதற்கான சிறப்பு ஏற்பாடுகளை உருவாக்குவது குறித்து ஆர்வமுடன் தொடர்ந்து ஆவன செய்வோம்.

உழவர்களின் தேவை அறிந்து, எளிய முறையில், உரிய காலத்தில், கடனுதவி தந்திடும் அமைப்புகளும் அரசு வகுத்துள்ள ஏற்பாடுகளும் ஏற்கனவே பல உள் ளன என்றாலும், மற்றுமோர் புதிய அமைப்பு ஏற் படுவது, உற்பத்திப் பெருக்கத்திற்குத் துணை அளிக்கும் என்ற நோக்கத்துடன் "வேளாண்மை வளர்ச்சி அமைப்பு" என்ற நிறுவனம் அமைத்திடின் அதனிடம் 10 கோடி ரூபாய் வரை தந்திட இயலும் என்று அமெரிக்க ஃபோர்டு (Ford) அறநிலையத்தார் தெரிவித்துள்ள கருத்து குறித்து அரசு ஆராய்ந்து கொண்டிருக்கிறது.

புதுக்கோட்டைப் பகுதியில், குடுமியாமலை என்ற இடத்தில் 3,500 ஏக்கர் பரப்பளவு உள்ள இடம், ஒரு முதல் தரமான விவசாயப் பண்ணையாவதற்கான கூறுகள் நிரம்ப உள்ளன என்பது பற்றி சில ஆண்டுகளுக்கு முன்பு கண்டறியப்பட்ட தெனினும், மேற்கொண்டு செயல்முறை எதுவும் வகுக்கப்படவில்லை. இவ்வரசு, இத் திட்டத்தை செயல் படுத்த ஆர்வம் கொண்டுள்ளதுடன், ரஷ்ய உடன் உழைப்பு திட்டம் கிடைத்திடுவதற்கான வழிவகையினை ஆராய்ந்திடத் தீர்மானித்திருக்கிறது. நீலகிரி மாவட்டத்தில், இந்திய-ஜெர்மன் கூட்டு முயற்சியாக, உருளைக் கிழங்கு உற்பத்திச் சீரமைப்புத் திட்டம் உருவாக்கப்பட்டு, அது குறித்த செயல் முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

## ஆற்றுப்பாசனத்திட்டங்கள்-நீர்த்தேக்கஅணைகள்

பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திற்காகவும், ஏனைய நடுத்தரப் பாசனத் திட்டங்களுக்காகவும், போதிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மணிமுக்தா நதித் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிற வேகத்தை ஒட்டி, நடப்பு ஆண்டில் அதற்குரிய முதலீடு உயர்த்தப்பட்டுள்ளது. இன்னும் வேலை தொடங்கவிருக்கும் கடானு, இராம நதித் திட்டங்கள், வைகைக் கால்வாய்களைப் புதுப்பிக்கும் திட்டம் போன்ற புதிய திட்டங்களுக்கும் சிறிய அளவில் ஒதுக்கங்கள் செய்யப்பட்டுள்ளன. நிதி வசதி கிட்டும் நிலையையும், செலவின் விரைவுப் போக்கினையும் ஒட்டி, இந்த நிதி ஒதுக்கங்கள் பின்னர் உயர்த்தப்படும்.

மின்சார உற்பத்தி-அனுப்பல்-வழங்கல் இவை குறித்த திட்டங்களுக்காக, 30 கோடியே 60 லட்சம் ரூபாய், அல்லது நடப்பு ஆண்டிற்கென திட்ட அளவில் 35 சத வீதம் ஒதுக்கப்பட்டுள்ளது. இப்போது நிறை வேற்றப்பட்டுவரும் மிக முக்கிய திட்டமான எண்ணூர் அனல் மின்சாரத் திட்டத்திற்கு, ஏறக்குறைய 10 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. பரம்பிக்குளம்-ஆளியாறு நீர் மின்சாரத் திட்டத்திற்கு 3 கோடியே 10 லட்சம் ரூபாயும், கோதையாறு நீர் மின்சாரத் திட்டத் திற்கென 3 கோடியே 81 லட்சம் ரூபாயும், "பேசின் பிரிட்ஜ்" அனல் மின்சாரத் திட்டத்திற்காக 1 கோடியே 75 லட்சம் ரூபாயும் இவ் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி வகை செய்யப்பட்டுள்ள சிறப்பான ஏனைய இனங்களாகும். நடப்பு ஆண்டில் நிறைவு பெறும் வேலைகளின் மூலம் தமிழக மின்சார இணைப்பின் (Madras Grid) உற்பத்தித் திறன், 160 மெகாவாட் அளவிற்கு உயரும் என எதிர்பார்க்கிறேம்.

## வரட்சி காலத்தில் கால்நடைகளுக்குத் தீவனம்

**வறட்சி காலத்தில், கால்நடைகளுக்குத் தீவனம் கிடைக் காமல் இருக்கும் சமயத்தில், தரிசு நிலங்களில் நேப்பியர் புல்லை வளர்ப்பது சமய சஞ்சீவியானது என்று விவசாயத் துறை சிபாரிசு செய்துள்ளது. 8 அடி முதல் 12 அடி வரை இது வளரும். ஆண்டுக்கு 80 முதல் 100 டன் வரை மகசூல் கிடைக்கும். இதை மாடுகளும் விரும்பித் தின்னும். இந்தப் புல்லை ஒவ்வொரு அடித்துண்டாக வெட்டி கால்நடைகளுக்குப் போடவேண்டும்.**

நமது பொருளாதாரத்தின் இன்றைய நிலையில் தொழில் துறையில் பற்பல புதிய திட்டங்களைத் தொடங்கு வதைவிட, ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டு வரும் திட்டங்களைச் சீர்செய்வதே நலம் பயக்கும் செயலாகும். இவ்வித சூழ்நிலையில் திட்டத்தில் தொழில்களுக்காகச் செய்துள்ள முதலீட்டினை, 1966-67-ன் திருத்த மதிப் பீடான 5·99 கோடி ரூபாயிலிருந்து, 7 கோடி ரூபாய்க்கு இப்போது உயர்த்தியிருப்பதற்கு விளக்கம் சிறிது தேவைப்படுகிறது. இவ்வுயர்வு, பெரிய, நடுத்தரத் தொழில்களின்கீழ் நாம் மேற்கொண்டுள்ள இரு பெரிய திட்டங்களான ராஜபாளையம் சிமெண்ட் தொழிற் சாலைத் திட்டம், அரக்கோணம் தொடர் வார்ப்படத் தொழிற்சாலைத் திட்டம் (Continous Casting Plant) ஆகியவற்றின் தேவைகளையே எதிரொலிக்கிறது. ராஜபாளையம் சிமெண்ட் தொழிற் சாலைக்குத் தேவைப்படும் இயந்திரங்களை வரவழைப்பதற் கான ஏற்பாடுகள் முடிக்கப்பட்டுள்ளன. கட்டிட வேலைகள், சுண்ணும்புக் கற்சுரங்க வேலைகள் இவற்றை யும் மேற்கொண்டுள்ளோம். தொடர் வார்ப்படத் தொழிற்சாலையைப் பொருத்த மட்டில், ரஷ்யத் தொழில் உடனுழைப்பாளர்கள் (Soviet Collaborators) வழங்கியிருக்கும் திட்ட அறிக்கையில் தெரிவித்துள்ள இயந்திரத் தேவைகளையும், நாணயமாற்று வீதம் குறைக்கப்பட்டதன் விளைவையும் கருத்தில் கொண்டு, இத்திட்டத்திற்கான திருத்த மதிப்பீடுகள் தயாரிக்கப் பட்டுள்ளன.

ரஷ்யத் தொழில் உடனுழைப்பாளருடன் இத் திட்டம் குறித்த உடன்பாட்டில் இப்போது தான் கையொப்பம் இட்டுள்ளோம். இது போன்றே, ருமேனிய நாட்டுக் கூட்டு முயற்சியின் துணை பெற்று மற்றொரு பெரிய தொழிற்

திட்டத்தைத் துவக்கும் முயற்சியில் அரசு அக்கறை எடுத்துக்கொண்டிருக்கிறது. இது பற்றி, மத்திய அரசிடம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. ஒப்புதல் எதிர்பார்க்கப்படுகிறது.

தவிர, இவ்வாண்டுத் திட்டத்தில், மின்னணுத் (Electronic) தொழில்களுக்கும், மருந்துத் தொழில்களுக்கும், அளவைக் கருவிகள் தயாரிக்கும் தொழில்களுக்கும், அவ்வத் தொழில்களுக்குரிய தொழிற்பேட்டைகளை (Functional Industrial Estates) நிறுவும் பணியைத் தொடங்கி வைக்கவும், நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. நிலங்களை கைவசப்படுத்தி, வேண்டிய வசதிகளுடன் மேனிலைப்படுத்தி, அவற்றைத் தொழிலதிபர்களுக்கு ஒதுக்கும் திட்டத்துக்கென 25 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்திற்கு உதவித் தொகை வழங்குவதற்கெனவும், தற்போதைய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ. 20 லட்சம் வகை செய்யப்பட்டுள்ளது.

பெருந் தொழில்களுக்கும் சுரங்கத் தொழில்களுக்கும் மத்திய அரசுத் திட்டத்தில் வகை செய்துள்ள நிதி ஒதுக்கம் 3,751 கோடி ரூபாயாகும். இப் பெரும் நிதி ஒதுக்கத்தை மாநிலங்களிடையே ஒரு சீரான-நேரான அடிப்படையில் வழங்கினாலொழிய, மண்டலத் தொழில் வளர்ச்சி சம நிலையில் அமைய முடியாது.

நமது மாநிலத்தில், மத்திய அரசுத்துறையின் தொழில் திட்டங்களுக்கான முதலீடுகள் ரூ 100 கோடிக்கும் குறைவாயிருக்குமென்பது மிக்க வருத்தந்தரும் செய்தியாகும். இத் தொகை நமக்கு முற்றிலும் போதாது. மத்திய அரசு செய்யும் முதலீடுகளில் நியாயமான பங்கினைப் பெறுவதற்காகவே, நெய்வேலி-சேலம் உருக்காலையை நிறுவும்படி வற்புறுத்தி வருகிறோம்.

## சேலம் இரும்பாலை, தூத்துக்குடி ஆழ்கடல் திட்டங்கள்

சேலமா, விசாகையா, ஆஸ்பட்டா என்ற புதிய பிரச்சினையை சிக்கலுள்ளதாக்கி எடுத்துக் காட்டப்பட்ட போதுகூட, மாநிலத்துத் தலைவர்கள், மூன்று இடங்களிலும் இரும்பாலை துவக்க வசதி செய்திட முடியும் என்பதனை எடுத்துக் காட்டி, வழியும் கண்டறிந்து கூறினர். மிகுதியான மூலதனத்தை பொகாரோ எனும் ஒரே தொழில் அமைப்பில் கொட்டுவதைக் காட்டிலும், அதனை இம் மூன்று திட்டங்களையும் மேற்கொள்ளப் பயன்படுத்துவது முறையாக இருக்கும் என்பதையும் கூறியுள்ளனர். திரு ம.பொ.சி. அவர்கள் தலைமையில் எல்லாக் கட்சி உறுப்பினர்களையும் கொண்ட குழு, இந்தியப் பிரதமர் முன் இது குறித்து முறையிட்டுக் கொண்டதனையும் நினைவிற் கொள்ள வேண்டும். சேலம் இரும்பாலை துவக்குவதற்குத் தயக்கம் இருப்பதற்குக் காரணம், அன்னியச் செலாவணிச் சிக்கலே என்று மத்திய அரசு வாதாடி வந்துள்ளது. அன்னியச் செலாவணித் துறையிலே உள்ள சிக்கலையும் சிரமத்தையும் இந்த அரசு உணராமல் இல்லை. ஆனால், சேலம் திட்டத்தைப் பொருத்த வரையில், இந்த வாதம் பொருளற்றதாகும். ஏனெனில், இதற்குத் தேவைப்படும் அன்னியச் செலாவணிப் பகுதிப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ள ஜப்பான் தொழில் அமைப்பினர் தயாராக உள்ளனர் என்பதை, ஜப்பான் சென்று இது குறித்துக் கருத்தறிந்து வந்து முன்னாள் தொழில் அமைச்சர் திரு வெங்கடராமன் தெளிவுபடுத்தியுள்ளார். சின்னாட்களுக்கு முன், ஜப்பான் தொழில் அமைப்பு விற்பன்னர் சிலருடன் நான் பேசியபோது, இந்த நிலைமை மேலும் உறுதிப்பட்டிருப்பது தெரிந்தது. ஆகவே, அன்னியச் செலாவணிச் சிக்கலை, சேலம் திட்டத்தை விட்டுவிடுவதற்கோ, தள்ளிப் போடுவதற்கோ காரணமாகக் காட்டுவது முறையாகாது என்பதனை வலியுறுத்த விரும்புகிறேன்.

ஜப்பான் தொழில் அமைப்பினரின் உதவி கிடைத்திடினும், சேலம் திட்டத்திற்காக மேலும் பெருந் தொகை தேவைப்படும்; இன்று மத்திய அரசின் நிதி நிலையில் இது கிடைப்பது கடினம் என்று காரணம் காட்டினும், இந்தத் திட்டத்தினை, மாநில அரசு மேற்கொண்டு நடத்த வேண்டும், இயலும், என்ற மக்கள் கருத்து வலுவடைந்து வந்திருக்கிறது. மாநில அரசு, சேலம் இரும்பாலை துவக்கிட அனுமதி கேட்டு அனுப்பிய மனு ஓராண்டுக்கு மேலாக மத்திய அரசிடம் முடங்கிக் கிடப்பது அறிந்து, மக்கள் மேலும் வேதனை அடைந்துள்ளனர்.

ஏறத்தாழ இதே விதமான அச்சமும், ஐயப்பாடும் கப்பியுள்ள நிலையிலேயே, தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டமும் இருந்திடுவது நமது வருத்தத்தை அதிகமாக்குகிறது. சின்னாட்களுக்கு முன்பு இதுபற்றி, நெல்லை, மதுரை, இராமநாதபுரம் பகுதிகளிலுள்ள வணிகப் பெருமக்கள், தமது கவலையை என்னிடம் தெரிவித்ததுடன், திட்டமிட்டபடி தூத்துக்குடி துறைமுகம் வளப்படுத்தப்படுவதற்கு இந்த அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தமது ஆதரவினை நல்குவதாகவும் தெரிவித்துள்ளனர். தமிழக தொழில் வளர்ச்சிக்குத் தேவையான இந்த இரண்டு திட்டங்களையும், தேய்த்துவிடாமல், முழு அளவில் நிறைவேற்றிக் கொடுக்கும் பொறுப்பினை மத்திய அரசு ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற இம் முறையீட்டுக்கு, கட்சிக் கண்ணோட்டத்தைக் காட்டிலும், நாட்டின் பொது வளர்ச்சிக் கண்ணோட்டமே மேலானது என்ற பண்பினை உணர்ந்தோர் அனைவரும் துணை நிற்பர் என்று உறுதியாக நம்புகிறேன்.

## கல்வி வளர்ச்சியில் நாட்டம்

சமூகப் பணிகளுக்கு, குறிப்பாக பொதுக் கல்வி, பின்தங்கிய வகுப்பினர் நலன் போன்ற பணிகளுக்குச் செய்துள்ள நிதியொதுக்கீடுகள், சென்ற ஆண்டைவிட கணிசமாய் உயர்ந்திருக்கும். பொறுப்பேற்ற செலவினம் (Committed Expenditure) உட்பட, நடப்பு ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கல்விக்கு வகை செய்துள்ள நிதி ஒதுக்கம் ஏறக்குறைய 54 கோடி ரூபாயாகும். இத்

தொகை நமது மாநில வருவாயில் 25 சத விகிதமாகும். 6 முதல் 11 வயது, 11 முதல் 14 வயது, 14 முதல் 17 வயது ஆகிய இம் மூன்று முக்கிய வயதுத் தொகுதிகளில் உள்ள மாணவர்கள் பள்ளிகளில் கூடுதலாய்ச் சேர்வார்கள் என்பதைக் கருதி, இத் திட்டத்தில் கூடுதல் ஆசிரியர்களை அமர்த்துவதற்கும் ஏனைய பிற வசதிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளன.

பள்ளிக் கட்டிடங்கள், கருவிப் பொருள்கள், இவற்றில் போதிய வசதிகள் செய்து தருவதிலுள்ள பழந்தேக்கத்தை (back log) உளத்திற் கொண்டு, நடப்பு ஆண்டுத் திட்டத்தில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கென ரூ. 58 லட்சமும், பள்ளிகளில் ஆய்வுக் கூடங்கள், விஞ்ஞானக் கருவிகள் இவற்றை வகை செய்து தருவதற்கென ரூ. 86 லட்சமும் ஒதுக்கியுள்ளோம். கடந்த இரு ஆண்டுகளில் அரசு, கலைக் கல்லூரிகள் பலவற்றைத் திறந்துள்ளதால், இக் கல்லூரிகளுக்கான கட்டிடங்களைக் கட்டுவதற்காக ரூபாய் 37 லட்சம் வகை செய்யவேண்டியுள்ளது. நடப்பு ஆண்டில் அரசு, மேலும் இரு கலைக் கல்லூரிகளைத் திறக்கவும், ஏற்கனவே புகுமுகக் கல்லூரி வகுப்புகளைத் தொடங்கியிருக்கிற கல்லூரிகளில் பட்டப்படிப்பு வகுப்புக்களைத் தொடங்கவும் வகை செய்யப்பட்டுள்ளது.

## கல்லூரிக் கல்வி

தனியார் துறையினில், பச்சையப்பன் அற நிலையத்தார் காஞ்சீபுரத்தில் பெண்கள் கல்லூரி ஒன்றும், கடலூரில் மற்றொன்றும், சென்னையில் கலைக் கல்லூரி ஒன்றும் துவக்க ஏற்பாடு ஆகி உள்ளது. திருச்சி மாவட்டத்தில் புத்தனாம்பட்டி நேரு பெருமகனார் பெயரிடப்பட்டுள்ள ஒரு கல்லூரியும் தொடங்கப்படுகிறது. சென்ற இடைக்கால வரவு-செலவுத் திட்ட விவாதத்தின்போது, புகுமுக வகுப்பு வரை இலவசக் கல்வி அளிக்க வேண்டு மென்று கேட்கப்பட்டதைக் குறித்து, வசதியுள்ளோர்க்கும் இல்லோர்க்கும் இடையே வேறுபாடு ஒன்றைச் செய்தாக வேண்டுமென்றும், இத் துறையிலே நிதியொதுக்கத்துக்கு போட்டியிடும் பல்விதத் தேவையினங்களை நாம் சிந்தையிற் கொள்ளவேண்டியுள்ளதென்றும் குறிப்பிட்டிருந்தேன். நிதி விளைவுகளையும், ஏனைய விளைவுகளையும் தீர ஆய்ந்த பின்னர், தமது பெற்றோர்களின் ஆண்டு வருமானம் 1,500 ரூபாய்க்கும் அதற்குக் குறைந்தும் உள்ள மாணவர் அனைவர்க்கும் கல்லூரிச் சம்பளம் செலுத்துவதினின்றும் முற்றிலும் விலக்கு அளிக்க வேண்டுமென அரசு முடிவு செய்துள்ளது. பொருளாதாரத்தின் பின் தங்கியுள்ளோர், இதன் மூலம் சமூக நீதி பெற்றிட வழி செய்யப்பட்டிருக்கிறது. அரிசன வகுப்பினர், பழங்குடியினர், குற்றப் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட வகுப்பினர், மிகப் பின்தங்கிய வகுப்பினர், பின் தங்கிய ஏனைய வகுப்பினர் ஆகிய இவர்களைச் சேர்ந்த மாணவர்களுக்கு, கல்லூரிச் சம்பள விலக்குப் பெறுவதற்கான வருமான வரம்பு ஆண்டொன்றுக்கு 2,000 ரூபாயாக இருக்கும். பள்ளிப் பிள்ளைகளின் மதிய உணவுத் திட்டத்திற்காக தொடர்ந்து துணை நின்று வரும் கேர் (CARE) அமைப்

தொடர்ச்சி அடுத்த பக்கம்

## உணவு உற்பத்தியின் முன்னணியில்.....

தஞ்சாவூர் மாவட்டத்தில் சுமார் 14 லட்சம் ஏக்கராவுக்கு நிரந்தர நீர்ப் பாசன வசதியுள்ளது. தமிழகத்தின் மொத்த சாகுபடி அளவில் ஏறக்குறைய கால்பங்கு இந்த மாவட்டத்திலேயே இருக்கிறது. பொதுவாகப் பார்க்கும்போது இயற்கையால் விளையும் விபரீதங்கள் குறைவு. இம்மாவட்டத்தில் பெரும்பான்மையான விவசாயிகள் கல்வி அறிவு உள்ளவர்கள். ஆகவே அவ்வப் போது ஏற்படும் மாறுதல்களைச் சுலபமாக ஏற்றுக் கொள்கிறார்கள்.

அதிதீவிர சாகுபடி திட்டம் 1960-ல் தமிழ் புத்தாண்டு தினத்தன்று, இம்மாவட்டத்தில் துவக்கப்பட்டது. கடந்த ஆண்டில் இம்மாவட்டத்திலுள்ள 36 வட்டாரங்களிலும் 2,096 கிராமங்களில் இத்திட்டம் விரிவாக்கப்பட்டது. நீர் பாசன வசதியுள்ள 13·04 லட்சம் ஏக்கரா இத்திட்டத்தின் கீழ் கொண்டுவரப்பட்டிருக்கிறது. 1964–65-ல், 200 ஏக்கருக்கு மாத்திரம் கிடைத்த விதையைக் கொண்டு, தேவையான விதையைத் தயார் செய்து, இரண்டே ஆண்டுக்குள், இந்த ஒரு மாவட்டத்தில், இரண்டு லட்சம் ஏக்கரில் ஆடுதுறை 27-ஐப் பரப்பியது ஒரு இணையற்ற சாதனையாகும். 1967–68-ம் ஆண்டுக்கு 9 லட்சம் ஏக்கராவில் ஆடுதுறை–27 நெல்லை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. கடந்த ஆண்டில் 10·08 லட்சம் ஏக்கர்களுக்கு 2,41,985 பண்ணைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன. இவ்வாண்டில் மொத்த பரப்பில் 80 சதவிகித பரப்பிற்கு, அதாவது 12 லட்சம் ஏக்கர்களுக்கு பண்ணைத் திட்டங்கள் தயாரிக்கப்படும்.

தற்சமயம் 36 டிராக்டர்கள் கையிருப்பிலுள்ளன. சாகுபடி காலங்களில் இவற்றிற்கு 'கேஜ்வீல்'(Cage Wheel)களைப் பொறுத்தி சேற்றுழவு செய்ய வாடகைக்கு விடப்படுகின்றன. மற்ற காலங்களில் இவை விவசாயத்திற்குத் தேவையான உரம், விதை, போன்ற பொருள்களைக் கொண்டு செல்ல வாடகைக்குக் கொடுக்கப்படுகின்றன. சென்ற ஆண்டு டிராக்டர்களைக் கொண்டு 16,113 ஏக்கர்களில் சேற்றுழவு செய்யப்பட்டது.

ஆதாரம்—விவசாயக் கருத்தரங்கு மலர் 1967–68 தஞ்சாவூர் மாவட்டம்.

பினர், அதே திட்டம் மேலும் செம்மைப் படுத்தப் படுவதற்கான முறையில், பொது சமையலிடம் அமைப்பது என்றும், படிப்படியாக அந்த இடம், மதிய உணவுக்குத் தேவைப்படும் காய்கறிகளுக்கான தோட்டமாக ஆக்கப்பட வேண்டுமெனவும் புதிய திட்டம் தந்துள்ளனர். இதனை முதலில் பூவிருந்தவல்லிப் பகுதியில் செயல்படுத்திப் பார்த்திட அரசு ஒப்புதல் அளித்தது. அதற்கான ஏற்பாட்டினை மேற்கொண்டிருக்கிறது. பயன் அளவிடப்பட்டு, பிறகு இதே முறை, தமிழகத்தின் மற்றப் பகுதிகளுக்கும் விரிவாக்கப்பட இயலும்.

## அரிசன வகுப்பினர்—பின்தங்கியுள்ளோர் பழங்குடிமக்கள் முன்னேற்றம்

திட்டத்தில் வகை செய்துள்ள ரூ. 175 லட்சம் நிதி ஒதுக்கம் உட்பட, அரிசனங்கள், பழங்குடியினர், பின் தங்கிய வகுப்பினர் ஆகியோர் குறித்ததிட்டங்களுக்காக வரவு-செலவுத் திட்டத்தில் செய்துள்ள மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 657 லட்சம் ஆகும். அரிசன நலத்துறை வழங்கும் கல்வித் துணைச் சம்பளங்களுக்குரிய (Scholarships) வருமான வரம்பு தற்போது ஆண்டொன்றுக்கு ரூ. 1,500 என்றிருப்பதை, ஆண்டொன்றுக்கு ரூ. 2,000 என்று உயர்த்த அரசு முடிவு செய்துள்ளது. இதனால் குறிப்பாக மாதச் சம்பளம் பெறும் பெருவாரியான மக்கள், அரிசன நலத்துறை வழங்கும் விடுதி-படிப்புக்குரிய கல்வித் துணைச் சம்பளம் இவற்றைப் பெற முடியாத நிலை நீங்கி, அவர்களும் இந் நன்மையைப் பெற வாய்ப்பளிக்கும்.

இன்றைய பேதமும், பிளவும் நீங்கி, "எல்லோரும் ஓர் குலம்—ஓர் நிறை" என்ற குறிக்கோள் வெற்றிபெற கலப்புத் திருமணம் பெருகிட வேண்டும் என்ற நோக்குடன், கலப்புத் திருமணம் செய்துகொள்ளும் மண மக்களுக்கு, அரசு தன் பாராட்டுதலைத் தெரிவிக்கும் முறையில், ஒவ்வோர் ஆண்டும் பாராட்டு விழா நடத்தி, அவர்களுக்கு பொற்பதக்கம் வழங்கி மதிப்பளிக்கும் திட்டத்தை மேற்கொள்ள இந்த அரசு தீர்மானித்திருக்கிறது. இதற்கான நாளும் இடமும், முறையும் அவ்வப்போது வகுத்துத் தெரிவிக்கப்படும். இதற்காக குத்து மதிப்பாக ரூ. 10,000 கொண்ட தொகை இவ்வாண்டு ஒதுக்க ஏற்பாடாகி இருக்கிறது.

## மருத்துவ பொதுச்சுகாதார வசதிகள்

மருத்துவ, பொதுச் சுகாதாரத் துறைகளின்கீழ், செங்கற்பட்டு, கோயம்புத்தூர், திருநெல்வேலி ஆகிய இடங்களிலுள்ள மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகளுக்காகக் கட்டிடங்கள் கட்டுவதற்கும், கருவிப்பொருள்கள் வாங்குவதற்கும் மொத்தம் ரூ. 41 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்க்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை 1,075லிருந்து 1,125 ஆகக் கூட்டப்பட்டுள்ளது. இத் துறையில் நமது தேவைகள் மிக அதிகமாயிருப்பினும், கிட்டியுள்ள குறைந்த நிதி வரம்பிற்குள், பல புதிய திட்டங்களுக்கு வகை செய்திருக்கிறோம்.

—36-ம் பக்கம் பார்க்க

## மாநில அரிசனநலக் குழு திருத்தியமைக்கப் பட்டுள்ளது

### உறுப்பினர்கள் விவரம்.

**மாநில அரிசன நலக்குழு** சென்ற மாதம் 26-ந் தேதியிலிருந்து திருத்தியமமைக்கப்பட்டுள்ளது. அரிசன நலத் துறை அமைச்சர் அதன் தலைவராவார். உறுப்பினர்கள் விவரம் வருமாறு :

திரு எம். அலங்காரம், எம்.எல்.ஏ., கடலாடி தொகுதி, இராமநாதபுரம் மாவட்டம், திரு எம். ஆனந்தன், எம்.எல்.ஏ., ரிஷிவந்தியம் தொகுதி, தென் ஆர்க்காடு மாவட்டம், திரு ஏ. ஜி. பாலகிருஷ்ணன், எம்.எல்.ஏ, வானூர் தொகுதி, தென் ஆர்க்காடு மாவட்டம், திரு பி. துரைராஜ், எம். எல். ஏ சங்கரன் கோயில் தொகுதி; திருநெல்வேலி மாவட்டம், திரு பி. எஸ். எல்லப்பன் எம்.எல்.ஏ. அச்சிறுபாக்கம் தொகுதி, செங்கற்பட்டு மாவட்டம்; திரு கே. பி. எஸ். மணி, எம். எல். ஏ., சீர்காழி தொகுதி, தஞ்சை மாவட்டம் ; திரு என். மருதாசலம், எம். எல். ஏ., பேரூர் தொகுதி, கோவை மாவட்டம்; திரு முத்துலிங்கம், எம்.எல்.ஏ., வந்தவாசி தொகுதி, வட ஆர்க்காடு மாவட்டம் ; திருமதி வி. பி. பழனியம்மாள், எம்.எல்.ஏ., தாராபுரம் தொகுதி, கோவை மாவட்டம் ; திரு என். பன்னீர்செல்வம், எம்.எல்.ஏ., ஆம்பூர் தொகுதி, வட ஆர்க்காடு, மாவட்டம், திரு என். ராஜாங்கம், எம்.எல்.ஏ., குறிஞ்சிப்பாடி தொகுதி, தென் ஆர்க்காடு மாவட்டம் ; திரு ஈ. ராமசாமி, எம்.எல்.ஏ., வால்பாறை தொகுதி, அக்கமலை எஸ்டேட், கோவை மாவட்டம் ; திரு பி. எஸ். சந்தானம், எம்.எல்.ஏ., செங்கம் தொகுதி, வட ஆர்க்காடு மாவட்டம் ; திரு. பி. சவுந்திர பாண்டியன், எம்.எல்.ஏ., கிருஷ்ணராயபுரம் தொகுதி, திருச்சி மாவட்டம் ; திரு ஏ. கே. சுப்பையா, எம்.எல்.ஏ., கோட்டூர் தொகுதி, தஞ்சை மாவட்டம் ; திரு ஏ.வி.பி. ஆசைத்தம்பி, எம்.எல்.ஏ., எழும்பூர் தொகுதி, சென்னை ; திரு பி. சிவசங்கரன், எம்.பி., ஸ்ரீபெரும்புதூர் தொகுதி ; திரு குசேலர், எம்.பி., வேலூர் தொகுதி, திரு ஏ. துரைராசு, எம்.பி., பெரம்பலூர் தொகுதி ; திரு பி. ஜி. மாணிக்கம், முன்னாள் எம்.எல்.ஏ., பெருந்தலையூர் கிராமம், கோபி வட்டம் ; திரு எம். மூர்த்தி, இரண்டாவது தெரு, கிருஷ்ணதாஸ் ரோடு, மங்களாபுரி, சென்னை–12 ; திரு எஸ். சிவ சுப்பிரமணியம், எம்.எல்.ஏ., காட்டு மன்னார் கோயில் தொகுதி, தென் ஆர்க்காடு மாவட்டம் ; திரு சி. மாணிக்கம், முன்னாள் எம்.எல்.ஏ., அரூர், தர்மபுரி மாவட்டம் ; திரு ஆர். எஸ். மலையப்பன், ஐ.ஏ.எஸ். (ஓய்வு பெற்றவர்) தஞ்சை.

அரசு உள் துறைச் செயலாளர், துணைச் செயலாளர் (அரிசன நலம்), அரிசன நலத் துறை நெறியாளர், கிராம வளர்ச்சித் துறை நெறியாளர், உயர் கல்வித் துறை நெறியாளர், செகண்டரி கல்வித் துறை நெறியாளர், கூட்டுறவுச் சங்கங்கள் பதிவாளர் ஆகியோர் இக் குழுவின் பணித் துறை சார்ந்த உறுப்பினர்களாக இருப்பர். அரிசன நலத்துறை நெறியாளர் அதன் செயலாளராவார்.

பதவி சார்பற்ற உறுப்பினர்களின் பதவிக்காலம் மூன்றாண்டுகள் ஆகும்.

# வானொலியில் கிராம நிகழ்ச்சிகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செவ்வாய் ... ... | **1—8—67**<br>கிராம வானொலி மன்றம் கேள்வி பதில்— கூட்டுறவும்-உணவு உற்பத்தியும் —பேச்சு. | **8—8—67**<br>கிராம வானொலி மன்றம் கேள்வி பதில்— 'அந்நிய செலவாணி பெற ஆமணக்கு பயிரிடுங்கள்' —பேச்சு. | **15—8—67**<br>கிராம வானொலி மன்றம் கேள்வி பதில்— 'உயர் விளைச்சல் ரகங்கள் பயிரிடுதல்—என் அனுபவம்'—பேச்சு | **22—8—67**<br>கிராம வானொலி மன்றம் கேள்வி பதில்— 'சோயாபீன்ஸ் ஒரு புரத சத்து செறிந்த பயிர்'—பேச்சு. | **29—8—67**<br>கிராம வானொலி மன்றம் கேள்வி பதில்— 'புகையிலைச் சாகுபடியில் திருந்திய முறைகள்'—பேச்சு. |
| புதன் ... ... | **2—8—67**<br>ஊர்ச் சாவடி— ஆவணி மாத சாகுபடி குறிப்புகள்— விவசாயிகள் அரங்கு. | **9—8—67**<br>'சம்பா நாற்றங்காலில் பயிர் பாதுகாப்பு,— உரையாடல். விவசாய செய்திச் சுருள். | **16—8—67**<br>'பெங்களூர் கத்தரிக்காய் சாகுபடி'— உரையாடல். கால்நடைப் பண்ணைச் சித்திரம். | **23—8—67**<br>'மண் உண்டாகும் விதம்' —உரையாடல். விவசாயச் செய்திச் சுருள். | **30—8—67**<br>'குருவையில் பல்காரிட் பூச்சி'—உரையாடல். வினாடி-வினா. |
| வியாழன் ... ... | **3—8—67**<br>பண்ணைச் செய்தி— ஆடுதுறை—27 நெல்லுக்கு உரம்—உரையாடல். | **10—8—67**<br>பண்ணைச் செய்தி— 'கால்நடைகளுக்கு உண்டாகும் உண்ணி ஜுரம்' —உரையாடல். | **17—8—67**<br>பண்ணைச் செய்தி— மிளகு சாகுபடி—உரையாடல். | **24—8—67**<br>பண்ணைச் செய்தி— 'பூச்சி மருந்துகளை உபயோகித்தல் — கவனிக்க வேண்டியவை'—உரையாடல். | **31—8—67**<br>பண்ணைச் செய்தி— கருத்துக்கோவை. அறிவிப்புகள். |
| வெள்ளி ... ... | **4—8—67**<br>கிராம வானொலி மன்றம் கேள்வி பதில்— 'வரகு ஓர் சிறந்த உணவு தானியம்'—பேச்சு. | **11—8—67**<br>கிராம வானொலி மன்றம் கேள்வி பதில்— 'குருத்துப் பூச்சி நெல் மகசூலைக் குறைக்கும்' —பேச்சு. | **18—8—67**<br>கிராம வானொலி மன்றம் கேள்வி பதில்— பருத்தி உற்பத்தியை அதிகரிப்போம்—பேச்சு. | **25—8—67**<br>கிராம ரேடியோ மன்றம் கேள்வி பதில்— 'பருத்தி சாகுபடியில் கட்டுகோப்பான முறைகள்'—பேச்சு. | |
| சனி ... ... | **5—8—67**<br>விஸ்தரிப்பு பணியாளர்களுக்கான குறிப்புகள்— 'பருத்தி விளைவைப் பெருக்க'—உரையாடல். | **12—8—67**<br>விஸ்தரிப்பு பணியாளர்களுக்கான குறிப்புகள்— 'புஞ்சைப் பயிர்களுக்கும் உரமிடுங்கள்'—உரையாடல். | **19—8—67**<br>விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான குறிப்புகள்— 'வெக்கை நோய் தடுப்பு' —உரையாடல். | **26—8—67**<br>விஸ்தரிப்புப் பணியாளர்களுக்கான நிகழ்ச்சிகள்— 'மருந்தடிக்கும் கருவிகளைப் பாதுகாத்தல்'— உரையாடல். | **இந்தக் கிராம நிகழ்ச்சிகள் எல்லாம் மாலை 7-30 முதல் 8-30 மணிவரையிலும் நடைபெறும்.** |
| ஞாயிறு ... ... | **6—8—67**<br>'குச்சிக் கிழங்கு சாகுபடி' —உரையாடல். | **13—8—67**<br>'தென்னைக்கு உரமிடுங்கள்'—உரையாடல். அறிவிப்புகள். | **20—8—67**<br>இளைஞர் மன்றம் அறிவிப்புகள். | **27—8—67**<br>'பலவகையான ரசாயன உரங்கள்'—உரையாடல். | |
| திங்கள் ... ... | **7—8—67**<br>பண்ணைச் செய்தி— 'சம்பாவில் ஆடுதுறை—27 நெல்லுக்கு வேண்டிய சத்து'—உரையாடல். | **14—8—67**<br>பண்ணைச் செய்தி— 'மஞ்சள் சரிவு'—உரையாடல். | **21—8—67**<br>பண்ணைச் செய்தி— 'அதிக லாபத்துக்கு K-1—மிளகாய் பயிரிடுங்கள்'—பேச்சு. | **28—8—67**<br>பண்ணைச் செய்தி— 'சம்பா பயிரில் பூச்சிகள்' —உரையாடல். அறிவிப்புகள். | |



# "காந்தியடிகள் நூற்றாண்டு விழா"

## முதலமைச்சர் தலைமையில் ஏற்பாடுகள்

**(திரு. க. அருணாசலம், செயலாளர், காந்தி நூற்றாண்டு விழா மாநிலக் குழு)**

**காந்தி** நூற்றாண்டு விழா மாநிலக் குழுவின் இரண்டாவது கூட்டம், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் 1967 மே 27-ம் நாள் பகல் 12 மணிக்கு, முதலமைச்சர், திரு சி. என் அண்ணாதுரை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

மாநிலக் குழுவின் செயலாளன் என்ற முறையில், கடந்த மாநிலக் குழு கூட்டத்தின் நடவடிக்கைகளையும், அதில் நிறைவேறிய தீர்மானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும் நான் விளக்கினேன்.

**"விழாக் கோலம் பூணுவோம்."**

அவற்றையெல்லாம் அன்புடன் கேட்டு, முதலமைச்சர் அவர்கள் கூறிய முடிவுரை, நம்மை எதிர் நோக்கியுள்ள மகத்தான பணிக்கு, சிறந்த தூண்டுகோலாக அமைந்தது. அவர் சொன்னார்:

"ஒரு புனிதமான பணியில் ஈடுபடுவதற்காக வாய்ப்புப் பெற்றதில் நான் மகிழ்ச்சியடைகிறேன். நாம் இன்றைய தினம் விழாக் கோலம் பூண்டு செயல் தொடங்குவோம். நானும் நம்முடைய நண்பர்களும், நீங்கள் எடுத்துச் சொல்லியிருக்கின்ற பற்பல காரியங்களையும் செம்மையாக நடத்துவதற்கு முயற்சி எடுத்துக் கொள்ளுவோம் என்று உங்களுக்கெல்லாம் நான் உறுதியளிக்கிறேன்."

காந்தி பற்றிய நூல்கள் கடந்த கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டதற்கேற்ப, மத்தியக் குழு தயார் செய்துள்ள காந்தி பற்றிய சிறு நூல்களை தமிழில் மொழி பெயர்த்து, பொது மக்களுக்கு விநியோகம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**நூற்றாண்டு விழா பற்றி ஆராயப்பட்ட நடவடிக்கைகளின் விவரம் வருமாறு:**

பம்பாயிலுள்ள காந்தி பிலிம்ஸ் கமிட்டி, தயாரித்துள்ள காந்தி பற்றிய திரைப்படத்தின் (20th Century Prophet) 6 பிரதிகள் விற்பனைக்குத் தயாராக உள்ளன. அவற்றை வாங்கி மாவட்டங்களில் விநியோகிக்கும் விஷயமாக ஆலோசனை கோரப்பட்டது. முதலமைச்சர், பொது மக்கள் தொடர்புக் குழு (Mass Sub-committee) அதைக் கவனித்துக் கொள்ளலாம் என்றும், படம் போட்டுக் காட்ட, ஜில்லாவிற்கு ஒரு புரொஜெக்டரும், ஒரு ஆபரேடரும் அரசாங்கம் அளிக்கும் என்றும், பொது மக்கள் தொடர்புக் குழு இவை போன்ற முக்கிய பணிகளைச் செய்ய வேண்டுமென்றும் தெரிவித்தார்.

உட் குழுக்கள் என்னென்ன பணிகளைச் செய்ய வேண்டும் என்பதைப் பற்றிய விரிவான ஒரு அறிக்கையைத் தயார் செய்வதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. திரு எஸ். ஆர். சுப்பிரமணியம், ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு குழு அமைத்து, செலவைப் பாராமல் அதற்கு வேண்டிய எல்லா வற்றையும் செய்து கொடுக்க வேண்டும் என்று கருத்து தெரிவித்தார். கல்வியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன், இந்தக் காரியத்தைப் பொறுத்த வரையில், அரசு எவ்வளவு பணம் தரலாம், மக்களிடமிருந்து எவ்வளவு பெறலாம் என்பதை யோசித்துச் செய்ய ஒரு உட்குழு அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தார். மேலும், இவ்வாறு அமைக்கப்படவிருக்கும் உட் குழுவுக்கு, கல்வியமைச்சர் தலைமை தாங்க வேண்டுமென்ற திரு தெ. பொ. மீனாட்சிசுந்தரம் அவர்களின் யோசனைக்கும் இணங்கினார். திரு தி. சு. அவினாசிலிங்கம் செட்டியார், திரு தெ பொ. மீனாட்சிசுந்தரம், திரு வி. ஆர். ராதாகிருஷ்ணன், திரு கோ. வெங்கடாசலபதி ஆகியோரை உறுப்பினர்களாகவும் மாநிலக் குழுவின் செயலாளரை உட்குழுவின் செயலாளராகவும் நியமிக்க முடிவெடுக்கப்பட்டது.

**பொருட்காட்சி, கருத்தரங்குகள்**

மதுரையிலுள்ள காந்தி மியூசியம் போல் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பொருட்காட்சி அமைக்க வேண்டுமென்ற கடந்த கூட்ட தீர்

மானத்தை நான் எடுத்துரைத்தேன். கல்வியமைச்சர், சென்னையிலும், மதுரையிலும், மட்டும் இருந்தால் போதும் என்று தெரிவித்தார். கடைசியாக சென்னையிலுள்ள காந்தி மண்டபம், மியூசியம் தியேட்டர், கவர்ன்மெண்ட் எஸ்டேட், ஆகிய இடங்களில் ஏதாவதொன்றைத் தேர்ந்தெடுக்க, ஓரிரு உறுப்பினர்கள் சென்று பார்த்து முடிவு செய்யலாம் என்றும் ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட ரீதியில் பல கருத்தரங்குகளை நடத்த வேண்டுமென்ற கடந்த மாநிலக் குழுவின் முடிவுகளை எடுத்துரைத்தபோது, கல்வியமைச்சர், திரு. இரா. நெடுஞ்செழியன் பல கருத்தரங்குகளை நடத்துவதை விட, ஒரு கருத்தரங்கில் விவாதித்துக் கண்டறிந்த கொள்கைகளை மக்களுக்கு எடுத்துச் சொல்ல முயற்சிகள் மேற்கொள்ளுதல் சாலச் சிறந்தது என்ற கருத்தைத் தெரிவித்தார். "காந்தியும் அரசியலும்," "காந்தியமும் சமுதாயமும்" "காந்தியமும் மொழியும்" என்பன போன்ற பொருள்களின் கீழ், காந்தீயக் கொள்கைகளை மக்களின் முன் விளக்கிச் சொல்லலாம். சிறிதளவில், காந்தீயத்தை மறுவற நன்குணர்ந்த 4, 5 பேர்களை அழைத்து, அடிக்கடி கூடி, காந்தீயத்தின் வழிகளைப் பற்றி விவாதித்து முடிவெடுத்து, அவர்களைக் கொண்டு மக்களிடத்திலும், மாணவர்களிடத்திலும் பொதுக் கூட்டங்களிலும், எடுத்துச் சொல்ல ஏற்பாடுகள் செய்ய வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. சிறந்த அளவில் கருத்தரங்கு ஒன்றைச் சென்னையில் நடத்தலாமென முடிவு மேற்கொள்ளப்பட்டது.

### காந்தியைப் பற்றிய சிறப்புப் பதிப்புகள் வெளியிடல்

வயது வரம்புக்கேற்ப, மாணவர்களுக்கு புரியக்கூடிய வகையில் காந்தியின் வாழ்க்கையில் நடைபெற்ற நிகழ்ச்சிகளை பாடப் புத்தகங்களில் சேர்க்க ஒப்புதல் தெரிவிக்கப்பட்டது. இத்துறையில் மதுரை மியூசியம் மாணவர்களுக்காக தயாரித்துள்ள புத்தகத்தை முதலமைச்சர் பார்வையிட்டார். மூன்று வயதுப் பிரிவுகளில் மாணவர்களுக்காக காந்தியைப்பற்றிய புத்தகங்களை வெளியிட மாநிலக் குழுவுக்கு அதிகாரம் அளிக்கலாமென்ற யோசனையை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

காந்தியாருடைய வாழ்க்கையில் சில முக்கிய நிகழ்ச்சிகளை ஓரங்க நாடகங்களாக எழுதச் சொல்லி, அதிலே சிறந்ததாக இருப்பதை முழு நாடகமாக ஆக்கவும், புத்தகமாக வெளியிடவும் ஏற்பாடு செய்யலாமெனவும் முதலமைச்சர் தெரிவித்தார்கள். இப்பொழுது அரசு நடத்தி வரும் பரிசுத் திட்டத்தை, இந்த ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக இரண்டு ஆண்டிற்கு காந்தியடிகள் வாழ்க்கைச் சரித்திரத்தை ஒட்டிய நாடகங்களில் சிறப்பானவற்றுக்கு பரிசு வழங்க ஏற்பாடு செய்யலாமென்றும், அந்த மாதிரி நாடகங்களை ஆரம்பப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் நடத்தும்படியாக இருக்க வேண்டும். மாணவர்களையும் நாடகங்கள் எழுதும்படி ஊக்குவிக்கலாமென்று தெரிவிக்கப்பட்ட யோசனையையும் முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார்கள்.

### காந்தி நூற்றுண்டு விழாவில் பொது மக்களின் பங்கு

சென்ற ஆண்டு செய்தவாறு காந்தியின் படங்களை, பல வண்ணங்களிலும் தயாரித்து கார்டுகளாக பள்ளிக் கூடங்களில் இந்த ஆண்டும் விநியோகம் செய்யலாமென முடிவெடுக்கப்பட்டது. தமிழ் நாட்டில் காந்தி வந்த போது எடுக்கப்பட்ட சில புகைப்படங்களை கார்டுகளில் போடலாம் என கல்வியமைச்சர் தெரிவித்தார்கள்.

தொழிலாளர்களே பூரணமாக எடுத்துக் கொண்டு செய்து, ஊதியத்தில் ஒரு பகுதியை சேமித்து வைத்து காந்தி நூற்றுண்டு விழா சம்பந்தமாக தங்களாலியன்றதைச் செய்யும் வகையில், பூதானம், கிராம தானம் மாதிரி பெரிய தானங்களை முதலாளிகளைச் செய்யும்படி வேண்டுகோள் விடுக்கலாமென்றும், திரு ஹாஜா ஷரீப் அவர்கள் இந்தக் காரியத்திற்காக ஆவன செய்வார் என்றும் முதலமைச்சர் தெரிவித்தார். காந்தி நூற்றுண்டு விழாக் குழுத் தலைவர் என்ற முறையில் முதலமைச்சர் பொது மக்களையும் விழாக் கொண்டாடும்படி வேண்டுகோள் விடலாம் என்று திரு அவிஞசிலிங்கம் செட்டியார் அவர்களின் கருத்தை முதலமைச்சர் ஏற்றுக் கொண்டார்.

### காந்தியின் கொள்கைகளை விளக்குதல்

அங்கங்கே காந்தியின் கொள்கைகளை விளக்கி பெரிய அளவில் படங்கள், ஓவியங்கள் வைத்தல், ஒரே ஆள் பல குரலில் பேசுதல் (Mono-acting) போன்ற முறைகளில் காந்தீயக் கொள்கைகளை ஓவியங்களாகவும், நாடகங்களாகவும் பிரசாரம் செய்ய முடிவெடுக்கப்பட்டது.

கொள்கையளவில் யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு நடைமுறையில் சிலரால் கடைப் பிடிக்கப்படாமல் இருக்கும் இவ்விஷயத்தில் மக்கள் மனம் மாற யாவரும் முயற்சிக்க வேண்டும் என முதலமைச்சர் தெரிவித்தார்கள்.

### காந்தி நூற்றுண்டு விழாவில் அரசாங்க அலுவலர்களும் பங்கு கொள்ளல்.

இதைக் குறித்து திரு. வெங்கடாசலபதி அவர்கள் தெரிவித்திருந்த யோசனை ஏற்கப்பட்டு, முதல் அமைச்சர் பொதுமக்களுக்கு விடுக்கும் வேண்டுகோளில் இதனையும் சேர்த்துக் கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது.

மாநில கவர்னர், காந்தி நூற்றுண்டு விழா மாநிலக் குழுவின் புரவலராக (Patron) இருக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளவும், உட் குழுக்கள், அண்மையில் கூடி முடிவுகள் எடுத்து மாநிலக் குழுவின் பரிசீலனைக்கு அனுப்ப வேண்டுமெனவும், இந்த ஆண்டு காந்தி பிறந்த தின விழாவை சிறந்த முறையில் கொண்டாட

[33-ம் பக்கம் பார்க்கவும்]

## விவசாயிகளுக்குக் காலதாமதமின்றி, உரிய காலத்தில் கடன் வசதி, உரங்கள் அளிக்க ஏற்பாடு.

——(o)——

### கூட்டுறவுச் சங்கங்களின் தவணைப் பாக்கிகளை வசூலிக்க முயற்சி

விவசாயிகளுக்கு ஒழுங்காகவும், காலாகாலத்திலும் கடன்கள் கிடைப்பதற்கு வகை செய்யும் நோக்கத்துடன், வட்டார அபிவிருத்தி அதிகாரிகளுக்கு, கிராம வளர்ச்சி நெறியாளர், விரிவான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளார். கூட்டுறவுத் துறை மற்றும் பற்பல துறைகளின் கடன் திட்டங்களிலிருந்தும் காலாகாலத்தில் கடன்களைப் பெற்று, விவசாயிகள் பயனடைவதற்கு, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள, கூட்டுறவு வளர்ச்சி அதிகாரிகள், விவசாய வளர்ச்சி அதிகாரிகள் ஆகியோர், விவசாயிகளுடன் நெருங்கிய தொடர்பு கொள்ளும் அதிகாரிகளாகப் பணியாற்ற, தேவையான விளக்கக் குறிப்புகள் தரப்பட்டுள்ளன.

ஆதார கூட்டுறவுச் சங்கங்களில் உறுப்பினர்கள் செலுத்த வேண்டிய கடன் தவணை பாக்கியிருப்பதன் காரணமாக, விவசாயிகளுக்கு மேலும் கடனளிக்க முடியாத நிலையில், பெரும்பாலான கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இம்மாதிரியான சந்தர்ப்பங்களில், கூட்டுறவு வளர்ச்சி அதிகாரி அந்தந்த விவசாயிகளை நேரில் சந்தித்து, பழைய பாக்கிகளைச் செலுத்துமாறு செய்தால்தான், கூட்டுறவுச் சங்கங்கள் வாயிலாக, புதிதாகக் கடன்கள் பெறமுடியும்.

உரங்களை மொத்தமாக வியாபாரம் செய்யும் தாலூகா விற்பனை கூட்டுறவுச் சங்கங்களை, கூட்டுறவு வளர்ச்சி அதிகாரிகள் அணுகி, உரிய காலத்தில் உரங்களைக் கொண்டு வந்து, அவற்றை—அரசின் பல்வேறு கடன் திட்டங்கள்படி, உதாரணமாக, தீவிர உரத் திட்டம் (Intensive Manuring Scheme) மற்றும் தீவிர விவசாய திட்டப் பிரதேசங்களில் (Intensive Agricultural Area Prrogramme) உள்ள பலவித கடன் உதவிகளை உடனடியாக விநியோகிக்க ஆவன செய்ய வேண்டும். இப்போதுள்ள விதிகளையொட்டி, விதைகள் அளிப்பதற்கும் கடன் வசதிகளை பெறமுடியும்.

கூட்டுறவுச் சங்கங்கள், உரங்களையும், இதர விவசாயத்துக்குத் தேவையான பொருட்களையும், உரிய காலத்தில் வாங்கி, அவற்றை உடனடியாகக் கொண்டு சென்று, விவசாயிகளுக்கு அளிக்கும் விஷயத்தில், வட்டார அபிவிருத்தி அதிகாரிகள், நேரடியாக அதிக பொறுப்பை ஏற்றுக் கொண்டு, வட்டார அலுவலர்கள், மற்ற துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பைப் பெற்று, காரியமாற்ற வேண்டும்.

உரங்களை விநியோகிக்க, திறமான நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், பயிர்ப் பாதுகாப்புக்கான பூச்சி மருந்துகளையும், அவற்றைப் பயன்படுத்தும் தெளிப்பான்களையும் (sprayers) இதர கருவிகளையும், பதினைந்து நாட்களுக்குள் பழுதுபார்த்து, அவற்றைத் தயாராக வைத்திருத்தல் வேண்டும். அவற்றை வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் நேரில் சென்று தணிக்கை செய்ய வேண்டும்.

உரங்களை வாங்கி விநியோகிப்பதில் கூட்டுறவு சங்கங்கள் காலதாமதம் செய்கின்றன என்றும், உரங்களுக்கான 'பர்மிட்'களை, வட்டார அபிவிருத்தி அதிகாரிகள் உரிய காலத்தில் வழங்குவதில்லையென்றும், கடன் மனுக்களின் மீது எடுக்கும் நடவடிக்கைகளில் தேவையற்ற காலதாமதம் ஏற்படுகின்றதென்றும் பல முறையீடுகள் வந்துள்ளன. 'காலந்தாழ்த்தி அளிக்கப்பட்ட கடன்கள், குறிப்பிட்ட பயனுக்கு உபயோகப்படுவதில்லை' என்ற உண்மையை கவனத்தில் கொள்ள வேண்டும். எனவே வட்டார அலுவலர்களும் கூட்டுறவு சங்கங்களும் உடனடியாகத் தக்க நடவடிக்கை எடுத்து, தமது அயராத, ஒருங்கிணைந்த செயல்முறைகள் வாயிலாக இக்குறைகளையெல்லாம் களைய வேண்டும்.

[32-ம் பக்கத் தொடர்ச்சி]

திட்டம் வகுக்க, அடுத்த கூட்டத்தில் முடிவுகள் எடுக்க வேண்டுமெனவும் முடிவு செய்யப்பட்டது. மாநிலக் குழுவிலும், மற்ற உட் குழுக்களிலும் மேலும் சில உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளுவது பற்றி, கல்வியமைச்சர் அவர்கள் மேற்கொண்டு ஆவன செய்வார் என முதலமைச்சர் கூறி அனைவர்க்கும் நன்றி தெரிவித்தார்.

இந்தக் குழுவில் கலந்து கொண்ட உறுப்பினர்கள் வருமாறு :

1. கல்வியமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன்.
2. திரு தெ. பொ. மீனாட்சி சுந்தரனார்.
3. திரு தி. சு. அவினாசி லிங்கம் செட்டியார்.
4. திரு என். எம். ஆர். சுப்பராமன்.
5. திரு கோ. வெங்கடாசலபதி.
6. திரு வீ. பத்மநாபன்.
7. திரு எஸ். ஆர். சுப்பிரமணியம்.
8. திரு கே. எஸ். ஜி. ஹாஜா ஷரீப்.
9. திரு வி. ஆர். ராதா கிருஷ்ணன்.
10. திரு செல்வி. டாக்டர். எஸ். விஜயலெட்சுமி.
11. திருமதி அமிர்தா ராம சுப்பிரமணியம்.
12. திரு ஜே. எம். தத்தா.

பொதுத் துறை துணைச் செயலாளர் (பொறுப்பு—செய்தித் துறை நெறியாளர்) திரு கே. வெங்கட்ராமன், ஐ. ஏ. எஸ். அவர்களும் செய்தித் துறை உதவி நெறியாளர், திரு சி. என். கிருஷ்ண பாரதி அவர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

ஆந்திரப் பிரதேசத்தின் தெலுங்கானா பகுதியிலுள்ளது 'முதோல்' என்ற பஞ்சாயத்து யூனியன்- 1964-1965-ம் ஆண்டில், இதுதான் ஆந்திராவிலேயே சிறந்த ஊராட்சி என்று தெரிந்தெடுக்கப்பட்டு பரிசளிக்கப்பட்டுள்ளது. இது அதிலாபாத் என்ற மாவட்டத்திலிருக்கிறது.

## முதலிடம்

ஐம்பத்தி நான்கு ஊராட்சிகளை உள்ளடக்கிய இந்த யூனியன் மக்கள் தொகை ஒரு லட்சமாகும்; மொத்த நிலப்பரப்பு 2, 65, 762 ஏக்கர்கள். இங்கு பெரும்பாலும் சோளம், பருத்தி, மிளகாய், துவரை, நெல், கோதுமை ஆகியவை பயிரிடப்படுகின்றன. முதோல் யூனியனில் 133 பாசன ஆதாரங்கள் இருக்கின்றன.

### விவசாயம்

வேளாண்மைத்துறையில் முதோல் யூனியன் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பெற்றுள்ளது. ரசாயன உரங்கள் இடுதல், பொறுக்கு விதைகளைப் பயன்படுத்துதல் ஆகியவை ஒரு சாதாரண நடவடிக்கையாகிவிட்டது. இந்தப் பகுதியில் பொறுக்கு விதைகளுக்கு நல்லதேவை ஏற்பட்டுள்ளது. சென்ற ஆண்டில் 14,721 மணங்கு பொறுக்கு விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன. எல் 147 என்ற ஒரு புதிய பருத்தி ரகம், பத்தாயிரம் ஏக்கர்களில் பயிரிடப்பட்டு வருகிறது, உரங்களை விநியோகிப்பதோடு நின்று விடாமல் விவசாயிகளுக்குத் தக்காவிக் கடன்களும் இரண்டு லட்சத்து இருபதாயிரம் ரூபாய் வரை அளிக்கப்பட்டுள்ளது. யூனியனால் 84 கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. இவ்வாறான காரியங்களினால் 250 ஏக்கர்கள் புதிதாக விவசாயத்தில் கொண்டுவரப்பட்டிருக்கின்றன.

கால்நடை வளர்ச்சிக்கு யூனியன் தனிக் கவனம் செலுத்தி வருகிறது. விவசாயிகளுக்கு இரண்டு பொலிக் காளைகள், 150 சேவல்கள், 1,238 கோழிகள், 1,444 முட்டைகள், 1963-ம் ஆண்டு வழங்கப்பட்டுள்ளது. தொத்து நோய் அண்டாமலிருக்க, 2,924 கால்நடைகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டுள்ளது. இது தவிர, 28,153 மிருகங்களுக்கும் தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

### கல்வி

முதோல் யூனியனில் 115 பள்ளிகள் இருக்கின்றன. கட்டாயக் கல்வி முறை சில பள்ளிகளில் அமுல் செய்யப்பட்டு வருகிறது. பஞ்சாயத்துக்களின் ஒத்துழைப்போடு 24 பள்ளிகளில் மதிய உணவு வழங்கப்படுகிறது. இதனால் 2,182 குழந்தைகள் நன்மையடைந்துள்ளனர். ஏழை மாணவர்களுக்கு ரூ. 2,400 மதிப்புள்ள புத்தகங்கள் இலவசமாக அளிக்கப்பட்டுள்ளன. பள்ளிகளுக்காக 19 கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 17 கட்டிடங்கள் முடியும்

## பெற்ற

தருவாயிலிருக்கின்றன. இவற்றிக்காகும் செலவில் 50 சத வீதத்தை மக்களே நன்கொடையாக அளித்துள்ளனர்.

இளைஞர் நலத்தைப் பேணிப் பாதுகாக்க 22 இளைஞர் மன்றங்கள் இந்த யூனியனில் செயல்பட்டு வருகின்றன. இவற்றில் 3,132 உறுப்பினர்கள் இடம் பெற்றுள்ளனர். 7 முதியோர் கல்வி நிலையங்களில், 140 முதியோர்கள் கல்வியறிவு பெற்று வருகின்றனர்; ஒவ்வொரு பஞ்சாயத்து அலுவலகத்திலும் ஒரு படிப்பகம் இருக்கிறது. 1,034 பேர்களை உறுப்பினர்களாகக் கொண்ட 47 கேளிக்கை மன்றங்கள் முதோல் யூனியனில் செயலாற்றி வருகின்றன.

### கூட்டுறவு

ஏழு கிராமங்கள் தவிர்த்து, ஏனைய 143 கிராமங்களிலும் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 13,000 விவசாயக் குடும்பங்கள் (70 சத வீத மக்கள்) இவற்றில் உறுப்பினர்களாகச் சேர்ந்து பயனடைந்து வருகின்றனர். தற்போது 39 கூட்டுறவு நாணயச் சங்கங்களும், 32 பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன. நாணயச் சங்கங்களில் பதின்மூன்றை பலநோக்கு சங்கமாக மாற்ற கோரிக்கை இருந்து வருகின்றன.

பஞ்சாயத்துத் தேர்தல்களுக்காக இங்கு பூசல்களே இருந்ததில்லை. 1964-ம் ஆண்டில் நடந்த பஞ்சாயத்து தேர்தல்களில், 39 பஞ்சாயத்துக்களுக்கு உறுப்பினர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர். 54 பஞ்சாயத்துக்களில் 25 பஞ்சாயத்துக்கள் வரித்தொகை முழுவதையுமே வசூலித்துள்ளன. மேலும் 22 பஞ்சாயத்துக்கள் 75 முதல் 94 சதவீதம் வரை வரி வசூலித்துள்ளன.

இந்த யூனியனிலுள்ள 'சவாலி' என்ற பஞ்சாயத்துதான் சிறந்த பஞ்சாயத்து என்று தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

மக்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க யூனியன் நல்ல முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. 'பாசன்' என்ற இடத்தில் ஓர் ஆடைகள் தயாரிக்கும் நிலையமும் மற்ற ஐந்து இடங்களில் தையல் நிலையங்களும் நிறுவப்பட்டு செயலாற்றி வருகின்றன. இந்த ஒவ்வொரு நிலையத்திலும் 20 பேர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர். 18 தையல் இயந்திரங்கள், பாதி விலையில் பயிற்சி பெறுபவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளன.

யூனியனில் ஒரு ஆதார சுகாதார நிலையமும், 4 துணை நிலையங்களும் வைத்திய உதவியை அளித்து வருகின்றன.

## 'முதோல்'

இவ்வாறெல்லாம் பல்வேறு துறைகளிலும் முதோல் யூனியன் சிறந்து விளங்குவதற்கு, அனுபவத்திறன் வாய்ந்த விவசாயியான, திரு கந்தண்ணா அவர்களின் தலைசிறந்த தலைமைப் பணியேயாகும்.

## வழிகாட்டும் விவசாயி

'சோனூரா-64 என்ற உயர் விளைச்சல் ரக மெக்சிகன் கோதுமையை பொன் என்றே குறிப்பிடுவது, சந்தன்ராம் என்ற விவசாயியின் வழக்கம். அவ்வாறு கூறுவதற்குக் காரணமும் உண்டு. அது அவருடைய 0.8 ஹெக்டேர் (2 ஏக்கர்) நிலத்தில் 50 குவிண்டால் விளைச்சல் கொடுத்துள்ளது. ஹரியானா மாநிலத்திலுள்ள 'நிலக்கோரி' வட்டாரத்தில், சிறந்த விளைச்சலைப் பெற்றவர்களுள் இவரே முதன்மையானவர்.

### மண்ணில் விளைந்த பொன்னு நம்

ஐம்பத்து ஐந்து வயதுடைய சந்தனராம் முயற்சியுடன் உழைத்து முன்னேறிய விவசாயி. 'நிலக்கோரி' வட்டாரத்தில் தாத்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர். 'சோனூரா-64' விதையை விதைத்துப் பயிர் செய்து காட்டுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட ஆறு விவசாயிகளில் அவரும் ஒருவர். ஏனைய விவசாயிகள் ஒரு ஹெக்டேருக்கு 41 குவிண்டால் விளைச்சலைப் பெற்றபோது, சந்தன்ராம் ஒரு ஹெக்டேருக்கு 64 குவிண்டால் விளைச்சலைப் பெற்று, தன்னுடைய திறமையை வெளிப்படுத்தினூர். C-281 C—273 விதைகளைக்காட்டிலும் 'சோனூரா-64' மும்மடங்கு விளைச்சலைக் கொடுத்துள்ளது.

புதிய விதைகளைப் பயிரிடுவது, சந்தன்ராமுக்குப் புதியதன்று. முன்னரே, விவசாயத்துறை அதிகாரிகளின் சொற்படி வீரியச் சோளத்தைப் பயிரிட்டு ஒரு ஹெக்டேருக்கு 33 குவின்டால்களை விளைவித்தார். 320F என்னும் புதிய பருத்தியைப் பயிரிட்டு ஒரு ஹெக்டேருக்கு 15 குவின்டால் விளைச்சலையும் அவர் அடைந்தார்.

அவர், நிலத்தை நன்கு உழுது பண்படுத்தி. விதைப்பதற்கு முன், தன் இரண்டு ஏக்கர் நிலத்தில் வாரம் இரு முறை நீர் பாய்ச்சினூர். அவர் இதற்கு முன் விளைவித்த சோளப் பயிருக்காக 50 வண்டிகள் தொழு உரமிட்டிருந்ததால், இப்பொழுது தொழு உரமிடவில்லை.

ஒரு ஹெக்டேருக்கு 375 கிலோ அமோனியம் சல்பேட்டு, 250 கிலோ சூபர் பாஸ்பேட், 75 கிலோ பொட்டாசியம் சல்பேட்டு ஆகிய உரங்கள் விதைப்பதற்கு முன் போடப்பட்டன.

விதைக்கும் இயந்திரத்தைக் கொண்டு பின் ஒரு ஹெக்டேருக்கு 90 கிலோ வீதம் விதைகளிட்டார். முதல் பாசனம் செய்த 15 நாட்களுக்குப் பின், ஒரு ஹெக்டேருக்கு 125 கிலோ அமோனியம் சல்பேட்டை இரண்டாவது பாசனத்தின் போது இட்டார். இருபது நாட்களுக்கு மீண்டும் ஒருமுறை நீர் பாய்ச்சப்பட்டது.

### அனுபவ ஆராய்ச்சி

"சாதாரணமாக நம் உள்நாட்டுக் கோதுமையைப் பயிர் செய்யும் போது பயிர் பூக்கும் நிலையில், நீர் பாய்ச்சுவதில்லை. வெப்ப நிலை உயர்ந்தாலும், வரண்ட காற்று வீசினூலும், பயிருக்கு நீர் தேவையாக இருந்தாலும், நாம் நீர் பாய்ச்சுவதில்லை. நீர் பாய்ச்சினுல், பயிர் கீழே வீழ்ந்துவிடும். ஆனுல், 'சோனூரா-64,க்கு அவ்வாறு நேர்வதில்லை. இச்சமயத்தில் நீர்ப்பாசனம், தேவை" என்று சந்தன்ராம் கூறுகிறூர். எனவே, 'சோனூரா-64' பூக்கும்பொழுதும், பயிர் வளரும் பொழுதும், இரு முறை அவசியம் நீர்ப்பாசனம் செய்ய வேண்டும்.

'சோனூரா-64' விதை, உள்நாட்டுக் கோதுமை போல உயரமாக வளராததால், சிறந்த விளைச்சலை அளிக்காது என்று தாத்பூர் விவசாயிகள் சிலர் கருதினர். ஏனையோர் அது நல்ல பலனைக் கொடுக்கும் என்று நினைத்தனர்.

இவ்வாறு தாத்பூர் விவசாயிகள் 'சோனூரா-64'-க்காகவும், அதற்கு எதிராகவும் இரு வேறு கருத்துடைய

[41-ம் பக்கம் பார்க்க]

[வரவு-செலவுத் திட்டம்—29-ம் பக்கத் தொடர்ச்சி].

இப்போது நிறைவேற்றப்பட்டு வரும் பற்பல நகர நீர் வழங்குத் திட்டங்களுக்காக, ஒரு கோடியே 70 லட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இத் துறையில் ரூ. 40 லட்சம் செலவில் ஆம்பூர் நகர நீர் வழங்குத் திட்டத்திற்கும், ரூ. 28·48 லட்சம் செலவில் திருப்பத்தூர் (வட ஆர்க்காடு) நகர நீர் வழங்குத் திட்டத்திற்குமாக, இரு புதிய திட்டங்களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

## உள்ளாட்சித் துறையில் புதிய வசதிகள்

சென்னை மாநகரில் நிறைவேற்றப்பட்டு வரும் நீர் வழங்கல், கழிவுநீர்த் திட்டங்களில் பெரும் இடையூறு ஏதுமின்றி நிறைவேற்ற ரூ. 150 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. சென்னை மாநகருக்கு இப்போது நகரின் புறம்பேயுள்ள சத்தியமூர்த்தி சாகரம், சோழவரம் ஏரி, புழலேரி ஆகிய மூன்று நீர்த் தேக்கங்களிலிருந்து, குடி நீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. இவற்றிலிருந்து நாளொன்றுக்குச் சராசரி 30 மில்லியன் காலன் தண்ணீர் வழக்கமாக கிடைக்க வகை செய்யப்பட்டிருக்கிறதென்ற லும், இம் மாபெரும் பட்டினத்தின் வளர்ந்து வரும் மக்கட் தொகையின் தற்போதைய தேவைக்கும் எதிர் காலத் தேவைகளுக்கும் இது போதாது. இக்குறைந்த அளவு நீரும் நிலையாகக் கிடைக்குமென்று செப்புவதற் கில்லை. மற்றும், வரட்சி மிக்க ஆண்டுகளில் நாளொன் றுக்கு 12 மில்லியன் காலன் தண்ணீர் கிடைப்பதும் அரிது. இதனால் நகர மாந்தர்க்கு அடிப்படையான ஒரு வசதி மறுக்கப்படுவது ஒருபுறமிருக்க, நம்பிக்கையான நீர் வசதியின்மையால், இம் மாநகரிலும் அதன் சுற்றுப் புறப் பகுதிகளிலும் தொழில் வளர்ச்சி, பெரிதும் தடை படும். மாநகரிலும் அதனை அடுத்துள்ள பகுதிகளிலும் நீர் வசதியைப் பெருக்க வேண்டிய இன்றியமையாத் தேவையைக் கருதி, அரசு சின்னாட்களுக்குமுன் சில திட்டங்களுக்கு ஒப்பளிப்பு வழங்கியது. பூண்டியிலிருந்து புழலேரிக்குத் தண்ணீர் வரும் வழியில் இழப்பு ஏற்படா மலிருக்க, காரைப்பூச்சுக் கால்வாய்களைக் கட்டுதல், புழ லேரி, சோழவரம் ஏரிகளில் இப்போது பாசனத்திற்குப் பயன்படுத்தி வரும் 550 மில்லியன் கன அடி தண்ணீரைச் சேமிக்கும் வகையில் அந்த ஏரிகளின் கீழுள்ள 7,500 ஏக்கர் ஆயக்கட்டு முழுவதையும் கைவசப்படுத்திக்கொள்ளு தல், புழலேரி, சோழவரம் ஏரிகளின் முழு ஏரி மட்டத்தை (F. T. L.) உயர்த்தி, கூடுதலாக 680 மில்லியன் கன அடி தண்ணீரைச் சேமிக்க வகை செய்தல்—ஆகிய இத் திட்டங் களுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது.

இம் மாநகர மாந்தரின், மற்றுமொரு நீண்ட நாளைய குறை தற்போதைய நிலையில், பொதுச் சுகாதா ரத்திற்கே பெருங்கேடு சூழ்வதாய் உள்ள கூவம் ஆற்றினை சீராக்கிச் செவ்விய முறையிலே மேனிலைப் படுத்துவதாகும். இத் திட்டத்திற்காகும் செலவு ஏறக்குறைய 1 கோடியே 20 லட்சம் ரூபாய் என மதிப்பிடப்பட்டது. இந்த ஆற்றின் கரை மருங்கில் உள்ள இடங்களை வௌவி (Encroach) அங்கே இப்போது வாழ்ந்து வரும் மக்களுக்கு மறு வாழ்வு வசதியளிக்கத் தேவைப்படும் நிதி ஒதுக்கமும் இதில் அடங்கும்.

மாநிலங்களில் நிதி வரட்சியை ஏற்படுத்திவிட்டு, மத்திய அரசு, தனது நிதி நிலையைச் செயற்கையாகச் சமன் படுத்திக் கொள்ளும் முறை பொருத்தமானதென்று எவ ரும் கூறுர். வளர்ச்சித் திட்டங்களில் ஈடுபடுத்தக் கருதி யுள்ள முதலீடுகளைப் பெருமளவுக்குக் குறைத்திருக் கிறேம் ; மேலும் குறைக்க முயல்வது உண்மை நிலைக்கு மாருகும் ; நடைமுறைக்கும் ஒவ்வாததாகும். இதைக் கருத்தில் கொண்டும், நமது நிதி வசதிகளைக் கட்டிக்காக்க நாம் மேற்கொண்டுள்ள முயற்சிகளைக் கண்கூடாகக் கண்டும், மத்திய அரசு தனது நிதி வசதிகளையும், நமது குறைந்த அளவுத் தேவைகளையும் பற்றி மறு ஆய்வு செய்யும் ; அப்பால் தனது உதவி அளவை ரூ. 43 கோடி 50 லட்சத்திற்கேனும் உயர்த்துமெனபதில் எனக்குச் சற்றும் ஐயமில்லை. இவ்வாறு உதவி கிட்டுமென்ற அடிப் படையில், குறிப்பாக, நல்ல பருவமழை பெய்து, நாம் அனைவரும் எதிர்ப்பார்க்கிறபடி, நாட்டின் பொருளாதார நிலையில் சற்று மேம்பாடு அடைவதால் இவ்வுதவி உறுதி யாகக் கிட்டும் என்ற அடிப்படையில் நமது திட்டத்தைத் தீட்டியுள்ளோம்.

## மாநில நிதிநிலை...

தற்போதைய வரி வீதங்களின்படி, நடப்பு ஆண்டிற்குரிய வருமானக் கணக்கில் வரவினங் கள் ரூ. 210·82 கோடியாகவும், வருமானக் கணக்கில் செலவினங்கள் ரூ. 217·19 கோடியாகவும் மதிப்பிடப்படுகின்றன. இதனால், இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் 7 கோடியே 60 லட்சம் ரூபாய் துண்டு விழுமென எதிர்பார்க்கப்பட்டதற்கு மாருக, 6 கோடியே 37 லட்சம் ரூபாய் துண்டு விழுகிறது. அரசு வாணிபத் திட்டங்களுக்குச் செய்யும் மூலதன முதலீடு நீங்கலாக, இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில் மூல தனச் செலவிற்கென ரூ. 20·50 கோடி அளவில் வகை செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கம், முறையான இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 22·70 கோடியாக, இப் போது உயர்த்தப்பட்டுள்ளது. இது தவிர, இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், இது 28 கோடியே 60 லட்சம் ரூபாயாக இருக்குமென்று எதிர்பார்க்கப்பட்ட மின்சார வாரியத்தின் (Electricity Board) மூலதன முதலீடு, 30 கோடியே 60 லட்சம் ரூபாய் அளவில் இருக்கும்.

வருமானக் கணக்கில் நமது பற்றுக்குறையை ஈடுகட்ட உதவுவதற்காக மட்டுமின்றி, மத்திய விற்பனை வரி வீதம் சென்ற ஆண்டு 2 சதவீதத்திலிருந்து 3 சதவீதம் ஆக உயர்த்தப்பட்டதன் விளைவாகவும் இம் மாற்றம் தேவைப் படுகிறது. நிலக்கரி, பருத்தி, பருத்திநூல், இரும்பு, உருக்கு, சணல், எண்ணெய் வித்துக்கள், ஏலக் காய், வேர்க்கடலை, தோல் போன்ற சில பொருட்கள், தனிப்பட்ட முக்கியத்துவம் வாய்ந்தவை என அறிக்கை யிட்டு மாநிலங்கட்கிடையிலும், மாநிலத்தினுள்ளும் நடை பெறும் விற்பனைகள் மீதான வரியின் உச்ச வரம்பையும் இச் சட்டம் குறிப்பிட்டுள்ளது. இந்த “ அறிக்கையிடப்பட்ட சரக்குகளைப்” (Declared goods) பொறுத்த வரை, சென்ற நிதியாண்டு வரை 2 சத வீதமாக இருந்த இவ்வுச்ச வரம்பு, 3 சத வீதமாக மத்திய விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் உயர்த்தப்பட்டுள்ளது.

### நிதி நிலை அறிக்கை

ஆடம்பரப் பொருட்கள் எனக் கூறப்படும் கார், குளிர் பதனப்பெட்டி போன்ற, தமிழக பொது விற்பனை வரிச் சட்டத்தின் முதல் அட்டவணையில் 1 முதல் 14 வரை யுள்ள பொருட்களின் மீதான விற்பனை வரியை 11 சத வீதத்திலிருந்து 12 சத வீதமாக உயர்த்த அரசு இப்போது முடிவு செய்துள்ளது. அறிக்கையிடப்பட்ட சரக்குகளில், நிலக்கரி, இரும்பு, உருக்கு, சணல், எண்ணெய் வித்துக் கள், ஏலக்காய் இவை பற்றிய வீதங்களை, இரண்டு சத வீதத்திலிருந்து, மூன்று சத வீதமாக உயர்த்தத் தீர் மானிக்கப்பட்டுள்ளது. வேர்க்கடலை மீதான வரி 1½ சத வீதத்திலிருந்து 2 சதவீதமாகவும், பதனிடப்படாத தோல் மீதான வரி 2 சத வீதத்திலிருந்து 3 சத வீத மாகவும், பதனிடப்பட்ட தோல் மீதான வரி 1 சதவீதத் திலிருந்து 1½ சத வீதமாகவும் உயர்த்தப்படும். நெச வாலைத் தொழில் தற்போது நெருக்கடியான நிலையில் இருந்து வருவதாலும், கைத்தறி மீது அரசினர்க்குத் தனி கவனம் உண்டாதலாலும், பருத்தி, பருத்தி நூல் மீதான வரி வீதத்தை உயர்த்துவதில்லையென முடிவு செய்துள்ளோம். இவற்றின் மீதான வரி, தொடர்ந்து 2 சத வீதமாகவே இருந்து வரும். ஒரு முனை விற்பனை வரிக்குட்பட்ட மற்ற பண்டங்களின் மீதான வரி வீதம் ½ சதவீதம் கூட்டப்படும். எனினும் காபி (32-ம் இனம்), தேயிலை (36-ம் இனம்), சோப்பு (37-ம் இனம்) மண் ணெண்ணெய் (35-ம் இனம்), இரசாயன உரங்கள் (21-ம் இனம்) இவை மீதான வரி வீதங்களில் உயர்வேதுமிராது. தங்கம், வெள்ளி (Bullion) (15-ம் இனம்) விற்பனை மீதும் வரி உயர்விராது. அண்டை மாநிலங்கள் சில வற்றில் உள்ளதைப் போன்று, பல முனை விற்பனை வரி 2½ சத வீதத்திலிருந்து 3 சத வீதமாக உயர்த்தப்படும். கோதுமை, கோதுமைப் பொருட்கள் மீது தற்போது விதிக்கப்பட்டு வரும் சலுகை வரி வீதமான 1 சதவீதத் தில் உயர்வு ஏதும் இராது.

### சிறு வியாபாரிகளுக்குச் சலுகை

வரி விதிப்பு, வசூலித்தல் ஆகிய எந்தக் கட்டத் திலும் மெலிந்த நிலையினரான சிறு வியாபாரிகட்குச் சங்கடம் விளைவிக்கக் கூடாது, சலுகை காட்டவேண்டும் என்பதை அரசு உணர்ந்துள்ளது. ஆகவே ஆண்டுக்கு ரூ. 10,000-க்கு குறைவாக விற்பனையுள்ள வியாபாரிகள், விற்பனை வரி செலுத்துவதிலிருந்து தற்போது விலக் களிக்கப்பட்டுள்ளனர். பின்னர் விலக்கு எல்லைக்குமேலாக விற்பனையளவு உயர்ந்தால், வரி விதிப்பின்கீழ் அவர் களைக் கொணரும் வண்ணம், ரூ. 7,500-க்கு மேல் ரூ. 10,000-க்குள் விற்பனையுள்ள வியாபாரிகள் பதிவு செய்து கொள்ள வேண்டியுள்ளது. விலக்குக்கான இவ் வரம்பை உயர்த்த வேண்டுமென வர்த்தகர்களிடமிருந்து அடிக்கடி வேண்டுகோட்கள் வந்துள்ளன. இதனையேற்ப தென அரசு முடிவு செய்து, விற்பனை வரி விலக்குக்கான வரம்பை ரூ. 10,000-லிருந்து, ரூ. 15,000 ஆக உயர்த்த முன் வந்துள்ளது. இதன் விளைவாக, வரி விதிப்புக்குட் பட்டோர் ஏறத்தாழ 16,000 பேர், அதாவது, வரி விதிப் புக்குட்பட்டோரது மொத்த எண்ணிக்கையில் ஏறத்தாழ 18 சத வீதம் வரி விலக்குப் பெறுவர். இதனால் 21 லட்ச ரூபாய் வருமான இழப்பு நேரிடினும், சிறு வியாபா ரிகளது நெடுநாட் கோரிக்கையொன்றை நிறை வேற்றி வைக்கின்றோம். இதையொட்டி, பதிவு செய்து கொள்வ தற்கு விலக்களிக்கும் வரம்பும் ரூ. 7,500-லிருந்து ரூ. 10,000 ஆக உயர்த்தப்படும். நமது விற்பனை வரிச் சட்டம் ரூ. 50,000 வரை விற்பனையுள்ளவர்கள், சில பொது வீதங்களின்படி உடன்பட்டு வரி செலுத்த இசைவு அளிக்கின்றது. சிறு வியாபாரிகட்கு நிவாரணம் தரும் வகையில், உடன்பட்டு வரி செலுத்தும் வரம்பை ரூ. 50,000-லிருந்து, ரூ. 75,000 ஆக உயர்த்தலாமென அரசு முடிவு செய்துள்ளது. சிக்கலான வரி விதிப்பு முறைகளிலிருந்து மேலும் பல சிறு வியாபாரிகட்கு நிவாரணம் தரும் வகையில் இவ் வரம்பு ரூ. 75,000 ஆக உயர்த்தப்படும்.

கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டும் நம் முயற்சி யில் அடுத்த செயற்குறிப்பு, தமிழக மோட்டார் வண்டி வரிச் சட்டத்தின்கீழ் பஸ்களின் மீது விதிக்கப்படும் மோட்டார் வண்டி வரியை மாற்றியமைப்பதைப் பற்றியதாகும். அன்றாடம் சென்றுவரும் வழித்தடத்தின் நீளத்தையொட்டி, தற்போது பின் வருமாறு வரி விதிக்கப்படுகிறது;—

| பஸ்ஸின் அன்றாட வழித்தட நீளம். | ஒரு நபர்—இடத் துக்கு, காலாண்டுக் குத் தற்போதைய வரி வீதம். |
|---|---|
| | ரூ. |
| 210 கிலோ மீட்டருக்கு மேற்படாதிருப்பின். | 35 |
| 210 கிலோ மீட்டாக்கு மேல், 270 கிலோ மீட்டருக்கு மேற்படாது இருப்பின். | 40 |
| 270 கிலோ மீட்டருக்கு மேல் .. .. | 45 |

210 கிலோ மீட்டருக்குக் குறைவாக ஓடும் பஸ்களின் எண்ணிக்கை, அதிலும் குறிப்பாக நகருக்கு வெளியே உள்ள பகுதிகளில் இவ்வாறு ஓடும் பஸ்களின் எண் ணிக்கை மிகக் குறைவே. பஸ்களின் பெரும்பாலானவை ஏற்கெனவே ஒரு நாளுக்கு 270 கிலோ மீட்டருக்கு மேல் ஓடிக் கொண்டிருக்கின்றன.

இதனைக் கருத்திற் கொண்டு, கூடுதல் நிதி வசதி திரட்ட வேண்டியதன் பொருட்டு, பின் வருமாறு இவ் வீதங்களை மாற்றியமைக்க அரசு முடிவு செய்துள்ளது:—

| பஸ்ஸின் அன்றாட வழித்தட நீளம். | ஒரு நபர்—இடத் துக்கு, காலாண் டொன்றுக்கு மாற்றியமைக்கப்பட்ட வரி வீதம். |
|---|---|
| | ரூ. |
| நாளொன்றுக்கு 270 கிலோ மீட்டரோ, அதற்குக் குறைவாகவோ இருப்பின். | 50 |
| நாளொன்றுக்கு 270 கிலோ மீட்ட ருக்கு மேற்படின். | 55 |

700 கிலோ கிராமும், அதற்குக் குறைவாகவும் தன் எடை (unladen weight) கொண்ட மோட்டார்கார்களுக்கான காலாண்டு வரியை ரூ. 21-லிருந்து ரூ. 30 ஆகவும், 700 கிலோ கிராமுக்கு மேற்பட்டு 1,500 கிலோ கிராமுக்கு மேற்படாத தன்னெடை கொண்ட கார்களுக்குக் காலாண்டு வரியை ரூ. 30-லிருந்து ரூ. 40 ஆகவும் 1,500 கிலோ கிராமுக்கு மேற்பட்ட தன்னெடையுள்ள கார்களுக்கான வரி வீதங்களை இதையொத்த முறையில் உயர்த்துவதெனவும் அரசு முடிவு செய்துள்ளது. மோட்டார் சைக்கிள்கள், ஸ்கூட்டர்கள், முச்சக்கர வண்டிகள் மீதான வரி வீதங்களில் உயர்வேதும் இராது. 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 1-ம் நாள் முதல் செயல்படத்துவங்கும் இம்மாற்றிய வீதங்களின்படி, இவ்வாண்டில் 10 லட்ச ரூபாய் கூடுதல் வருமானம் எதிர்பார்க்கப்படுகிறது.

நம் நாட்டிலேயே தயாரிக்கப்படும் மது வகைகள் மீது ஒரு லிட்டர் சாராயச் சத்துக்கு ரூ. 8 வீதம் ஆயத்தீர்வை தற்போது விதிக்கப்படுகிறது. மற்ற மாநிலங்களில் விதிக்கப்படும் ஆயத்தீர்வையுடன் ஒப்பிடும்போது இது மிகக்குறைந்ததே. தமிழக மது விலக்குச் சட்டத்தின் 18(A) பிரிவின்படி, மது வகைகளின் மீது விதிக்கப்படுகின்ற ஆயத்தீர்வையை ஒரு லிட்டர் சாராயச்சத்துக்கு ரூ. 18 என்று உயர்த்த எண்ணியுள்ளோம். 1937-ம் ஆண்டு தமிழக மது விலக்குச் சட்டத்தின் 21(A) பிரிவின் கீழ் மது வகைகளின் விற்பனை விலை மீது, ரூபாய்க்கு 50 காசு என்ற வீதத்தில் விற்பனை வரி விதிக்கப்படுகிறது. உள்நாட்டில் தயாரிக்கப்படும் அயல் ரக மதுவின் மீது ஆயத்தீர்வையை கூட்டியிருப்பதையடுத்து, இறக்குமதி செய்யப்படும் மதுவகைகள் மீதான விற்பனை வரியையும் ரூபாய்க்கு 50 காசிலிருந்து ரூபாய்க்கு 75 காசாக உயர்த்த எண்ணியுள்ளோம். இவற்றால், இவ்வாண்டில் 10 லட்ச ரூபாய் கூடுதல் வருமானம் கிட்டுமென எதிர்பார்க்கப்படுகிறது.

### மாநிலங்களின் நிதி வளர்ச்சிக்குரிய வழி என்ன ?

இதுவரை நான் விளக்கிய கொள்கைகளும், வேலைத்திட்டங்களும், நிதி வசதிகளைத் திரட்டுவதற்காக எடுத்துள்ள இம்முயற்சிகளும், உறுதிமொழியொன்று தேவைதான் என்றால், நிதி நிலையைக் குலையச் செய்யாது முன்னேற்றம் காண்பதே நம் கருத்து என்பதற்கு உறுதி கூறும். நாங்கள் நிர்வாகத் துறைக்குப் புதியவர்களாயிருக்கலாம் ; ஆனால் "சமூக நீதி" யின் அடிப்படையில் அழுத்தமான நம்பிக்கை கொண்டவர்கள் ; சேமிப்பு, சிக்கனம் ஆகிய நற் பண்புகளை என்றுமே வலியுறுத்தி வந்திருக்கும் தமிழகத்தின் பழம் பெரும் பண்பாட்டின் வழி வந்தவர்கள். நிதி நிர்வாகத்தில் ஒழுங்கு பற்றிப் பெரிதும் பேசப்பட்டு வரும் இந் நாளில், இந்த அடிப்படை நற்பண்புகளை இன்னும் தொடர்ந்து கைக்கொண்டு வருபவர்களது முயற்சிகள் உரிய இடங்களில் உணர்ந்து பாராட்டப்பட வேண்டும். நியாயமான அளவு செலவு பொறுப்பிற்குள்ளேயே, மக்களுக்கு நலம் பயக்குமென நாம் கருதுகின்ற எல்லாத் துறைகளிலும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளோம். பயனில் செலவினைக் குறைக்கும் முயற்சிகளைத் தொடர்ந்து செய்து வருவோம். நிதி வசதிகளைப் பேணிப் பெருக்குவோம். நாம் விழைவதெல்லாம், திட்டத்திற்காக ஒப்புக் கொண்டதற்குள்ளேயே, சிறிது கூடுதல் உதவி தருவதன் மூலம், இவையனைத்தையும் அறிந்து பாராட்ட வேண்டுமென்பதே. திட்டமிட்ட பொருளாதார மேம்பாடு மத்திய, மாநில அரசுகளின் கூட்டு முயற்சியெனின், இயன்ற பங்கைச் செய்து முடித்துவிட்ட நாம், நம்முடன் கூட்டாகப் பணியாற்றுபவரும் அவர் பங்கைச் செய்ய வேண்டுமெனக் கேட்பதற்குரிமையுண்டு. நாம் கேட்பதெல்லாம் இது மட்டுமே.

மாநிலங்களின் வளர்ச்சிக்காக வாதாடுவது நாட்டு ஒற்றுமையைக் கெடுத்துவிடும் என்று கிலி மூட்டும் பேச்சு கிளப்பிக் கொண்டிருப்பதிலே பயன் இல்லை. மாநில-மத்திய அரசுத் தொடர்புகள் பற்றிய விதிகளும் முறைகளும் உருவாக்கப்பட்டபோது இருந்து வந்த நிலைமைகள் வெகுவாக இன்று மாறிவிட்டிருக்கின்றன. இந்திய அரசியல் சட்டம் தீட்டப்பட்டபோது எதிர்பார்த்திருக்கவே முடியாத பல நிகழ்ச்சிகளும் நினைப்புகளும் தோன்றிவிட்டன. இந்திய அரசியல் சட்டத்தின் விதிகளின்படி ஏற்கனவே பெருமளவு அதிகாரம் மத்திய அரசிடம் குவிந்து விட்டிருக்கிறது. இத்துடன், அரசியல் சட்டம் தீட்டப்பட்டபோது எதிர்பார்த்திராத புதிய துறை ஒன்றின் மூலம், மத்திய அரசின் மேலதிகார நிலை மேலும் வளர்ந்து, மாநில நிலையை மிகவும் கவலைக்குரியதாக்கி இருக்கிறது. அந்தத் துறைதான், திட்டமிடும் துறை. இதற்கான நிதி திரட்டும் முறை, பங்கிடும் வகை, நிதியைச் செலவிடும் விதம் ஆகிய அனைத்திலும், மத்திய அரசு பெற்றுள்ள அதிகாரம், மாநில அரசினை 'கையேந்தும்' நிலைக்குக் கொண்டுவந்து விட்டிருப்பதனை உணராதார் இல்லை. கட்சிக் கட்டுப்பாடு காரணமாகச் சிலர் இது குறித்துப் பேசத் தயங்கிடினும், முற்றிலும் பொருளாதார நோக்குடன் இந்தப் பிரச்சினையைக் கவனிப்போர், எந்தக் கட்சியினர் எனினும், வருத்தம் தெரிவித்துள்ளனர். மத்திய அரசின் நடவடிக்கையால் விலைகள் கட்டுக்கடங்காமல் ஏறிவிடுவதன் விளைவாக ஏற்படும் இன்னலையும் இழப்பையும் மாநில அரசு தாங்கித் தத்தளிக்க வேண்டிவருகிறது. விலைகளைக் குறைத்து நிலைமையைச் சரிப்படுத்தும் வலிமையை இந்திய அரசியல் சட்டம் மாநில அரசுகளுக்கு அளித்திடவில்லை.

எனவேதான் விலை ஏற்றம் காரணமாக, அரசு அலுவலர்க்கு ஊதிய உயர்வு தருவதால் ஏற்படும் அதிகச் செலவு, உணவுப் பண்டவிலை ஏற்றத்தால் தாக்கப்படும் மக்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள் வழங்குவதால் ஏற்படும் இழப்பு, ஆகிய வற்றில், மத்திய அரசு பங்கு ஏற்கவேண்டும் என்று நான் கேட்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தந்த மாநிலங்கள் தத்தமது மக்களுக்கு மலிவு விலையில் உணவுப் பொருள் தருவதால் ஏற்படும் பளுவையும், அரசு ஊழியரின் ஊதியத்தை உயர்த்துவதால் ஏற்படும் சுமையையும், தாமேதான் தாங்கிக் கொள்ளவேண்டும் என்று மத்திய அரசு கூறுவது கேட்டு, நான் வருந்துவதன் காரணத்தை விளக்கவே இதனைக் கூறினேன். இந்தப் பிரச்சினையில், மாநில,மத்திய சர்க்கார் தொடர்பு அமைந்துள்ள விதத்தை உணருபவர்கள், என்வாதத்தை ஏற்க மறுக்க மாட்டார்கள்—கட்சிக் கண்ணோட்டம் குறுக் கிட்டாலன்றி.

## மத்திய, மாநில அரசுகளுக்கிடையே பொருளதார தொடர்புகள்

மத்திய-மாநில அரசுகளிடையே உள்ள பொரு ளாதாரத் தொடர்புகளின் தன்மையை அறிந்து, நேர் செய்யவும், சீர் செய்யவும், ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை நிதிக்குழு அமைக்கப்படுகிறது ; அதன் மூலம் மாநில அரசுகளின் வருவாய் பங்குத் தொகை படிப்படியாக உயர்த்தப்படுகிறது என்றாலும், இந்தக் குழுவின் பிடிக்கு அப்பாற்பட்டதாக, திட்ட நிதி இருந்து வருவதால், மாநிலங்களின் நலிவு நிலைமை போக்கிட அந்தக் குழுவினால் முழுதும் முடிவதில்லை.

எனவே , நிதிக்குழு நிரந்தரமான அமைப்பு ஆக்கப்படவேண்டும் என்பதையும், அக்குழு ஆண்டுக் காண்டு, மத்திய-மாநில அரசுகளுக்கிடையே உள்ள பொருளாதாரத் தொடர்பு குறித்து ஆய்ந்து பார்த்து ஆவன செய்திட வேண்டும் என்பதையும் வலியுறுத்த விரும்புகிறேன். இந்திய அரசியல் சட்ட அடிப்படையில் நடத்தப்பட்டுவரும் அரசு மூலம் பெறப்பட்டுள்ள அனுபவங்களைக் கண்டறிந்து, மாநில அரசுகளின் வளர்ச்சிக்கு உகந்ததான முறையில், என்ன மாற்றங்கள் செய்யலாம் என்பதுபற்றி கருத்தறிவிக்க ஒரு “ஆய்வுக் குழு” அமைக்கப்பட வேண்டுமென்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இத்தகைய ஒரு குழு அமைத்திட, அரசியல் சட்டத்தின் 263-ம் பிரிவு இடமளிக்கிறது என்றும் நம்புகிறேன். மாநிலங்களுக்கு வளமான வருவாய்த்துறை கிடைப்பது,ஒரு ஒப்புக்கொள்ளப் பட்ட முறையின் அடிப்படையில் திட்ட நிதியை ஒதுக்கிக் கொடுத்து, அதனைச் செலவிடும் வகை பற்றிய உரிமையை மாநிலங்களுக்கு அளிப்பது ஆகியவை மூலம், மாநிலங்களின் பொருளாதார வலிவு செம்மைப் படுத்தப்பட்டாலொழிய பெருகிவரும் மக்களின் தேவைகளை நிறைவேற்றி, அவர்களுக்குப் புது வாழ்வு தேடித்தரும் பொறுப்பினை மாநில அரசுகள் செம்மை யான முறையிலே செய்திட இயலாது என்பதை இன்று பல மாநில அரசுத் தலைவர்கள் உணர்ந்து கொண்டுள்ளனர்.



திரு ராமச்சந்திரன்,
நிதித்துறை செயலாளர்.

அவர்களும், என்னைப் போலவே, மத்திய,மாநில அரசுகளுக்கிடையே உள்ள தொடர்புகள் பற்றிய மறு சிந்தனை தேவை என்று கூறுகின்றனர் என்பதனை இப் பேரவை அறியும். உள்ள உறவு, உள்ளத்துக்கு நிறை தருவதாக அமைய வேண்டும் என்ற நோக்கத்தை அனைவரும் வரவேற்பார்கள் என்பதில் ஐயமில்லை, இது வரை வரிப்பங்கீடு, அதிகார வரம்பு, திட்ட நிதி ஒதுக்கீடு ஆகியவற்றிலே கிடைத்துள்ள அனுபவம், கசப்பு நிரம்பியதாக இருப்பதை எவரும் மறுத்திட இயலாது ; இந்தக் கசப்பு நீங்கிடவும், கனிவு கிடைத்திடவுமான முறையில் தொடர்புகள் அமைந்திட வழி காண்பது உடனடிப் பிரச்சினையாகிவிட்டிருக்கிறது. இது குறித்து அச்சமோ, ஐயப்பாடோ அல்ல, தெளிவான சிந்தனையே தேவை. ஒருவருக்கொருவர் உள்ள நல்லெண்ணத் தினாலும், ஒருவரை யொருவர் நனகறிவதாலும் தோழமைத் தொடர்பு, மகிழ்ச்சியும் பயனும் மிக்கதாக ஆக்கப்பட வேண்டும் என்பதே எனது அவாவாகும்.

## பாராட்டு

நிர்வாகத்துறையில் புதிதாக ஈடுபட்டுள்ள எனக்கு, இந்த நிதி நிலை அறிக்கை தயாரிக்க, விளக்கம் நிறைந்த துணை புரிந்த, நிதித்துறைச் செயலாளர் திரு ராமச்சந்திரன் அவர்கட்கும் அவருடன் பணியாற்று பவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள் கிறேன். ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்பு தந்ததன் மூலம் அவர்கள் என் பொறுப்பின் பளுவினை மிக எளிதாக்கியுள்ளனர்.

# கூட்டுறவு

> சட்ட திட்டங்களின்றிச் சமுதாயம் இல்லை. சமுதாயம் இல்லையென்றால் சுதந்திரமில்லையென்று வாழ்க்கை நமக்குத் தெளிவாக உணர்த்தியுள்ளது. நாம் உலகைத் திட்டமிட்டு உருவாக்க வேண்டும். இந்தியா கூட்டுறவுப் பாதையைத் தேர்ந்தெடுத்து மக்களிடையே சமுதாயச் சட்டங்களைச் செய்வதாக இந்தியாவின் கூட்டுறவு இயக்க வரலாறு நிரூபிக்கிறது....

# தோற்றல்....

கூட்டுறவு இயக்கத்தைத் தோற்றுவித்த பெருமை திரு பிரடெரிக் நிக்கல்ஸனையே சாரும். அவரே நில அடமான பாங்குகள் தோற்றத்தின் வழி வகைகளை ஆராயும் பொழுது, கூட்டுறவுச் சங்கத்தினைத் தோற்றுவிக்கச் சிபார்சு செய்தார். அதனால், 1904-ல் கூட்டுறவுச் சங்கச் சட்டம் ஏற்பட்டது.

அவ்வியக்கம் நல்ல வேகத்துடன் பரவியது. அவ்வியக்கத்தை ஆராய்வதற்காக இந்திய அரசால் நியமிக்கப்பட்ட மாக்ளகன் கமிட்டி, அவ்வியக்கம் தன்னைப் பெருக்கிக் கொள்வதைக் காட்டிலும், ஒன்று சேரவேண்டிய தேவையையும் அச்சங்கங்களுக்குக் கடுமையான தணிக்கையின் அவசியத்தையும் வற்புறுத்தியது.

1919-ம் ஆண்டு இந்திய அரசு ஆணையின்படி அவ்வியக்கம் மாநிலம் முழுமையும் பரவியது. 1921-ம் ஆண்டு, மாகாணக் கூட்டுறவு பாங்குகள் பல மாகாணங்களிலும் தோன்றின. விவசாயத்திற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழு, 1925-ம் ஆண்டு கூட்டுறவு இயக்கம் எவ்வாறு விவசாயப் பொருட்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்று பல சிபாரிசுகளைச் செய்தது. "கூட்டுறவு முறை" தோல்வியடைந்தால், கிராமிய இந்தியா பற்றிய உயர்ந்த நம்பிக்கையும் தோற்றுவிடும் என்று அக்குழு ஆராய்ந்தறிந்தது.

ஆயினும், அனைத்தும் சீரான முறையில் இல்லை. 1937-38-ல், 63 சத வீதம் கடன்கள் திரும்பி அளிக்கப்படவில்லை. பல சங்கங்கள் மூடப்பட்டன. பல மாநில அரசுகள் அவ்வியக்கத்தை நிலை பெறச் செய்ய முயன்றன.

அடுத்து, கூட்டுறவு திட்டக் குழு 1945-ம் ஆண்டில் தோன்றியது. இந்தக் கூட்டுறவு இயக்கத்தின் அடுத்த நிலை, 50 சத வீதம் கிராமங்களையும், 30 சத வீதம் கிராம மக்களையும் 10 ஆண்டுகளில் திருத்திஅமைக்கப்பட்ட சங்கங்களுக்குட்படுத்த முயற்சி செய்ய வேண்டுமென்று கூட்டுறவு திட்டக் குழு சிபார்சு செய்தது. கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்திய ரிசர்வ் பாங்கு நிதி உதவி செய்ய வேண்டுமென்று அக்குழு வற்புறுத்தியது. 1947-ம் ஆண்டு, 91 லட்ச உறுப்பினர்களையும், 156 கோடி ரூபாய் நடைமுறைச் செலவு மூலதனத்தையும் உடைய 1,39,000 கூட்டுறவு சங்கங்கள் வேலை செய்து வந்தன.

### புதிய ஊக்கம்

கூட்டுறவு இயக்கம் பரவுவதற்குச் சுதந்திரம் புதிய ஊக்கம் அளித்தது. 1951-ம் ஆண்டு, இந்திய ரிசர்வ் பாங்கு, நாட்டின் கிராமக் கடன் நிலையை ஆராய்வதற்கு ஒரு குழுவை நியமித்தது. 1954-ம் ஆண்டு, அது அறிக்கை ஒன்று பின்வருவருமாறு வெளியிட்டது. "கூட்டுறவு தோற்றுவிட்டது. ஆனால் கூட்டுறவு வெற்றி பெற வேண்டும்". கூட்டுறவுச் சங்கங்கள், விவசாயிகள் கடனில் 3 சத வீதமே கொடுக்க முடிந்தது. அக்குழு கிராமக் கடனுக்காக ஒருங்கு இணைக்கப்பட்ட திட்டம் ஒன்றைச் சிபாரிசு செய்தது. அக்கமிட்டி சிபாரிசுகளின் விடா முயற்சியால், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா தோன்றியது. கூட்டுறவு நிலையங்களின் தேவைக்காக 400 கிளை பாங்குகள் தோன்றின.

மாநில அரசுகளுக்கு நீண்ட காலக் கடன் கிடைக்கும்படிச் செய்யவும், அந்நிதியைக் கூட்டுறவுக் கடன் நிலையங்களுக்குப் பங்கு மூலதனமாகக் கொடுக்கவும், 1956-ம் ஆண்டு தேசிய விவசாயக் கடன் நிதித் திட்டம் ஒன்று நிறுவப்பட்டது. மேலும் கூட்டுறவு பாங்குகளுக்கு மத்திய கால விவசாயக் கடன் அளிக்

கவும், மத்திய நில அடமான பாங்குகளுக்குக் கடன் ஈட்டுப் பத்திரம் வாங்கவும் வசதிகள் செய்யப்பட்டன.

விவசாய உற்பத்திச் சட்டத்தை அடுத்துத் தேசீயக் கூட்டுறவு வளர்ச்சி பண்டகசாலை போர்டு ஒன்று 1956-ம் ஆண்டு நிறுவப்பட்டது. கூட்டுறவு முறைச் செயல்களைப் பொதுவாகவும், பொருட்களைச் சேர்த்து வைத்தல், பதனிடுதல், விற்பனை செய்தல், ஆகியவற்றைச் சிறப்பாகவும் கவனிக்க இப்போர்டு நிறுவப்பட்டது.

### புதிய திருப்பம்

இந்தியாவில் திட்டங்கள் துவங்கியபோது கூட்டுறவு இயக்கம் ஒரு புதிய திருப்பத்தை அடைந்தது. பொருளாதாரம் எந்த அளவு கூட்டுறவு நிலையங்களால் நிறைவேற்றப்படுகிறதோ, அதைப் பொறுத்தே, இந்தியப் பொருளாதாரத்தின் வெற்றி என்று முதல் திட்டம் நிரூபித்துள்ளது. கிராமக் கடன் மேற்பார்வைக் கமிட்டியின் சிபாரிசுகளை நிறைவேற்றும் வண்ணம், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் போது, கூட்டுறவு வளர்ச்சியின் ஒருங்கு இணைக்கப்பட்ட திட்டம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. கூட்டுறவு முறையை வளர்ப்பதே தேசீயக் கொள்கையின் குறிக்கோளாக இருந்தது.

1958-ம் ஆண்டு நவம்பர் மாதம் கூட்டுறவு இயக்கம் வளர்ந்து, கிராம மக்களனைவரையும், மூன்றுவது திட்ட இறுதிக்குள் அவ்வியக்கத்தின் மேற்பார்வையில் கொண்டுவர வேண்டுமென்று தேசீய அபிவிருத்திக் குழு உறுதி செய்தது. கூட்டுறவு நிலையங்கள் கிராம சமுதாயத்தை முக்கிய குறிக்கோளாகக் கொள்ள வேண்டும் என்றும், கிராமத்தின் சமூக, பொருளாதார வளர்ச்சிக்குரிய பொறுப்பும், ஊக்கமும் கிராமக் கூட்டுறவுச் சங்கங்களுக்கும் கிராமப் பஞ்சாயத்துக்கும் உரியதாக வேண்டுமென்றும் அக்குழு கூறியது. கூட்டுறவு பற்றிய அதன் முடிவுகள் மூன்றுவது திட்டத்தில் குறிக்கோளாக ஏற்றுக்கொள்ளப்பட்டன.

முன்னூற்றுப் பதினெட்டு முன்னோடித் திட்டங்கள் உருவாகவும் வழி வகுத்தது மூன்றுவது திட்டம். அவை ஒவ்வொன்றும் 10 கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்களைப் பெற்றவை. அத்திட்டங்களெல்லாம் கூட்டுறவுப் பண்ணையில் பயன்களைச் செய்து காட்டுவதற்கேயாகும். 1963-ம் ஆண்டு மே மாத இறுதிக்குள் 964 கூட்டுறவுப் பண்ணைகள், ஏற்படுத்தப்பட்டன. அவற்றுள் சுமார் 20,000 உறுப்பினர்கள் இருந்தனர். அச்சங்கங்களுக்குட்பட்ட நிலப் பகுதி, 1,08,274 ஏக்கர்களாகும். முன்னோடித் திட்டங்களைத் தவிர, 1963-ம் ஆண்டு மே மாத இறுதி வரை 936 கூட்டுறவுப் பண்ணைச் சங்கங்கள் தோன்றின. அவற்றின் உறுப்பினர்கள் 19,363 பேர்கள். 1,21,363 ஏக்கர் நிலம் அவற்றுக்குட்பட்ட பகுதியாகும்.

தேசீய நெருக்கடி காலத்தில், மத்திய அரசு, நுகர்வோர் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவியது. பொருள்கள் சரிசமமாகப் பங்கிடப்படவும், குறைந்த விலையில் அனைவரும் பெறவும் இவை ஏற்படுத்தப்பட்டன.

கூட்டுறவு இயக்கத்தின் இலக்கு இன்னும் வெகு தொலைவில் இருக்கிறது. அதன் பயன்கள் அதிசயமானதாக இல்லாவிடினும், கணிசமானதாகவும், மனதுக்கு உகந்ததாகவும் உள்ளன. மக்களுக்காக, மக்களிடையே வாழ்ந்துவருபவருடைய அறிவு, விடாமுயற்சி, சக்திக்குட்பட்டதே அவ்வியக்கத்தின் எதிர்காலம். கூட்டுறவு தோல்வியுற்றால், நாம் அழிவை எதிர்பார்ப்பதைக் காட்டிலும் வேறு வழியில்லை. நம்முடைய கால், படுகுழிக்கு எவ்வளவு அருகில் இருக்கிறது என்று அது உணர்த்துவதோடு, அதற்கு ஒரு முடிவு காட்டும் பாதையாகவும் கூட்டுறவு இருக்கிறது.

### வழி காட்டும் விவசாயி

[35-ம் பக்கத் தொடர்ச்சி.]

வராயிருந்தனர். எனவே, இரு வேறு கருத்துக்களையும் கொண்டவர்கள் எது சரியானது என்றறிய 'சோனுரா-64'-ன் அறுவடை நாளை ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

### கண்முன் கண்டனர்

தாத்பூரிலும் அருகிலுள்ள கிராமங்களிலும் இருக்கும் விவசாயிகளில் சுமார் 50 பேர்கள் சோனுரா-64 அறுவடை செய்யப்படுவதைக் காணக் கூடினர். அங்குள்ள நடுநிலைமையாளர், விவசாயிகள் முன்னிலையில் 'சோனுரா-64' அறுவடை செய்யப்பட்டு தானியங்கள் அளிக்கப்பட்டன. ஒரு ஹெக்டேருக்கு 64 குவிண்டால்கள் விளைந்திருப்பதாக அறிவிக்கப்பட்டது.

கூடியிருந்த விவசாயிகள் அனைவரும் இது கண்டு வியப்புற்று அவரிடமிருந்து விதைகளைப் பெற்றுச் சென்றனர். அவர்களின் தேவை மேலும் அதிகமாகவே, சந்தன்ராம் தனக்காக வைத்திருந்த விதைகளையும் கூட அவர்களுக்குக் கொடுக்க வேண்டியதாயிற்று. இவ்வாறு, அவர் தன் கிராமத்திலும், அடுத்த கிராமங்களிலும் வாழும் விவசாயிகளுக்கும், 40 ஹெக்டர் நிலத்தில் 'சோனுரா-64' விதைகளைக் கொண்டு அவர்கள் பயிரிடுவதற்கு உதவி செய்தார்.

---

"பஞ்சாயத்து ராஜ்" முதலிய இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 11, 12, 34, 35, 38 முதல் 41 வரை (8 பக்கங்கள்).

Articles reproduced from "Panchayati Raj" etc., on pages 11, 12, 34, 35, 38 to 41 (8 pages).

## ஊராட்சி நிறுவனங்களுக்குக் 'கிராம நலம்' அளித்தல்—சந்தா செலுத்துதல்.

## 'Grama Nalam—Supply to Panchayat Institutions—Payment of subscription—Regarding.

தங்கள் அலுவல் வரம்பிலுள்ள ஊராட்சி நிறுவனங்களுக்கு, 'கிராம நலம்' இதழ்களை மொத்தமாக அளிக்க சந்தாத் தொகைகளைச் செலுத்தும் விஷயத்தில் பின்பற்றப்பட வேண்டிய நடை முறை விதிகள் அடங்கிய கிராம வளர்ச்சி நெறியாளரின் 28—3—1966 தேதியிட்ட குறிப்பாணை எண் 46643/M1/66 மற்றும் 21—3—1967 தேதியிட்ட குறிப்பாணை எண் 47953/L1/67 ஆகியவற்றிற்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

2. மொத்தமாக 'கிராம நலம்' இதழ்களைப் பெறுவதற்குரிய சந்தாத் தொகைகளை, முழுவதுமாகச் செலுத்துவதற்கும், 1967–68-ம் ஆண்டில், முடிந்து போன சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுமென்றும், அவ்வாறு செய்கையில், ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகள், சமூகக் கல்வி நிலையங்கள், மகளிர் நிலையங்கள், ஊராட்சிகள், மற்றும் இதர ஊராட்சி நிறுவனங்களுக்காகச் சந்தா செலுத்தப்பட்ட 'கிராம நலம்' பிரதிகளின் எண்ணிக்கையையும் விவரமாக, ஒரு பட்டியலில் எழுதி, அவற்றை இவ்வலுவலகத்திற்கு அனுப்பவேண்டும் என்றும், மேற் சொன்ன குறிப்பாணை 2-ல், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கேட்டுக்கொள்ளப் பட்டார்கள்.

3. 'கிராம நலம்' போன்ற அரசு வெளியீடுகளில் எத்தனை பிரதிகளையும் பெற்றுக்கொள்வதில், எந்த விதமான தடையும் இல்லை என்று, கிராம வளர்ச்சி நெறியாளரின் 3—6—1967 தேதியிட்ட குறிப்பாணை எண் 89515/L2/67-ல், ஆணையாளர்களுக்குக் கூறப்பட்டுள்ளது.

4. இதுவரை சந்தா செலுத்தாதிருந்த ஆணையாளர்களெல்லாம், தங்கள் அலுவல் வரம்பில் உள்ள பல்வேறு நிறுவனங்களுக்குத் தேவையான 'கிராம நலம்' இதழ்களுக்கு, ஓர் இதழ், ஓராண்டிற்கு ரூ. 2 வீதம், மேற்கண்ட பத்தி 2-ல் கூறியுள்ளபடி, சந்தா செலுத்துமாறு, ஆணையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தொகையைக் கருவூலத்தில் "LII Miscellaneeus-m. Miscellaneous" என்ற தலைப்பில் செலுத்தி, சான்றுக் கையொப்பமிட்ட 'செலானை' (Chalan), அதற்கு மேற்பட்ட நடவடிக்கைக்காக, இவ்வலுவலகத்திற்கு அனுப்பவேண்டும்.

(கிராம வளர்ச்சி நெறியாளர் அலுவலகத்தின் 14-6-1967 தேதியிட்ட குறிப்பாணை எண் 47953/எல்1/67-ன் சுருக்கம்.)

---

### இந்த இதழில்


| | பக்கம். |
|---|---|
| "நிதி நிலையைக் குலையச் செய்யாது முன்னேற்றம் காண்பதே நம் கருத்து" —முதலமைச்சர் | 2 |
| உள்ளாட்சி அமைச்சர் வழங்கிய கொள்கை விவர அறிக்கை .. .. .. | 6 |
| சோவியத் பத்திரிகையாளர்களுக்கு அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் அளித்த வரவேற்பு .. .. .. | 19 |
| காந்தியடிகளின் நூற்றாண்டு விழா .. | 31 |


### அடுத்த இதழில்...

- 'தீவிபத்தால் வாடும் மக்களுக்கு உற்ற உறவினராய் உதவுவோம்'—மாண்புமிகு அமைச்சர் திருமதி சத்தியவாணி முத்து அவர்களின் வானொலிப் பேச்சு. (படங்களுடன்)
- உலகத் தமிழ் விழா—சிலப்பதிகாரக் காட்சிகள்.
- திருச்சியில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் மாநாடு
- 1·44 லட்சம் பள்ளிப் பிள்ளைகளுக்கு இலவசப் பாடப் புத்தகங்கள்.

---


தீ விபத்து, துயர் துடைப்பு, சீரமைப்பு நிதிக்கு 31—7—1967 வரை மக்கள் அளித்துள்ள தொகை ரூ. 11,18,645·15.

---


வெளியிடுபவர்: திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.


ஆசிரியர்: திரு எல். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9.




சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் தமிழக அரசின் நிலையான கவர்னராக 16-6-67ல். ராஜாஜி மண்டபத்தில் பதவி ஏற்றார்.

அணிவகுப்பு மரியாதை




அரசாங்கம்
© 1967
REGD. NO. M. 7277
வீரிய வித்துக்களால், அமோக விளைவு!
"நமது மாநிலத்தில், 13.5 லட்சம் ஏக்கர் நிலங்களில் ADT-27 நெல் ரகத்தைப் பயிரிடுவதோடு, CO-25, CO-29 நெல் ரகங்கள், கலப்பினச் சோளம் CSH-1, கலப்பினக் கம்பு HB-1, போன்ற புதிய ரகங்கள், அதிக நிலப் பரப்பில் பயிரிடப்படும்.'....
—முதலமைச்சர் அறிவிப்பு